விலை : 20.00
பக்கங்கள் : இருபது

விசேட பிரதி

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆனி 21 வெள்ளிக்கிழமை (05.07.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 198

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ராம்கோ சீமெந்தைப் பயன்படுத்துங்கள்; உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்.

# பிரபாகரனை பாதுகாக்கவே திணிக்கப்பட்டது 13!

## அர்த்தம் கற்பிக்கிறார் விஜிதமுனி

(கொழும்பு)

வடமராட்சியில் சிக்கியிருந்த பிரபாகரனை பாதுகாப்பதற்காகவே ராஜீவ் காந்தி பலாத்காரமாக எம்மீது 13ஆவது திருத்தத்தை திணித்தாரே தவிர அதற்கு வேறெந்தக் காரணமும் கிடையாதென 13 இற்கு புதிய அர்த்தம் கற்பிக்கின்றார் 1987 இல் ராஜீவ்காந்தி மீது தாக்குதல் நடத்திய முன்னாள் கடற்படை வீரர் ரோஹண விஜிதமுனி.

சிங்கள பௌத்தர்களின் வாக்குகளினாலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதவி வகிக்கின்றார். எனவே அதற்கு எதிராக செயற்பட முடியாதென்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற தேசிய ஒருங் கிணைப்பு ஒன்றியத்தின் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே ரோஹன விஜிதமுனி இதனைத் தெரிவித்தார்.

1987 ஆம் ஆண்டில் இந்திய - இலங்கை ஒப்பந்தம் அன்றைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி மற்றும் ஜே.ஆர்.ஜயவர்த்தனவுக் கிடையே கைச்சாத்திடப்பட்ட பின்னர் ராஜீவுக்காக இடம்பெற்ற கடற்படை (19ஆம் பக்கம் பார்க்க)

## அமெ. அதிகாரிகளுடன் ஐ.தே.க. செயலர் பேச்சு

(கொழும்பு)

அமெரிக்கத் தூதரக அதிகாரிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

13-ம் திருத்தச் சட்டம் தொடர்பில் இந்தப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவிற்கும், அமெரிக்கத் தூதரக அதிகாரி மைக்கல் ஹோனிஸ்டியனிற்கும் இடையில் கொழும்பில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

13-ம் திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

13-ம் திருத்தச் சட்டம் நாட்டை பிளவுபடுத்தும் நோக்கில் உருவாக் கப்படவில்லை எனவும் அக் கட்சி தெரிவித்துள்ளது. (எ-11)

## யாழ்ப்பாணத்தில் சரத் பொன்சேகா

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடவுள்ள ஜனநாயக தேசிய கட்சியின் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுக்கும் நோக்குடன் இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதியும் ஜனநாயக தேசிய கட்சியின் தலைவருமான சரத் பொன்சேகா நேற்று இரவு 7.30 மணியளவில் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்துள்ள சரத் பொன்சேகா உள்ளிட்ட சுமார் 60 இற்கும் மேற்பட்ட ஜனநாயக தேசிய கட்சியின் உறுப்பினர்கள் யாழ். பரமேஸ்வரா வீதியிலுள்ள மிலேனியம் ஹோட்டலில் நேற்று இரவு தங்கியிருந்ததோடு இன்று முற்பகல் 10 மணியளவில் சிவில் சமூகப்பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளதோடு நண்பகல் 12 மணியளவில் நல்லூர் கந்தசுவாமிகோவிலுக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபடவுள்ளனர். (எ-6)

## இந். உயர்ஸ்தானிகருடன் சம்பந்தன் பேச்சு

(கொழும்பு)

இலங்கைக்கான புதிய இந்திய உயர்ஸ்தானிகர் வை.கே.சிங்ஹாவை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இந்த சந்திப்பின்போது 13-வது திருத்தச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள இலங்கை அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகள் குறித்தும், அதனை தடுத்து நிறுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இந்திய உயர்ஸ்தானிகரிடம் விளக்கி (19ஆம் பக்கம் பார்க்க)

## ஒருங்கிணைப்புக் குழுவை நியமிக்க தமிழ்க் கூட்டமைப்பு இணக்கம்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் விசேட கூட்டம், கொழும்பில் கட்சியின் தலைமைச் செயலகத்தில் நேற்று மாலை 5.15 மணியிலிருந்து இரவு 7.30 வரை நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஜனநாயக ரீதியாக ஒரு சக்திமிக்க ஸ்தாபனமாக பலப்படுத்துவதற்கான வாதப் பிரதிவாதங்களே கூட்டத்தில் அதிகளவில் இடம்பெற்றதோடு, வட மாகாண சபை தேர்தல் தொடர்பாக கருத்துப் பரிமாறல்களும் இடம்பெற்றுள்ளன.

கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளுக்கிடையில் நீண்ட காலமாக நடைபெற்றுவந்த பேச்சுவார்த்தைகளின் பெறுபேறாக நேற்றைய கூட்டத்தில் ஐந்து கட்சிகளையும் உள்ளடக்கி ஒவ்வொரு கட்சியிலி (20ஆம் பக்கம் பார்க்க)

## இரு இளைஞர் கடத்தல் நால்வர் கைதாகினர்

### முல்லைத்தீவில் சம்பவம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவைச் சேர்ந்த இளைஞர்கள் இருவரை பலியெடுப்பதற்காக மத்துகம பெலவத்த என்னுமிடத்திற்கு அழைத்துக் கொண்டு சென்றபோது அவ்விருவரையும் மீட்டுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார் சந்தேகத்தின் பேரில் நால்வரைக் கைது செய்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

மீஹாதென்ன பொலிஸாரே இந்த நால்வரையும் கைது செய்துள்ளனர். அவர்கள் இருவரும் இரண்டு தினங்களுக்கு முன்பாகவே பணயக்கைதிகளாக களுத்துறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியாவுக்கு சட்ட விரோதமாக அனுப்பி வைக்கப் பட்டவர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய 16 இலட்சம் ரூபாய் கிடைக்கும் வரையில் அந்த இளைஞர்கள் இருவரும் களுத்துறை பயாகல பிரதேசத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

16 இலட்சம் ரூபாவை பெற்றுக் கொடுக்காவிடின் அவ்விருவரையும் (19ஆம் பக்கம் பார்க்க)

# மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரம் பிரிவினைவாதத்தை ஏற்படுத்தும்

## மீண்டும் எச்சரித்துள்ளார் பாதுகாப்புச் செயலர்

(கொழும்பு)

மாகாணங்களுக்குப் பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டால் நாட்டில் பிரிவினைவாதத்தை தோற்றுவிப்பதுடன் ஆபத்தான நிலைக்கும் இட்டுச் செல்லும் என பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

13-வது அரசியல் அமைப்புத் திருத்தத்திற்கு அமைய மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட்டால் பல விளைவுகளை எதிர்நோக்க நேரிடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

13-வது அரசியல் அமைப்புத் திருத்தத்திற்கு அமைய மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட்டால் முதலமைச்சர்களினால் நிர்வகிக்கப்படும் மாகாணங்களிலும் 9 பொலிஸ் திணைகளங்கள் உருவாகும்.

இந்த பொலிஸ் நிலையங்களின் நேரடியான நிர்வாகம் பொலிஸ் மா அதிபரிடம் இருந்து மாகாண முதலமைச்சரின் கை களுக்குள் செல்லும். முதலமைச்சரின் கீழ் பிரதி பொலிஸ்மா அதிபர் ஒருவர் மாகாண பொலிஸை நிர்வகிப்பார்.

அத்துடன் நாட்டில் பொலிஸ் துறைக்கு ஆட்சேர்ப்பு மாகாணத்திற்குள்ளேயே மேற்கொள்ளலாம் என்ற அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில் இன ரீதியான பொலிஸ் நிலையங்கள் உருவாக வழியமைக்கும்.

எனினும் இந்த மேற்கூறப்பட்ட நிலைமைகள் நாட்டில் பிரிவினைவாதத்தை தோற்றுவிக்கும்.

அதேவேளை மாகாண சபையின் பொலிசுக்கு பொறுப்பாக இருக்கும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஒருவர், கொலை போன்ற குற்றச்



செயல்களில் ஈடுபட்டால், அவரிடம் விசாரணை நடத்துவதற்குக் கூட மாகாண முதலமைச்சரிடம்தான் அனுமதி பெற வேண்டும்.

அத்துடன் அவருடைய குற்றங்கள் குறித்து விசாரணை நடத்துவதா? இல்லையா? என்பது குறித்துப் (19ஆம் பக்கம் பார்க்க)

## மக்களின் பணத்தை வைத்து கனவை நனவாக்கிறது அரசு

### கரு ஜெயசூரிய குற்றச்சாட்டு

(கொழும்பு)

கனவு காண்பதற்கு ஆட்சியாளர்களுக்கு உரிமை இருந்த போதும், மக்களின் பணத்தை செலவிட்டு அந்த கனவை நனவாக்கி கொள்ளவதை அனுமதிக்க முடியாது என ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கரு ஜயசூரிய பேசும் போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறுகையில், பயங்கரவாதம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் அமைதி ஏற்பட்டு தமது வாழ்க்கை நிலைமை உயரும் என மக்கள் எதிர்பார்த்திருந்தனர்.

எனினும் மிகப்பெரும் தொகை பணம், எந்த ஆய்வுகளும் மேற்கொள்ளப்படாமல் பலம் தராத திட்டங்களுக்காக வீண் விரயமாக்கப்பட்டது.

அம்பாந்தோட்டை துறைமுகம், மத்தல விமான நிலையம் போன்ற மிகப் பெரிய முதலீட்டு திட்டங்களால் மக்களின் பணம் வீண்விரயமாகியுள்ளது.

வீண் விரயமும், ஊழலும் அதிகரித்துள்ளதுடன் அரசாங்க துறையின் (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ராஜீவ் கொலை வழக்கு விசாரணையில் தீர்ப்பு இல்லை

## ஓய்வுபெற்ற சி.பி.ஜ அதிகாரி வழக்கு

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கு விசாரணை முழுமையான முறையில் நடத்தப்படவில்லை என மீண்டும் புகார் எழுந்துள்ளது. இந்த வழக்கு தொடர்பாக இன்னும் பலரிடம் விசாரணை நடத்தப்பட வேண்டும் என ஓய்வுபெற்ற சி.பி.ஜ பொலிஸ் அதிகாரி வழக்கு தொடர்ந்துள்ளார்.

பார்க்க சாதாரண ஆள் போல இருந்தாலும் பொலிஸ் ஆய்வாளராக இவர் கடந்த வந்த பாதைகள் கரடுமுரடானது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கு விசாரணை குழுவில் இடம் பெற்றிருந்த மோகன்ராஜ் சுமார் 15 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் அந்த வழக்கில் தம்மை தொடர்புபடுத்திக் கொண்டுள்ளார்.

கடந்த 1998 ஆண்டு சி.பி.ஜ யிலிருந்து விருப்ப ஓய்வு பெற்ற மோகன்ராஜ் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் இன்னும் பலரிடம் விசா ரணை நடத்தக் கோரி சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

இந்த வழக்கில் மத்திய அரசு 15 நாட்களுக்குள் பதில் அளிக்க வேண்டும் என உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ராஜீவ் காந்தி படுகொலை வழக்கு தொடர்பாக சந்திராசாமி விடுதலைப் புலிகள் அமைப்பின் சர்வதேச தொடர்புகளை கவனித்தவர் என்று கருதப்பட்ட குமரன் பத்மநாதன் உள்ளிட்டோரிடம் விசாரணை நடத்துவதற்காக அமைக்கப்பட்ட பல்நோக்கு கண்காணிப்பு குழுவின் செயல்பாடுகள் திருப்திகரமாக இல்லை என்கிறார் மோகன்ராஜ்.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் மலேசியாவில் கைது செய்யப்பட்ட குமரன் பத்மநாதன் இலங்கை அரசின் பாதுகாப்புடன் தற்போது கொழும்பில் வசித்து வருகிறார்.

குமரன் பத்மநாதனை விசாரிக்க வேண்டும் என்ற கோரிக்கை ராஜீவ் காந்தி வழக்கில் மட்டுமல்ல இரு நாட்டு உறவுகளுக்குள்ளும் சலசலப்பை ஏற்படுத்த வாய்ப்பிருக்கிறது என்கிறார்கள் சர்வதேச வல்லுனர்கள். (எ-11)

# ஆட்டோவில் கறுப்புக்கொடி அச்சுறுத்தியது இராணுவம்

ஆட்டோ ஓட்டுநரின் மரணத்திற்கு கறுப்புக் கொடி கட்டி துக்கம் அனுஷ்டித்த ஆட்டோ சாரதிகளினை இராணுவத்தினர் அச்சுறுத்தியுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கரும்புலிகளின் நினைவு நாள் இன்று வெள்ளிக்கிழமையாகும்.

இந்த நிலையிலேயே மேற்படி கறுப்புக் கொடி சம்பவத்திற்கு இராணுவத்தினர் அச்சுறுத்தியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வல்வெட்டித்துறையினைச் சேர்ந்த செல்லப்பா அருமைரத்தினம் (வயது 47)என்ற ஆட்டோ ஓட்டுநர் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

இவ் ஆட்டோ நடத்துநர் உயிரிழந்தமைக்கு துக்கம் அனுஷ்டிக்கும் முகமாக வல்வெட்டித்துறையினைச் சேர்ந்த ஆட்டோச் சாரதிகள் வல்வெட்டித்துறைச் சந்தியில் நேற்றுக் காலை முதல் தமது ஆட்டோக்களில் கறுப்புக் கொடியினை கட்டி உயிரிழந்த தமது சக ஆட்டோ சாரதியான அருமைரத்தினத்திற்கு அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

எனினும் வல்வெட்டித்துறை சந்திக்கு நேற்றுக் காலை 10.00 மணியளவில் சென்ற இராணுவத்தினர் கறுப்புக் கொடி கட்டியிருந்த ஆட்டோக்களின் உரிமையாளர்களினை எச்சரித்து சென்றுள்ளனர். (எ-4,24)

# உயர் தொழில்நுட்ப நிறுவன பட்டதாரிகளுடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட உயர்தொழில்நுட்பவியல் நிறுவன பட்டதாரிகளுடனான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10 மணிக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ்ப்பாண அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

அரச நியமனம் தொடர்பாக அமைச்சருடன் கலந்துரையாடவுள்ளதால் அனைத்து உயர்தேசிய கணக்கியல், வர்த்தக மற்றும் முகாமைத்துவப் பட்டதாரிகளை தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட உயர் தேசிய கணக்கியல் வர்த்தக, முகாமைத்துவ பட்டதாரிகள் சங்கத் தலைவர் ஆ.தர்சீகரன் அறிவித்துள்ளார். (எ)

# அனுமதி அட்டை பரிசீலித்தல்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் இம் முறை தோற்றவுள்ள மாணவர்களுக்கான அனுமதி அட்டைகளை மீள் பரிசீலனை செய்வதற்காக மாணவர்களை எதிர்வரும் 8-ம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு பாடசாலைக்கு சமூகமளிக்குமாறு யாழ்.மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே எழில்வேந்தன் அறிவித்துள்ளார்.

இதன் போது மாணவர்கள் பாடசாலை சீருடையுடன் வருகைதருவதோடு தேசிய அடையாள அட்டையையும் உடன் எடுத்து வருமாறு அதிபர் குறிப்பிட்டுள்ளார். (அ-5)

# விளக்கம் கேட்கும் இலங்கை

இலங்கைக்கு வரும் பிரித்தானிய பிரஜைகள் தொடர்பில், பிரித்தானிய வெளியுறவு செயலகம் வெளியிட்ட அறிவுறுத்தல் தொடர்பில இலங்கை விளக்கம் கோரியுள்ளது.

இதுபற்றிய விளக்கம் கோரிய கடிதம் இலங்கையில் உளள பிரித்தானிய உயர்ஸ்தானிகரத்துக்கு நேற்று அனுப்பிவைகக்பட்டுள்ளதாக இலங்கை வெளி விவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

இலங்கைக்கு வரும் பிரித்தானிய பிரஜைகள், நாட்டில்இடம்பெறும் வன்முறைகள், ஆட்கடத்தல்கள், பெண்கள் மீதான வன்முறைகள்போனறவை தொடர்பில் கவனமாக செயற்பட வேண்டும் என்று பிரித்தானிய அறிவுறுத்தலில் கோரப்பட்டிருந்தது.

இது தொடர்பில் தாம் பிரித்தானிய உயர்ஸ்தானிகரகத்திடம் விளக்கம் கோரியுள்ளதாகவும், பதில் கிடைத்ததும் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இலங்கை வெளியுறவு அமைச்சுகுறிப்பிட்டுள்ளது. (எ-11)




பாராட்டி வாழ்த்துகின்றோம்

01-06-2013 அன்று எங்களுக்கு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனம் பெற்றுத்தந்த யாழ் மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் மதிப்புக்குரிய

**திரு. அங்கஜன் இராமநாதன்** அவர்களுக்கும் மற்றும் இணைப்பாளர் **உதயசீலன்** அவர்களுக்கும்

எமது மனமுவந்த நன்றியினைத் தெரிவிப்பதோடு சகல சௌபாக்கியங்களோடு நீடூழி வாழ்ந்து மக்களுக்கு சேவையாற்ற வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



வாழ்த்துவோர்
புதிதாக நியமனம் பெற்ற சமுர்த்தி உத்தியோகத்தர்கள்.
(போல் அமலதாஸன், அன்ரன் யூட்சன், K. கல்யாணி, ஜொய்சி, அனுஜியன்) யாழ்ப்பாணம்.

(3182)



**பாலா** சினிமா சாவகச்சேரி

06.07.2013 முதல்

காட்சிகள்
10.30
2.30
6.30




(C-3867)



மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி

**பரிசளிப்பு விழா - 2013**

மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழா நிகழும் 05-07-2013 மாலை 3.00 மணிக்கு எமது கல்லூரியில், கல்லூரி அதிபரின் தலைமையில் இடம்பெறவுள்ளது. இதில் முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. நா. வேதநாயகம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். பெருமைமிக்க எமது கல்லூரியின் விழா இனிது சிறப்புற வாழ்த்துகின்றோம்.

பல்கலைக்கழக மாணவர் சமூகம் - 2013
மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி.

(3184)



**பிள்ளையார் இன்**

12 மணி முதல் 3 மணிவரை மிகச் சிறந்த சைவ அசைவ உணவு வகைகள் வழங்கப்படுகின்றன.
சனி, ஞாயிறு தினங்களில் புஃவே (Buffet) முறையில் இந்திய சமையற்கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் வழங்கப்படும்.

சைவ உணவு: 150/- அசைவ உணவு 175/-

தொடர்புகளுக்கு: இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

(C-3869)



உள்நாடு வெளிநாடுகளுக்கான துரிததபால்கள் பொதிகள் DHL சேவை

**விரைவு! பாதுகாப்பு! நம்பகத்தன்மை!**

11 kg இக்கு மேற்பட்ட பொதிகளுக்கும் மிக குறைந்த கட்டணம் அறவிடப்படும்.
தற்பொழுது இலங்கையில் எங்கும் இல்லாதவாறு மிகக் குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்புப் பொருட்கள், புடைவைகள் CD, VCDகள் என்பன மிக விரைவாக அனுப்பிவைக்கப்படும்.

உங்கள் இல்லங்களில் இருந்தவண்ணமே சகல நாடுகளுக்குமான பொதிகள் பெறுப்பேற்கப்பட்டு குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும். (Pickup Service) உங்கள் உறவுகளின் 3-5 வேலை நாட்களில் ஒப்படைக்கப்படும்.



**திருமுருகன் கொம் நெற்**

இல. 203A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். - 021 222 7835
(பழைய கடைக்கு முன்பாகவும் ஆல் சிலோனிற்கு அருகாமையில் அமைந்துள்ளது.)
இல.18, பிரதான வீதி, நெல்லியடி. இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி

TCN Express இல. 2B, நெல்சன் பிளேஸ், கொழும்பு- 6

(C-3887)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## ஆசையும் துன்பமும்

ஒரு சமயம் சோளக் கொல்லையில் ஒருவன் காவல் காத்துக் கொண்டிருந்தான். பொதுவாக சோளக் கொல்லையில் ஒரு பொம்மையைக் காவலுக்கு வைப்பது வழக்கம்.

"பொம்மை எதற்கு? நாம் அங்கே இருந்து கொள்வோமே!" என்று அவன் நினைத்தான் போலிருக்கிறது! காவலுக்கு போனவன் கவனமாக இருந்து காவல் காக்க வேண்டுமல்லவா? ஆனால் அவன் அப்படிச் செய்யவில்லை. பொம்மை மாதிரியே இருந்து விட்டான். தூக்கம் வந்து விட்டது தூங்கி விட்டான்.

அந்த நேரம் பார்த்து அந்தக் கொல்லையை மேய்வதற்கு ஒரு நந்தி வந்தது. எங்கிருந்து வந்தது? கைலாயத்திலிருந்து வந்தது! சிவபெருமானிடம் இருக்கும் அல்லவா, அந்த! நந்தி! அது தன் விருப்பம் போல் சோளக் கொல்லையை மேய ஆரம்பித்தது.

இவன் திடீரென விழித்துக் கொண்டான். நந்தியை பார்த்தான். விரட்டிப் பிடிப்பதற்காக அதன் அருகில் ஓடினான். அதற்குள் விருட்டென்று போய்விட்டது நந்தி.

"ஆகா, ஏமாந்து போய் விட்டோமே! அது மறுபடியும் இங்கே வரும் தானே! அப்போது பார்த்துக் கொள்ளலாம்'' என்று நினைத்தான்.

மறுநாள் தூங்குவது போல் பாவனை செய்து கொண்டிருந்தான். அப்போது அவன் எதிர்பார்த்தது போலவே அந்த நந்தி வந்தது. இவன் மெதுவாக அதன் அருகில் சென்றான்.

இவன் அருகில் சென்ற சமயத்தில் அது இவனைப் பார்த்து விட்டது. விட்டென்று மேலே கிளம்பியது.

இவன் ஒரு தாவாகப் தாவி அதன் வாலை அப்படியே பிடித்துக் கொண்டான். அது பறந்து போகவும் இவன் அதன் வாலைப் பிடித்தபடி தொங்கிக் கொண்டே போகிறான். நேராக நந்தியுடன் கைலாயம் போய்ச் சேர்ந்தான்.

அங்கு பார்வதி பரமேஸ்வரரைப் பார்த்து "உங்களுடைய நந்தி என் சோளக் கொல்லையை அழித்து எனக்குப் பெரிய நஷ்டத்தை ஏற்படுத்தி விட்டது. இது நியாயமா?'' என்று வினவினான்.

அதற்கு நஷ்ட ஈடாக ஒரு பை நிறைய தங்கக் கட்டிகளைப் போட்டு அவனிடம் அவர்கள் கொடுத்தார்கள். அவன் அதை வாங்கிக் கொண்டான். பின் அந்த நந்தியே அவனைப் பூலோகத்திற்கு கொண்டு வந்து சேர்த்தது.

இவன் வீடு வந்து சேர்ந்தான். பேசாமல் சந்தோஷமாக வாழ வேண்டியது தானே! அதை விட்டு விட்டான். "அவ்வளவு தாராளமாகத் தங்கக் கட்டிகளை கொடுத்தார்களே அவை உண்மையிலேயே தங்கக்கட்டிகள்தானா... இல்லை வேறு ஏதாவதா?" என்ற சந்தேகம் அவனுக்கு வந்து விட்டது.

இவன் மனிதன் தானே... இயல்பாக வரக்கூடிய சந்தேகம் தான். ஒரு தங்கக் கட்டியை எடுத்துக் கொண்டு அதைப் பற்றிய விபரம் தெரிந்த தன் நண்பன் ஒருவனிடம் சென்றான். " இது என்ன நிஜமான தங்கம் தானா, பார்த்துச் சொல்!" என்றான்.

நண்பன் தங்கத்தை சோதித்துப் பார்த்தான். அது நிஜமான தங்கம் என்பதை புரிந்து கொண்டான். இருந்தாலும் அந்த உண்மையை இவனிடம் சொல்லவில்லை.

" இது தங்கம் இல்லை... பித்தளை ... இப்படி உன்னை ஏமாற்றியது யார்?" என்று மிகவும் தந்திரமாக கேட்டான். இவன் அப்பாவித்தனமாக எல்லாவற்றையும் விபரமாக கூறினான். பின் "சரி வருகிறேன்" என்று நண்பனிடம் விடை பெற்று வீடு திரும்பினான்.

மறுபடியும் கடவுளிடம் சென்று "இது நியாயமா?'' என்று கேட்க முடிவு செய்தான். அன்றிரவும் நந்தி வழக்கம் போல் அவனது வயலில் மேய்வதற்காக வந்தது. இவன் ஓடிச்சென்று அதன் வாலைப்பிடித்துக்கொண்டான். நந்தி பறக்க ஆரம்பித்தது. அப்போது அவனது காலில் கப்பென ஏதோ பிடிப்பது போல தெரிந்தது. தொங்கியபடியே கீழே குனிந்து பார்த்தான்.

பார்த்தால்... அவனது நண்பன் இவன் காலைப் பிடித்துக்கொண்டு தொங்கியபடி வந்துகொண்டிருந்தான். அவனுக்கும் தங்கக்கட்டியை பெறவேண்டுமென்று ஆசை. நடுவானில் நந்தி போய்க்கொண்டிருந்தது. அப்போது வாலைப் பிடித்திருந்தவனை பார்த்து " அது சரி... உனக்கு எவ்வளவு தங்கம் கொடுத்தார்கள்? என்று கேட்டான் அதற்கு வாலைப் பிடித்திருந்தவன் "இதோ இவ்வளவு இருக்கும்! என்று இரு கைகளையும் விரித்துக்காட்டினான். அவ்வளவுதான் இரண்டு பேரும் பொத்தென்று பூமியில் வந்து விழுந்தார்கள்! நந்தி மேலே பறந்து போய் விட்டது.

இந்தக் கற்பனைக் கதையிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய நீதி இதுதான்.

வாலைப்பிடித்தவன்... உண்மையைச் சந்தேகப்பட்டான். காலைப்பிடித்தவன்.... பேராசைப்பட்டான்.

உண்மையைச் சந்தேகப்படுபவர்களுக்கும் பேராசைப்படுபவர்களுக்கும் இதுபோன்ற கதிதான் ஏற்படும் என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# வன்புணர்வுக்கு உட்படுத்தினார் என குற்றஞ்சாட்டப்பட்ட நபர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

பெறாமகளை பாலியல் வன் புணர்விற்குட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைதான குடும்பஸ்தரை யாழ். மேல் நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

கடந்த 2008 ஆம் ஆண்டு ஒக்டோபர் 28 ஆம் திகதி கோண்டாவில் பகுதியிலுள்ள சிறுமியொருவரை அச்சிறுமியின் பெரிய தந்தை வன்புணர்வுக்குட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கோப்பாய் பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட குடும்பஸ்தர் யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு பின்னர் சட்டமா அதிபரின் அறிவித்தலின் படி யாழ். மேல் நீதிமன்றுக்கு வழக்கு பாரப்படுத்தப்பட்டது.

வழக்கு விசாரணைகள் கடந்த 4 வருடங்களாக இடம்பெற்று வந்த நிலையில் குறித்த வழக்கு நேற்றைய தினம் தீர்ப்பு வழங்கும் நோக்கில் யாழ். மேல் நீதிமன்ற ஆணையாளர் எஸ்.பரமராஜா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது வழக்கை விசாரணை செய்த ஆணையாளர் குறித்த வழக்கில் முறைப்பாட்டுக்காரரின் சாட்சியம் ஒன்றுக்கொன்று முரணாக காணப்படுவதோடு நம்பகத் தன்மை அற்றதாகவும் உள்ளது.

இவ் வழக்கில் எதிரிக்கு எதிராக கொண்டு வரப்பட்ட குற்றச்சாட்டை நிரூபிக்க முடியாமையாலும் எதிரியை தண்டிக்கப்படக் கூடிய குற்றவாளியாக இனங்காண முடியாமையாலும் மன்று அவரை நிரபராதி என கண்டு விடுதலை செய்கின்றது என யாழ். மேல் நீதிமன்ற ஆணையாளர் தீர்ப்பளித்தார். (அ-4)

# சு.சேவைகள் பணிப்பாளருக்கு டெங்குநோய் தாக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனுக்கு டெங்குநோய்த் தாக்கம் ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

நாடளாவிய ரீதியில் நுளம்புக்கட்டுப்பாட்டு வாரம் கடந்த முதலாம் திகதி தொடக்கம் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில் யாழ்.மாவட்டத்திலும் டெங்குநோயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் தீவிர நடவடிக்கையில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையும் ஈடுபட்டுவரும் நிலையில் கடந்த மூன்று தினங்களாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டெங்கு நோய்த் தாக்கத்திற்குள்ளான நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின் நேற்று வீடு திரும்பியுள்ளார்.

இது தொடர்பில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டு கேட்டபோது டெங்கு நோய்க்கான அறிகுறிகள் உள்ளதாக வைத்தியர்கள் தனக்குத் தெரிவித்ததாக பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 100-170 | 100 | 80 |
| பச்சைமிளகாய் | 80 | 120 | 120 |
| தக்காளி | 120 | 140 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 40 |
| கோவா | 140 | 120 | 120 |
| கரட் | 100 | 140 | 160 |
| பூசணி | 40 | 40 | 50 |
| புடோல் | 60 | 60 | 50 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 140 | 140-180 | 130-200 |
| பெரிய வெங்காயம் | 70 | 100 | 90 |
| பாகற்காய் | 60 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 60 |
| கருணைக் கிழங்கு | 100 | -- | 100 |
| பயற்றங்காய் | 40 | 50 | 60 |
| லீக்ஸ் | 120 | 160 | 140 |
| பீற்றூட் | 60 | 100 | 100 |
| கறிமிளகாய் | 100 | 100 | 140 |
| முருங்கைக்காய் | 150 | 360 | 140 |
| போஞ்சி | 100 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 30 | 30 | -- |
| கீரை - 1 பிடி | 10 | 30 | 20 |
| தேசிக்காய் | 80 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 35 | 30-40 |
| இராசவள்ளி | 80 | 120 | 120 |

# இராசி பலன்

*05.07.2013*
*(ஆனி 21, வெள்ளிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு*
*துவாதசி காலை 7.20 மணிவரை*
*ரோகிணி பின்னிரவு 3.53 மணிவரை*
*இராகுகாலம் 10.27-11.57 மணிவரை*
*சுபநேரம் 5.57-7.27 மணிவரை*
*பிரதோச விரதம்*

**மேடம்** குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழும் வாய்ப்புண்டு, தொழில் முன்னேற்றமுண்டு, துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**இடபம்** பல நாட்களாக பார்க்காமல் இருந்த உறவினர் ஒருவரை திடீரென சந்திக்கலாம், திட்டமிட்ட காரியமொன்றில் சில திருப்பங்கள் ஏற்படலாம், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**மிதுனம்** மனக்கிலேசங்கள் ஏற்படும் நிலையுண்டு, குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, புதிய நட்பால் பொருள் விரயங்கள் ஏற்படலாம்.

**கடகம்** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், முன்னேற்றத்திற்கு வழிகாட்டியவர்களை சந்தித்து மகிழ்வீர்கள், காரிய அனுகூலமுண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சிகூடும்.

**சிங்கம்** அறிஞர்கள் சந்திப்புண்டு, இஷ்ட சித்தியுண்டு, இறை வழிபாட்டில் இன்பம் காண வேண்டிய நாள், போசன நன்மையுண்டு, வருமானம் திருப்தி தரும், ஆரோக்கியமான நாள்.

**கன்னி** பயணங்களால் பலனுண்டு, புதிய திருப்பங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், தொழிலில் இருந்த எதிர்ப்புகள் விலகும்.

**துலாம்** துயரங்கள் தீர அம்பிகையை வழிபட வேண்டிய நாள், விட்டுக் கொடுத்து செல்வதனால் அமைதி காண்பீர் கள், போசன சுகமுண்டு, பயணங்களின் போது விழிப்புணர்ச்சி தேவை.

**விருச்சிகம்** நண்பர்களின் சந்திப்புண்டு, பிறரிடம் ஒப்படைத்த பொறுப்புக்கள் உங்களிடமே வந்து சேரலாம், பாடுபட்டதற்குரிய பலன் கிடைக்கும், தொழில் நலன் கருதி புதிய நடவடிக்கைகள் எடுப்பீர்கள்.

**தனுசு** இனத்தார் பகை மாற எடுத்த முயற்சி வெற்றி பெறும், வருமானம் பற்றிய சிந்தனை மேலோங்கும், தெய்வீக சிந்தனை மேலோங்கும், ஆரோக்கியம் சீராகும், போசன நன்மையுண்டு.

**மகரம்** வியாபார நன்மையுண்டு, பிறருக்கு உதவி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

**கும்பம்** சுப தகவல்கள் வந்து சேரலாம், தாய்வழி ஆதரவு பெருகும், மனதில் தோன்றுவதை செய்வீர்கள், பயணங்கள் கைகூடும், சுபசெலவுகள் அதிகரிக்கும், தொழில் நன்மையுண்டு.

**மீனம்** உடன் பிறப்புக்கள் மூலம் உதவிகள் கிடைக்கலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், நேற்றைய பிரச்சினை இன்று நல்ல முடிபுக்கு வரும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தே.ப.கைத்தொழில் அ.சபையால் 1250 பேருக்கு தொழிற் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை (NAITA)யின் யாழ்.மாவட்ட கிளையின் ஊடாக ஆயிரத்து 250 பேர் தொழிற் பயிற்சி பெற்று வருகின்றனர் என அதிகார சபையின் யாழ். மாவட்ட அதிகாரி கி.கிருஷ்ணபாலன் தெரிவித்துள்ளார்.


இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இளைஞர் விவகார அமைச்சிற்குட்பட்ட தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் யாழ்.மாவட்ட கிளையின் ஊடாக 16 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டவர்களுக்கு தொழிற் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தற்பொழுது யாழ்.மாவட்ட கிளையின் ஊடாக மட்டும் ஆயிரத்து 250 பேருக்கு தொழிற் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

பாடசாலைகளில் இருந்து இடைவிலகிய மாணவர்கள் இவ்வாறு அதிகளவில் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் ஊடாக தொழிற் பயிற்சியைப் பெற்று வருகின்றனர்.

மேலும் கிராமப்புற பாடசாலைகளில் இருந்து இடைவிலகியவர்களே அதிகளவில் தொழிற் பயிற்சியில் இணைந்துள்ளனர். குறிப்பாக 8,9ஆம் தரத்தை பூர்த்தி செய்து ஏதோ ஒரு காரணத்திற்காக படிப்பைத் தொடர முடியாது பாடசாலையிலிருந்து இடை விலகியவர்களாக இந்த மாணவர்கள் காணப்படுகின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)




நன்றி: மிரர்

# மணல் அகழ்வதை தடுக்கும் அதிகாரம் பிரதேச செயலாளர்களின் கையில்

(யாழ்ப்பாணம்)

**சட்டவிரோத மணல் அகழ்வதைத் தடுக்கும் அதிகாரம் பிரதேச செயலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார். யாழ்.மாவட்டத்தில் சங்கானை பிரதேச செயலாளர் பிரிவில் பொன்னாலை,திருவடி நிலைப் பகுதியிலும், கிழக்கு அரியாலை, பூம்புகார், நாகர்கோவில், மண்கும்பான் போன்ற பல இடங்களிலும் சட்டவிரோதமாக மணல் அகழ்வு இடம்பெற்று வருவதாக பிரதேச செயலாளர்களாலும் அந்தந்தப் பகுதி பொது மக்களாலும் மக்கள் பிரதிநிதிகளாலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதோடு, இது விடயம் அரசாங்க அதிபரின் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டுள்ளது. இதனையடுத்தே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

இந்த விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில், சட்டவிரோதமான முறையில் மண் அகழ்வு நடவடிக்கை அதிகரித்துவருவதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அத்தோடு அதனைத் தடுத்து நிறுத்துமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் மண்அகழ்வு இடம் பெறும்போது, அதனை அப் பகுதி பிரதேச செயலாளர் தடுத்து நிறுத்தமுடியும். அதற்கான அதிகாரம் பிரதேச செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அனுமதியில்லாமல் யாரும் மண்அகழ்வில் ஈடுபடமுடியாது. இதனை அனைவரும் புரிந்து கொள்ளவேண்டும். மேலும் தேவைக்கேற்ப மண்அகழ்வில் ஈடுபடுவதற்கான அனுமதிகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன. இருப்பினும் அதனையும் மீறி சிலர் சட்டவிரோதமாக எந்தவித அனுமதியையும் பெற்றுக் கொள்ளாது மணல் அகழ்வில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களைத் தடுத்து நிறுத்த பொலிஸாரும் முன்வரவேண்டும். அத்தோடு பிரதேச செயலாளர்களோடு கிராம சேவையாளர்களும் இந்த விடயத்தில் கூடிய கவனம் எடுத்து செயற் பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித் தார்.

யாழ்.மாவட்டத்தில் அதிகரித்துவரும் சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கை குறித்து கடந்த மாதம் யாழ். மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் தலைமையில் இடம் பெற்ற சிவில் பாதுகாப்பு குழுக்கூட்டத்திலும் பிரதேச செயலர்களாலும் பிரதேச சபை உறுப்பினர்களாலும் சுட்டிக்காட்டப்பட்டதோடு, சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபடுபவர்களைத் தடுத்து நிறுத்துமாறும் வேண்டுகோள் விடுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)




# இலைக்கஞ்சி வழங்கல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட சிரமதானத்தின் பின்னர், உத்தியோகத்தர், ஊழியர்களுக்கு இலைக்கஞ்சி வழங்கும் நிகழ்வை மன்றத்தின் தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் அவர் உரையாற்றுகையில் உத்தியோகத்தர், ஊழியர்களாகிய நாம் ஒரே குடும்பமாக இயங்கி எமது மன்ற வளாகத்தைத் துப்புரவு செய்தமையும் அதைத் தொடர்ந்து சத்துணவாகிய இலைக்கஞ்சியை அருந்தியமையும் ஒரு விசேட நிகழ்வாகும்.

இதேபோல எமது ஏனைய அலுவலகங்களிலும் சகலரும் இணைந்து இயங்கி நகராட்சி மன்றத் தின் ஒற்றுமையை பலப்படுத்த வேண்டும் என அவர் தெரிவித்தார். (அ-29)

# தொ.நு.கல்வித்துறை ஆரம்பவிழா

(யாழ்ப்பாணம்)

யா/வயாவிளான் மத்திய மகாவித்தியாலய க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான தொழில்நுட்பக் கல்வித்துறையை ஆரம்பித்து வைக்கும் வைபவரீதியான நிகழ்வு எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக யா/வயாவிளான் மத்திய மகாவித்தியாலய அதிபர் அறிவித்துள்ளார். (அ-5)

# கடற்றொழிலாளர்களுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டன

வடமராட்சி கிழக்கில் வத்திராயன், உடுத்துறை,ஆழியவளை, வெற்றிலைக் கேணி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களுக்கு நேற்று வியாழக்கிழமை வாழ்வாதார உதவியாக ஒரு தொகுதி வலைகள் வழங்கப்பட்டன.

மேற்படி நிகழ்வு நேற்று வியாழக்கிழமை மதியம் 12.30 மணிக்கு ஆழியவளை பொது நோக்கு மண்டபத்தில் ஆழியவளை கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் ஏ.ஜெயபாலகிருஷ்ணன் தலைமையில் ஆரம்பமானது.

இதில் பிரதம அதிதிகளாக S.A.H.நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி டானியல், யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவித்திட்ட பணிப்பாளர் கணேசமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ் உதவிக் கொடுப்பனவுகளை சுவிஸ் நாட்டுக்குச் சொந்தமான S.A.H.நிறுவனத்தினர் வழங்கியுள்ளனர். இதில் நான்கு கிராமங்களைச் சேர்ந்த நூறு பயனாளிகளுக்கு முதற்கட்டமாக 35 ஆயிரத்து 353 ரூபா பெறுமதியான 8 சூடை வலைகளும், அதற்குரிய ஏனைய உபகரணங்களும் வழக்கப்பட்டுள்ளன.

இவர்களின் வாழ்வாதரா முயற்சியைக் கருத்தில் கொண்டு, மேலும் ஒரு இலட்சம் ரூபா பெறுமதிக்கு உட்பட்ட அறக்கொட்டியான் வலைகள் வழங்கப்படவுள்ளதாகவும், இன்னும் பல பயனாளிகளுக்கு தாம் உதவிக்களை வழங்கவுள்ளதாகவும் நிறுவத்தினர் தெரிவித்தனர். (அ-9-64)



ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தினரால் நடத்தப்பட்ட சிறுவர் புகைப்படக் கண்காட்சி நேற்று கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் இடம் பெற்ற போது ...

# மூக்குத் துவாரத்துக்குள் நட்டை திணித்த சிறுமி

4 வயது சிறுமியொருவர் மூக்கு துவாரத்துக்குள் ஆணி நட்டை திணித்தமையால் ஏற்பட்ட மூச்சுத் திணறலால் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன் கிழமை மாலை யாழ். வட்டுக்கோட்டைப் பகுதியிலுள்ள வீடொன்றில் இடம் பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதில் அப்பகுதியைச் சேர்ந்த ராகுலன் டினுசா (வயது 4) என்ற சிறுமியே பாதிக்கப்பட்ட நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வீட்டினுள் விளையாடிக்கொண்டிருந்த போது குறித்த சிறுமி ஆணி நட்டை மூக்குத் துவாரத்தினுள் செலுத்தியதாக பெற்றோருக்கு தெரிவித்துள்ளார். மேலும் மூச்சுத் திணறல் ஏற்பட்டதை அடுத்து உடனடியாக சிறுமியை வைத்திய சாலைக்கு பெற்றோர் கொண்டுவந்துள்ளனர் (அ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களின் உரிமை குறித்து பேசியது ஹெல உறுமயவே

## மு.காவை கடுமையாக சாடுகிறார் சம்பிக்க

(கொழும்பு) —

**இராணுவ புலனாய்வுப் பிரிவின் அதிகாரியான முத்தலிப் போன்றவர்களை மதிப்பதாகவும் இராணுவத்தில் இருந்த 93 முஸ்லிம்கள் நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்தனர் எனவும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். ஆனால், முஸ்லிம் காங்கிரஸில் உள்ள எவரும் நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்யவில்லை எனவும் தெரிவித்துள்ளார். மாகாண சபைகளை இல்லாதொழிக்கும் தேசிய ஒன்றியம் மஹரகம சந்தியில் அண்மையில் நடத்திய மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முஸ்லிம் மக்களை வடக்கில் இருந்து விரட்டியபோதும் அவர்களை விடுதலைப்புலிகள் கொலை செய்த போதும் முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபக தலைவர் அஸ்ரப் போன்றவர்கள் என்ன செய்தனர்? குரங்கு பாஞ்சானில் உள்ள முஸ்லிம் பள்ளிவாசலை புலிகள் அழித்த போது ஹக்கீம் எங்கிருந்தார்? அவர் பிரபாகரனுடன் உடன்படிக்கைகளை செய்து கொண்டருந்தார்.

ஜாதிக ஹெல உறுமயவே அன்று முஸ்லிம் மக்களின் உரிமைகள் பற்றிப் பேசியது. அன்று காட்டுக்கு விறகு வெட்டச் சென்றிருந்த 7 முஸ்லிம்களை விடுதலைப்புலிகள் கொலை செய்தனர். அவர்களின் சடலங்களை எங்கள் கைகளில் ஏந்தியே புதைத்தோம். ஹக்கீம் போன்றவர்கள் அதில் கலந்து கொள்ளவுமில்லை எனவும் சம்பிக்க ரணவக்க கூறியுள்ளார்.

பயங்கரவாத அரசியல் முன்னணிகள் வடக்கில் ஈழத்தை உருவாக்குவதற்காக எமது பிள்ளைகள் தமது உயிர்த்தியாகம் செய்யவில்லை. நாட்டின் பெரும்பான்மையான மக்களின் உரிமைகளைப் பறித்தே அன்று ஜே.ஆர். ஜெயவர்த்தன மாகாண சபை முறைமையை கொண்டு வந்தார். அது வரலாற்றில் பாரிய காட்டிக்கொடுப்பாகும்.

தமிழர்களின் தாயக கோட்பாட்டை ஏற்றுக்கொண்ட ஜெயவர்த்தன இந்தியாவுக்கு வழங்கிய வாக்குறுதிக்கு அமைய மாகாண சபைகளை ஏற்படுத்தினார்.

எனினும் நாட்டு மக்களுக்குவழங்கியஉறுதிமொழிக்கு அமைய தர்ம சமூகத்தைக் கட்டியெழுப்பவில்லை. நாட்டின் நாடாளுமன்றத்தில் உரையாற்றவும் இடமளிக்கவில்லை.

நீதிமன்ற தீர்ப்புகளை புறந்தள்ளி விட்டு மாகாண சபை தொடர்பான திருத்தச் சட்டத்தை நிறைவேற்றினார். நாட்டின் சட்டத்திற்கும் மக்களின் விருப்பத்திற்கும் எதிராகவே ஜெயவர்த்தன அன்று மாகாண சபைகளை கொண்டு வந்தார் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

(அ-2)

# மாணவர்களுக்கு கருத்தரங்கு

யாழ். புனித மரியன்னை பேராலய இளைஞர் உருவாக்கல் இயக்கத்தினரால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள க.பொ.த உயர்தர பரீட்சையில் கிறிஸ்தவம் மற்றும் கிறிஸ்தவ நாகரிகம் ஆகிய பாடங்களுக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான இரண்டு நாள் பரீட்சை வழிகாட்டி கருத்தமர்வு நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் முற்பகல் 9 மணி முதல் மாலை 5 மணிவரை அகவொளி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி பாடங்களுக்கு தோற்றவிருக்கும் மாணவர்கள் இக் கருத்தமர்வில்பங்குபற்றி பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

(அ-5)


### காணிகள் விற்பனைக்குண்டு

அல்வாய் மேற்கு, திக்கம் வடிசாலைக்கும் தேவரையாளி கண்ணகை அம்மன் கோயிலுக்கும் இடையில் வெட்டுக் கிணற்றுடன் கூடிய 12 பரப்பு தோட்டக்காணியும் வீடு கட்டக்கூடிய 9 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்கு உண்டு. மா, பலா தென்னை போன்ற வருமானம் தரும் மரங்களும் உண்டு. வேம்பு, பனை மரமுமுண்டு.

**தொடர்புகளுக்கு:**
1. திரு.சின்னத்துரை நடராசா. 021226 2687
2. Dr.இ.கனகலிங்கம். 0779522105 (சி/3860)

இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1956 இந்து(v)<br>நட்சத்திரம்: அனுசம் 2<br>கி.பா : 19 செவ் 1<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: பட்டதாரி ஆசிரியர்<br>தொ.இ:B666 | பிறப்பு: 1975 இந்து(V)<br>நட்சத்திரம்: மகம் 3<br>கி.பா : 35 செ 4இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BA ஆரம்பக்கல்வி ஆசிரியர்<br>தொ.இ:G898 |
| பிறப்பு: 1984 இந்து(V)<br>நட்சத்திரம்: பூரட்டாதி 2<br>கி.பா : 25.75<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BA (Hons) ஆசிரியர்<br>தொ.இ:B667 | பிறப்பு: 1980 இந்து(V)<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா :29.75 செ 1<br>உயரம்: 5'2 "<br>தகைமை/தொழில்: Technician Norway PR<br>தொ.இ:G899 |
| பிறப்பு: 1980 இந்து (V)<br>நட்சத்திரம்: திருவோணம் 3<br>உயரம்: 5'5"<br>கி.பா : 36<br>தகைமை/தொழில்: A/Lகடை உரிமையாளர்<br>தொ.இ:B668 | பிறப்பு: 1968 இந்து(V)<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா : 6.25 செவ் 8<br>உயரம்: 5' 7"<br>தகைமை/தொழில்: BAஆசிரியை<br>தொ.இ:G902 |
| பிறப்பு: 1976 இந்து(V)<br>நட்சத்திரம்: சதயம் 1<br>கி.பா : 71 செவ் 7<br>உயரம்: 5' 9"<br>தகைமை/தொழில்:A/Lமருந்துக் கலவையாளர்<br>தொ.இ:B675 | பிறப்பு: 1982 இந்து(குயவர்)<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 4<br>கி.பா : 28.75 செவ் 1<br>உயரம்: 5' 2"<br>தகைமை/தொழில; BSc, PHD விரிவுரையாளர்<br>தொ.இ: G906 |

சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**

(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

**பயிற்சியே சிகிச்சை**

இலவசமாக உடற்பயிற்சி வழங்கப்படும்

**இடம்:** 14/4, ஆஸ்பத்திரி வீதி,
முதலாம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
**பயிற்சி நேரம்:** மாலை 5 மணி தொடக்கம் 6 மணிவரை
**தினம்** : வியாழன், வெள்ளி, சனி
**தொடர்பு :** 021 320 2286
(இ)

YMCA

*Invitation*

*You are cordially invited to*

**Talent Search 2013**

*On Saturday the 6th of July*
*Venue: Uduvil Girls' College,*
*Time: 4:15 p.m.*
*An event filled with Songs and Surprises!*
***An evening YOU shouldn't miss!***

*The Jaffna YMCA,*
*& Uduvil Girls' College*

(3180)



sale sale sale sale

ஆடித் தள்ளுபடி 19.06.2013 முதல்

Saravana Tex

**சரவணா ரெக்ஸ்**

01, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.



(சி/3884)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...


# தலைமைத்துவமும் முகாமைத்துவமும்

(கடந்த வாரத் தொடர்ச்சி...)

### 4.1.1 கருவி 1: வினாக்கொத்து (Questionnaire)

வினாக்கொத்துக்கள் கல்வி ஆராய்ச்சியில் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன. வினாக்கொத்தொன்றில் பல்வேறுவகையான வினாக்களும், துலங்கல் செயல்வகைகளும் காணப்படும். வினாக்கொத்தொன்றில் ஆய்வுத் தலைப்புக் குறித்த பல்வேறு தரப்பட்ட் வினாக்கள் இடம்பெற்றிருக்கும். (Good and Hatt)

வினாக்கொத்தொன்றில் மூடியவகை அல்லது கட்டுப்படுத்தப்பட்ட வினாக்கள் (Closed or Structured Form) மற்றும் திறந்தவகை அல்லது எல்லைகளுக்குட்



மூலம்: யாழ்.வலைய ஆசிரிய மத்திய நிலையத்தில் எடுக்கப்பட்ட புகைப்படம்


படுத்தப்படாத வகை (Open ended Form) என இருவகைப்பட்ட வினாக்கள் இடம்பெறும். மூடியவகை வினாக்கள் மூலம் பெறப்படும் தகவல்களைக் கொண்டு புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு செய்வது இலகுவாக இருக்கும். திறந்தவகை வினாக்கள் மூலம் தகவலளிப்போர் தமது கருத்துக்களை சுயமாக வெளியிட வாய்ப்பளிக்கப்படும். எனினும் இதனைப் புள்ளிவிபரவியல் பகுப்பாய்வுக்கு உட்படுத்துவது கடினம்.

### கருவி 2: தர அளவுச் சட்டம் / தர மதிப்பீட்டுக் கோல் (Ratting Scale)

ஒருவரிடமிருந்து ஆழ்ந்த கருத்துக்களை அல்லது முடிவுகளை (Judgements) அறியவும் அவை எந்த அளவுடையவனவாக உள்ளன என்பதை அறியவும் தர அளவுச் சட்டம் பெரிதும் பயன்படும். "ஒரு சூழ்நிலைப் பொருள் அல்லது பண்பைப் பற்றிய கருத்து அல்லது ஆழ்ந்த முடிவினை வெளிப்படுத்துவதற்காக தர மதிப்பீட்டுக் கோல் பயன்படுத்தப்படுகின்றது." என்பது ஏ.எஸ்.பார் (Barr) என்பவரின் கருத்தாகும். தர மதிப்பீட்டு நுண்முறைகள் பெறப்பட்ட முடிவுகளைப் பரிமாண அளவுகளாக (Quantity) மாற்ற உதவுகின்றன.

ஒரு ஆசிரியர் புதிய அணுகுமுறையொன்றை கற்பித்தலில். அமுல் நடத்தும் போது தான் பல சந்தேகங்கள் அவருக்கு எழும். அவ்வேளையில் அவருக்கு மற்றையோரின் உதவி தேவைப்படும். இதற்காக, அவருக்கு தொடர்ச்சியான நடைமுறை வழிகாட்டலும் நெறிப்படுத்தலும் (On- Going Guidance and Direction) தொடருறு ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டத்தினூடாக வழங்கப்பட வேண்டும். இவ்வாறான ஒரு தொடருறு ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டத்தினூடாகத் தான் ஆசிரியர்களின் தேவைகளை உடனுக்குடன் நிவர்த்திசெய்ய முடியும்.

### 4. மாற்ற முகாமை



யாழ். வலைய ஆசிரிய மத்திய நிலையத்தின் நோக்கு

இன்று பாடசாலைகள் சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் மைய நிலையங்களாகத் திகழ்கின்றன. சமூகத்திலுள்ள இளஞ் சந்ததியினரை எதிர்கால வாழ்க்கைக்குத் தயார்ப்படுத்தும் பணியை பாடசாலைகள் மேற்கொள்ளும் போது பல்வேறுபட்ட அழுத்தங்கள் காரணமாக பலவிதமான மாற்றங்களுக்கு உட்படுகின்றன. மாணவர்களின் மனப்பான்மையிலும் நடத்தையிலும் சமூக மாற்றங்கள் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. வேகமான தொழில நுட்ப முனனேற்றம், தகவல் தொழில்நுட்ப விருத்தி போன்றவை காரணமாக கருத்துப் பரிமாறல்கள், தத்துவ விளக்கங்கள் என்பன வேகமாகப் பரவி வருகின்றன. இத்தகைய தகவல் தொழில்நுட்பங்களுக்கு மாணவர்கள முகங்கொடுக்கும் போது பெற்றோர், சமூகம், பாடசாலை என்பவைகளின் நேரடிச் செல்வாக்குகள் தேய்வுறத் தொடங்குகின்றன.

பாடசாலைகளில் ஆசிரியர்களின் பணி வெறுமனே கற்பித்தலோடு நின்றுவிடுவதில்லை. மாணவர்களை முழுமையான மனிதர்களாக மாற்றும் பெரும்பணியும் ஆசிரியர்களின் கைகளில்தான் உள்ளது. அதற்கு ஆசிரியர்களது அறிவில், திறனில், மனப்பாங்கில் மாற்றமேற்படுவது அவசியமாகும். மாணவர்களை முழுமையான மனிதர்களாக மாற்றுவதற்கு, ஆசிரியர்கள் மாணவர்களை விளங்கிக்கொண்டு, மாணவர்களின் பிரச்சினைகளுக்கான மூலங்களை அறிந்து, அப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான முயற்சிகளை முன்வைப்பதற்கு, சாதகமான உறவு நிலைகளையும் தளத்தையும் கட்டியெழுப்ப தேவையான மாற்றங்களை முதலில் ஏற்படுத்த வேண்டும். ஆசிரியர்கள் தமது முயற்சிகள் மாணவர்களில் ஏற்படுத்தும் மாற்றங்களை நுணுக்கமாகப் மதிப்பீடு செய்து ஏற்ற பரிகார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். எல்லா விடயங்களும் ஒரு நேரத்தில் கட்டாயம் மாற்றப்படவேண்டும். அல்லாவிட் டால் முன்னேற்றமில்லாத வளர்ச்சியற்ற ஒரு நிலையான சமூகம் உருவாகிவிடும். கல்வி மாற்றத்தின் இயல்புகளை, கல்வியின் நோக்கங்களையும் செயற்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டு விளங்கிக்கொள்ள முடியும். ஒரு நிறுவனத்துக்கு முக்கியமாக உள்ளக, வெளியக விசைகளினால் மாற்றத்திற்கான அழுத்தம் உருவாக்கப்படுகின்றது. கல்வி நிறுவனங்களின் கல்விக் கொள்கைகளில் மாற்றம் ஏற்பட மூன்று பிரதான காரணிகள் காரணமாக அமைகின்றன. முதலாவது காரணியாக இயற்கை அனர்த்தங்களான புவிநடுக்கம், வெள்ளப்பெருக்கு, எரிமலை வெடிப்பு, மண் சரிவு, புயல் என்பவற்றைக் குறிப்பிடலாம். இரண்டாவது காரணியாக நவீன தொழில்நுட்ப விருத்தியால் ஏற்பட்ட விழுமிய மாற்றங்கள் மற்றும் நாடுவிட்டு நாடு செல்லல் (புலம்பெயர்தல்) என்பவற்றைக் குறிப்பிடலாம். மூன்றாவதாக ஒரு சமூகத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட குழுக்கள் (இனங்கள்) இருப்பதனால் உருவாகும் உள்ளக முரண்பாடுகளால் ஏற்படும் மாற்றத்தைக் குறிப்பிடலாம். அதாவது ஒரு பன்முக சமூகத்தில் கல்வி மாற்றத்திற்கான அழுத்தங்களும் அதிகமாகவிருக்கும்.

மாற்றத்தின் இயல்புகளைப் பகுப்பாய்வு செய்தவர்கள் அவற்றை இரு பிரிவுகளாக நோக்குகின்றனர். (Hussey, 1997) அவையாவன,

**1. சர்வதேச மாற்றம் (International Change)**

இது அதிகமாகப் புரட்சியின் மூலமே ஏற்படுகின்றது. கைத்தொழிற்றுறையில் வேலை முறைகள், தொழிற்சாலை அமைப்பு, புதிய உற்பத்திகளின் ஆரம்பங்கள் என்பவற்றில் இத்தகைய மாற்றங்களை அவதானிக்க முடியும். மாற்றங்கள் இடம்பெறும்போது தொடர்ச்சியை ஒருவர் அவதானிக்கக்கூடியதாக இருக்கும். மாற்றத்தின் ஆரம்பத்தில் ஏதாவதொரு விடயத்தில் முக்கிய மாற்றத்தை அவதானிக்க முடியாதபோதிலும் நீண்ட காலத்தின் பின் அதனை அவதானிக்கக்கூடியதாகவிருக்கும். மேற்படி சர்வதேச மாற்றங்களால் சிலர் பாதிக்கப்பட்டிருப்பினும் அவை அதிக தாக்கத்தை ஏற்படுத்துவதாக அமையாது.

**2. அடிப்படை மாற்றம் (Fundamental Change)**

இதனை வெற்றிகரமாக அமுல்படுத்தும் போது அவதானிக்கக்கூடியளவான தாக்கங்களை உண்டாக்கும். பொதுவாக இவை திடீர் மாற்றங்களாக இருப்பதுடன் சம்பந்தப்பட்ட நிறுவன வளர்ச்சிப் போக்கிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும். இத்தகைய மாற்றங்களின் தாக்கத்தை, நிறுவனத்தில் பணியாற்றுபவர்களால் மட்டுமன்றி நிறுவனத்தில் அக்கறைகொண்டுள்ள வெளியாரினாலும் உணரக்கூடியதாகவிருக்கும். சில்வேளைகளில் இத்தகைய மாற்றங்களுக்கு எதிர்ப்புக்களும் உருவாகலாம்.

### 4.1 மாற்றத்தினை முகாமை செய்தல்

மாற்றத்தினை முகாமைசெய்ய தலைவர்களும் முகாமையாளர்களும் திட்டமிடும்போது பின்வரும் விடயங்களை தமது மனதில் நிறுத்திச் செயற்பட வேண்டும். அவையாவன,

i. மாற்றத்துக்கு வெவ்வேறு மக்கள் வெவ்வேறு விதமாகத் துலக்கத்தை காட்டுவார்கள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

ii. ஒவ்வொருவருக்கும் சில அடிப்படைத் தேவைகள் உண்டு என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

iii. மாற்றத்தின்போது ஏதோ ஒரு இழப்பு ஏறபடும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

iv. மக்களின் எதிர்பார்ப்புக்கள் உண்மையாக முகாமைசெய்யப்பட வேண்டும் என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும்.

மாற்றத்தினை முகாமை செய்யும் செயற்பாடு பல தொடர்ச்சியான படிகளைக் கொண்டது. மிகவும் பயனுறுதிமிக்கதும் எல்லோராலும் அதிகமாகப் பயன்படுத்தப்படுவதுமான Prosci's என்பவரது ஆராய்ச்சியின்படி, அநேக மாற்ற முகாமைச் செயற்பாடுகள் பிரதானமான மூன்று கட்டங்களை உடையது. அவையாவன,

**அ.குகன்**
ஆசிரிய கல்வியியலாளர்,
யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி.

கட்டம் 1 மாற்றத்தை உருவாக்கல். (Preparing for change)

- உருவாக்கல் (Preparation)
- கணிப்பிடல் (Assessment)
- உபாய விருத்தி (Strategy Development)

கட்டம் 2 மாற்றத்தை முகாமை செய்தல (**Managing Change**)

- விரிவான திட்டமிடல் (Detailed Planning)
- மாற்ற முகாமைத்துவ அமுலாக்கம் (Change Management Implementation)


கட்டம் 3 மாற்றத்தை மீள வலியுறுத்தல் (**Reinforcing Change**)

தரவுகளை ஒன்று சேர்த்தல் (Data Gathering)

திருத்தும் செயற்பாடு (Corrective Action)

அங்கீகரித்தல் (Recognition)

மேற்படி மாற்றத்தை முகாமை செய்யும் செயன்முறையை (Change Management Process) பின்வரும் வரிப்படம் தெளிவாகக் காட்டுகின்றது. (முற்றும்)




## வாரத்திற்கு ஒரு புதிர்! 87

**X கதிரின் மீடிறன் வீச்சு யாது?**

புதிர் 87 இற்கான விடைகளை 15.07 .2013 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

**திரு.அ.குகன்**
ஆசிரியர் பிரிவுA
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
ஆசிரிய கல்வியியலாளர்,
யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட விலங்கியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.ஈஸ்வரமோகனிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 86 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

எம்.நிதுஷா,
சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்

**புதிர் 86க்கான கேள்வியும் விடையும்:**

LASER என்பதன் விரிவு யாது?

Light Amplification by Stimulated Emisson Of Radiation

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
## புதிர் இல. 87

சரியான விடை:-........................................

முழுப்பெயர்:-........................................

முகவரி:-........................................

தொ.பே.இல:-........................................

கையொப்பம்:........................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யெகோவாவின் சாட்சிகள் மாநாடு

(யாழ்ப்பாணம்)

"மனதைக் காத்துக் கொள்ளுங்கள்'' எனும் தொனிப்பொருளில் யெகோவாவின் சாட்சிகளின் இலவச மாநாடு நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமையும் காலை 9.40 மணிக்கு வீரசிங்கம் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சனிக்கிழமை காலை 11.25 இற்கு ஞானஸ்ஞான உரையும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமை ''யெகோவாவின் நாளை எப்போதும் மனதில் வையுங்கள்'' என்னும்பொருளிலான உரையும் இடம் பெறு மென த.முத்துலிங்கம் தெரிவித்துள்ளார். (அ)

## வட்டு.மத்திய கல்லூரி பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.வட்டு. மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி அதிபர் ந.சபாரத்தினசிங்கி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வலி.மேற்கு பிரதேச செயலர் அ.சோதிநாதனும் சிறப்பு விருந்தினர்களாக வட்டு.இந்து வாலிபர் சங்க கொழும்புக் கிளைத் தலைவர் ந.பாலராமன், செயலாளர் சு. பரமராஜன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வில் நினைவுப் பேருரையை பழைய மாணவி செ.மல்லிகா தேவி ஆற்றவுள்ளார். (அ)

# ஜனாதிபதி உள்ளிட்ட அமைச்சரவை சுகபோகங்களை அனுபவிக்கின்றது

## மௌபிம மக்கள் கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

**ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அமைச்சரவையில் உள்ளவர்கள் சுகபோகங்களை அனுபவிக்கின்றனரே தவிர நாட்டை நிர்வகிப்பதில்லை. இந்த அரசாங்கம் நாட்டை அதள பாதாளத்திற்குள் தள்ளிவிட்டுள்ளது. இவ்வாறு மௌபிம மக்கள் கட்சியின் தலைவர் ஹேமகுமார நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

காலியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்,

13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டம் தொடர்பான நெருக்கடி அரசாங்கம் முழுவதிலும் பரவியுள்ளது.13 ஆவது அரசியல் அமைப்பு திருத்தச் சட்டம் தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்திய அரசாங்கத்திற்கு வழங்கிய உறுதி மொழிகள்புஷ்வாணங்களாகியுள்ளன.

இந்த புஷ்வாணங்களுடன் இந்தியாவின் அதிருப்தியை தவிர்க்க விசேட பிரதிநிதியாக பசில்ராஜபக்ஷவை அனுப்பினாலும் இந்திய அதிகாரிகளை திருப்திப்படுத்த முடியாது.

13 பிளஸ் என்று அரசாங்கம் சர்வதேசத்திட்டம் கூறினால் அதனை நிறைவேற்ற வேண்டும். இல்லாவிட்டால் அதனை கூறாமல் இருந்திருக்க வேண்டும். தற்போது இலங்கையுடன் தொடர்புகளை கொண்டுள்ள அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் இலங்கையிடம் இருந்து விலகி வருகின்றன.

ஜனாதிபதி உள்ளிட்டவர்கள் ஆபிரிக்காவுக்கு சென்று புதிய நண்பர்களைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். ஆபிரிக்க நாடுகளுடன் இருக்கும் இலங்கையின் வர்த்தக தொடர்புகள் என்ன என்று இந்த அரசாங்கத்திடம் கேள்வி எழுப்புகிறேன்.

அந்த நாடுகளிடம் இருந்து எந்த பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன? அந்த நாடுகளில் இலங்கை மக்களுக்கு வழங்கப்ப டும் தொழில் வாய்ப்புகள் எவை எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (அ-2)

## முற்றாக துண்டிக்கப்பட்ட கையை பொருத்தி சாதனை

திருகோணமலை பொது வைத்தியசாலையில் முற்றாக துண்டிக்கப்பட்டிருந்த கையை சத்திரசிகிச்சை மூலம் மீண்டும் பொருத்தி குறித்த வைத்தியசாலை வைத்தியர்கள் சாதனை புரிந்துள்ளனர்.

இச் சத்திரசிகிச்சை சம்பவம் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்டது. அறுவைச் சத்திரசிகிச்சை நிபுணர் ரொஹான் சிறிசேன தலைமையிலான வைத்தியர் குழு வினரே மேற்படி சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்டு நிறைவு செய்துள்ளனர்.

இதுவரை காலமும் இப்பொது வைத்தியசாலைக்கு இவ்வாறான சிகிச்சைக்கென அனுமதிக்கப்படுவோர் கண்டி மற்றும் கொழும்பு போன்ற வைத்தியசாலைகளுக்கு மாற்றப்பட்டே சத்திரசிகிச்சைக்குள்ளாக்கப் பட்டனர்.

ஆனால், திருகோணமலை பொது வைத்தியசாலையில் தற்போது சகல சிகிச்சைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(அ-2)

## வேலை நிறுத்தத்தில் குதிப்போம் தனியார் பே.உ.சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் அடுத்த வாரம் முதல் வேலை நிறுத்தத்தில் குதிக்கப் போவதாக தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் எச்சரித்துள்ளது.

பேருந்து கட்டண உயர்வு தொடர்பில் எதுவித முன்னெடுப்புகளும் மேற்கொள்ளப்படாத நிலையிலேயே இவ்வாறு வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்போவதாக குறிப்பிட்டுள்ளனர்.


இம்மாதம் முதலாம் திகதி முதல் தனியார் பேருந்து கட்டணங்கள் உயர்த்தப்பட இருந்தபோதும் பேருந்து சங்கங்களுக்கும் தனியார் போக்குவரத்து அமைச்சிற்குமிடையில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்தமையால் கட்டண மாற்றம் தாமதமானது. பேருந்து கட்டணத்தை 6.2 வீதத்தால் அதிகரிக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு உத்தேசித்தது.

ஆனால், 10 வீதத்தினால் அதிகரிக்குமாறு பேருந்து சங்கங்கள் கோரின. பேருந்துகளுக்கான நிதிச் செலவை கணிப்பிடுவதில் தவறு இருப்பதாகவும் இது குறித்து திறைசேரியின் சிபாரிசைப் பெறவேண்டுமெனவும் பேருந்து சங்கங்கள் கோரின. இதன்படி பேருந்து கட்டண மாற்றத்திற்கு காலக்கெடு வழங்கப்பட்டது.

ஆனால், ஜுலை முதலாம் திகதி கடந்தும் இன்னும் பேருந்து கட்டண மாற்றம் தொடர்பில் அமைச்சு எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என பேருந்து உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன கூறினார்.

எனவே, சகல பேருந்து சங்கங்களுடனும் இணைந்து அடுத்தவாரம் முதல் வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். திறைசேரியின் சிபாரிசுபடி புதிய பேருந்து கட்டணம் குறித்து கணக்கிட்டு வருவதாக தனியார் போக்குவரத்து அமைச்சு கூறியுள்ளது. பயணிகளுக்கு அநீதி ஏற்பட இடமளிக்கப்போவதில்லை எனவும் அமைச்சின் அதிகாரி ஒருவர் கூறினார்.(அ-2)




க.பொ.த.உயர்தர கணித, உயிரியல் பிரிவு மாணவர்களுக்கான பௌதீகவியல் விளக்கவுரை 2012 நூல் வெளியீட்டு நிகழ்வு அண்மையில் யாழ்.இந்துக் கல்லூரியின் குமரசுவாமி மண்டபத்தில் இடம்பெற்றது. பேராசிரியர் எஸ்.ஆர்.டி.றோசாவினால் எழுதப்பட்ட இந்நூல் பௌதீகவியல் ஆசிரியர் எஸ்.சோதிலிங்கம் தமிழில் மொழி பெயர்த்திருந்தார். இந்நூல் வெளியீட்டு விழாவில் பிரமுகர்கள் அமர்ந்திருப்பதையும், நூல் வெளியிட்டு வைக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

## பாதுகாப்புச் செலவுகளை வரையறுக்க அரசு முடிவு

(கொழும்பு)

நாட்டின் பாதுகாப்புச் செல்வுகள் குறைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் ஐந்து ஆண்டு காலப் பகுதியில் நாட்டின் பாதுகாப்புச் செலவுகளைக் குறைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர், புனர்நிர்மாண, புனரமைப்பு பணிகளில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. நாட்டின் இராணுவச் செலவீனங்கள் குறைக்கப்பட்டு அந்த நிதி வடக்கு அபிவிருத்திக்காக ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

எதிர்வரும் 2018 ஆம் ஆண்டு வரையில் இராணுவச் செலவுகளை வரையறுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதன் பின்னர் பாதுகாப்புச் செலவுகளை அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

## ஆணையாளர் நியமனம்

(கொழும்பு)

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சில் இயங்கும், புனர்வாழ்வு திணைக்களத்தின் புதிய ஆணையாளராக மேஜர் ஜெனரல் கே.ஜே.விஜேதிலக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

போர் நடைபெற்ற காலப் பகுதியிலும் அதன் பின்னரும், விஜேதிலக்க புதுக்குடியிருப்பில் 68 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரியாக பணியாற்றியுள்ளார்.

புனர்வாழ்வு ஆணையாளராக பணியாற்றி வந்த தர்ஷன ஹெட்டியாராச்சி ஒன்றரை வருடங்கள் இந்தோனேசியாவின் தேசிய பாதுகாப்பு கல்லூரியில் மேலதிக இராணுவப் பயிற்சிகளை பெறவுள்ளார். (அ-2)

## எனக்கு உறக்கத்தில் நடக்கும் வியாதி

### ரம்மித் ரம்புக்வெல கூறுகிறார்

தனக்கு உறக்கத்தில் நடக்கும் வியாதி இருப்பதாக ஊடக அமைச்சரின் மகனும், இலங்கை கிரிக்கெட் அணியின் வீரருமான ரம்மித் ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

எனக்கு சிறு வயது முதலே தூக்கத்தில் நடக்கும் வியாதி இருந்தது.

உறக்கத்தில் இருந்த போதே விமானத்தின் கதவை திறக்க முயற்சித்தேன், குடிபோதையில் அல்ல. சம்பவம் இடம்பெற்ற தினத்திற்கு முதல் நாள் தூக்கமின்றி விழித்திருந்தோம்.

நடு வானில் விமானத்தின் கதவுகளைத் திறக்கும் அளவிற்கு நான் எருமை மாடு கிடையாது. எனது உடலில் அற்ஹகோல் இருக்கின்றதா? இல்லையா? என்பதனைப் பரிசோதனைகளின் மூலம் நிரூபிக்கமுடியும்.

வெளிநாட்டவர்களுக்கு அமைச்சரின் மகன் என்பது முக்கிய மில்லை. குடிபோதையில் இவ்வாறு விமானத்தின் கதவுகளை திறந்திருந்தால் அவர்கள் சும்மாயிருந்திருக்க மாட்டார்கள்.

இது தொடர்பில் பிரித்தானிய விமானசேவை நிறுவனம் ஏற்கனவே அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது என அவர் சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு நேர்காணல் வழங்கியுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளை மேற்பரப்பு
## Samsung TV

முதற்தர இலத்திரனியல் சாதனங்களை உற்பத்தி செய்து அறிமுகப்படுத்தும் நிறுவனங்களுள் ஒன்றான சாம்சங் ஆனது, வளை மேற்பரப்பினை உடைய நவீன தொலைக் காட்சிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

Samsung Curved OLED TV என அழைக்கப் படும் இந்த தொலைக்காட்சியானது முதன் முறையாக தென்கொரியா வில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 1920 x 1080 Pixel Resolution, 55 அங்குல அளவு டைய திரையினைக்




கொண்டுள்ள தொலைக் காட்சியின் எடையானது 30.9 கிலோகிராம் வரை காணப்படுவதுடன் இதன் பெறுமதி யானது 13,000 டொலர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அதி நவீன ரோபோ

தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவாக உலகில் மிகவும் வித்தியாசமான வடிவில் ரோபோக்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் தண்ணீரில் சென்று உளவு பார்க்கும் ரோபோவை National university of Singapore மாணவர்கள் உருவாக்கி உள்ளனர்.

இதனை வைத்து மிக எளிதாக ஏனைய நாடுகளை உளவு பார்க்க முடியும் என்றும் தெரிவிக்கின்றனர்.

## ஸ்மார்ட் கடிகாரம்
### மாணவர்களின் அரிய படைப்பு

அப்பிள், கூகுள் என பல முன்னணி நிறுவனங்கள கையில் அணியக்கூடிய ஸ்மார்ட் கைக்கடிகாரத்தை தயாரித்து வருவதாக அடிக்கடி தகவல்கள் வெளியாகின றன. எனினும் அப்பிளோ, கூகுளோ இதுவரை அவ் வாறானதொன்றை சந்தைக்கு அறிமுகப்படுத்த வில்லை. இந்நிலையில் பெரிய நிறுவனங்களுக்கு சவால்விடும் வகையில் ஸ்மார்ட் கடிகாரத்தை இந்திய மாணவர்கள் சிலர் தயாரித்துள்ளனர்.

குறித்த ஸ்மார்ட் கடிகாரம் "அண்ட்ரோய்ட்லி" எனப் பெயரிடப்பட்டுள்ளதுடன் முற்றிலும் அண்ட் ரோய்ட் இயங்குதளம் மூலம் இயங்குகின்றது. இரண்டு அங்குல திரையைக் கொண்டுள்ள துடன் 2 மெகாபிக்ஸல் கெமராவினை கொண் டுள்ளது.

புளூடூத், ஜி.பி.எஸ், 256 எம்.பி. ரம், வை-பை, 8 மற்றும் 16 ஜிபி மெமரி என பல வசதி களை இக்கைக் கடிகாரம் கொண்டுள்ளது.

சிம் அட்டையை உபயோகிப்பதன் மூலம் இத னூடாக குறுந்தகவல் அனுப்புதல், அழைப பினை மேற்கொள்ளுதல் போன்றவற்றையும் மேற்கொள்ள முடியும். இந்திய மாணவர்க ளின் தயாரிப்பிலேயே இது உருவாக்கப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# CITIZEN SPORTS!

# YAHOO! ஆல் நிறுத்தப்படும் சில சேவைகள்

Yahoo Axis

Browser Plus




foxytunes

RSS Alerts

# altavista™

இணையத் தேடல் உட்பட பல சேவைகளை வழங்கிவரும் முன் னணி நிறுவனமாகத் திகழும் Yahoo ஆனது அதன் சில சேவை களை நிறுத்துவதற்கு முடிவு செய்துள்ளது.

இதன்படி Citizen Sports, Yahoo Axis, Browser Plus, Webplayer, FoxyTunes, RSS Alerts மற்றும் AltaVista போன்ற தேடுபொறி ஆகியவற்றினை நிரந்தரமாக நிறுத்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அண்மையில் டம்ளர் தளத்தினை கொள் வனவு செய்திருந்த நிலையில் தற்போது இந்த அதிரடி முடிவை யாகூ நிறுவனம் எடுத்துள்ளது.

இதேபோன்று கூகுள் நிறுவனமானது தனது கூகுள் றீடர் (Google Reader) சேவைக்கு விடை கொடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இன்றைய உலகில் பல Processor கள் வந்துவிட்டாலும், இவை அனைத்திற்கும் முன்னணி என்று சொன்னால் அது இன்டெல் (intel) தான்.

இந்நிலையில் இன்டெல் நிறுவனம் தனது புதிய 4ஆம் தலைமுறை Processor களை அறிமுகம் செய்தது. இதற்கு Haswell என்று Code Name கொடுத்துள்ளது.

முந்தைய தலைமுறை Processor களை விட அதிக வசதிகளுடன் இது வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# intel
## புதிய பரிணாமம்

1. கணனி மற்றும் Tablet என இரண்டாகவும் இயங்கும் வசதி.
2. பழைய மடிக்கணனிகளை விட 50% அதிக Battery Life.
3. ஒன் செய்த 3 நொடிகளில் கணனி இயங்க ஆரம்பித்துவிடும்.
4. பழைய கணனிகளை விட நான்கு மடங்கு அதிக வேகம்.

20 நிமிட HD Video - களை 1 நிமிடத்தில் Convert செய்யும் வசதி. Voice Recognition, Immersive Touch, Face Login and Wireless Display To TV போன்ற வசதிகளும் உள்ளன.

# மனித உடல் வெப்பத்தில் டோர்ச்
## இது கனடா மாணவியின் கண்டுபிடிப்பு

மனித உடம்பின் வெப்பம் 40 வோல்ட்டுக்கும் அதிகமாய் உள்ளது என்பதை நாம் அறிவோம். இதை பயன்படுத்தி 15 வயது மாணவி (அன்னோ மக் கோஸின் ஸ்கி) கனடாவில் ஒரு டோர்ச்சை கண்டுபிடித்திருக்கிறார்.

இதில் பற்றரி கிடையாது ஆனாலும் எரியும். அது எப் படி? மனித உடம்பின் வெப்பத்தை பயன்படுத்தி அதை தெர்மோ எலக்ட்ரிக்காய் பயன்படுத்தி அதை அந்த டோர்ச் சின் மேல் பகுதியில் உள்ள அலுமினிய தகட்டில் கை பதித்தால் அதன் மூலம் உள்ளே இருக்கும் காலி உருளை அலுமினியம் மூலம் டோர்ச் எரியுமாம்.

மேலே கூறப்பட்டதுபோல் இதற்கு மின்சாரம், பற்றரி என்று ஒன்றுமே தேவையில்லை. மனிதனின் கை வெப் பம் மாத்திரம் போதுமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தரிடம் எனது ஆன்மீகப் பயணம்



ஆன்மீகம் 52

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

...மதிய உணவுக்குப் பின் எல்லோரும் ஒய்வெடுத்தனர். அப்போது திரு.ராமதாஸ் அவர்களிடம் அவர் நண்பராக அதிகாரி என் விடயமா சித்தர் கிட்ட எப்ப சொல்லப் போறீங்க என்று கேட்டார். அதற்கு திரு.ராமதாஸ் அவர்கள் தேவையில்லை அவருக்கே எல்லாம் புரியும். எல்லாம் தானாகவே நடக்கும் என்றார்.

இது கேட்டு ஒன்றும் புரியாமல் அருகிலிருந்த நான் திரு. இராமதாஸிடம் விபரம் கேட்க, நண்பர் என்னைப்போல ஐ.ஏ.எஸ். அதிகாரி தான். சாமியைப் பற்றி சொன்னேன். இவர் இப்போது இருக்கும் இலாகாவில் பணிபுரிய இவருக்கு பிடிக்கவில்லை. வேறு இலாகாவிற்கு போகனும் என்று ஆசைப்படுகிறார் என்றார்.

ஐயா நீங்க இங்க வந்துட்டீங்க இல்லே. கவலையை விடுங்க என்றேன். இவ்வளவு சிறிய குடிசையில் வசிக்கிற இவர் எப்படி இவ்வளவு பேருக்கு விருந்து சாப்பாடு போடுகிறார். அதிசயமா இருக்கு. இங்கே ஒரு தனி அரசாங்கமே நடக்குற மாதிரி இருக்கு என்றார். அந்தப் புது அதிகாரி. இதைக் கேட்டு மகிழ்ந்த நான் ஐயா! இவ்வளவு பேர் சாப்பிடறாங்க! ஆனா குடி தண்ணீருக்குத் தான் கஷ்டமாயிருக்கு என்றேன்.

இதைக்கேட்ட அந்த அதிகாரி சிரித்தவாறே சித்தர் கிட்ட சொல்லி குடிநீர் வடிகால் வாரியத்தில் எம்.டி. போஸ்ட்டுக்கு ஆர்டர் போடச் சொல்லுங்க அப்புறம் என்ன இங்கு குடிநீர்த் தாங்கி கட்டித் தாறேன் என்றார்.

ஐயா கவலையை விடுங்க! நீங்க நினைச்சது நடக்கும். சற்று ஓய்வெடுங்கள் என்று அங்கிருந்து அகன்றேன். அப்போது ஜெர்மனி நாட்டிலிருந்து வந்திருந்த திரு.தாமஸ் என்பவர் சாமியிடம் விடைபெற்று புறப்பட்டார். அவரை திருச்சி நகருக்குக் கொண்டுவிடும் பொறுப்பு எனக் கிடப்பட்டது. அவரை அழைத்துக் கொண்டு திருச்சி புறப்பட்டேன்.



பொதிகை மலையில்

திருச்சியிலிருந்து புறப்பட்டு ஆச்சிரமத்துக்குள் நான் நுழையும் போது மணி ஆறு ஆகிவிட்டது. அரசாங்க அதிகாரிகள் வந்த காரையும் காணவில்லை. ஆச்சிரமத்துக்குள் அவர்களும் இல்லை.

இதைக் கண்ட சித்தர்பெருமான் என்ன ராஜா! அந்த அதிகாரிகளை தேடுறியா? அவர்கள் போய் ஒரு மணி நேரமாயிருச்சு என்றார். என்ன இது சொல்லாமலே போய் விட்டார்களே. திரு.ராமதாஸிடம் சில விடயம் பேச இருந்தோமே என்று மனம் சலனப்பட்டது.

அதைப் புரிந்து கொண்டவர்போல ராஜா! அவர்களும் உன்னை எதிர் பார்த்து ஐந்து மணி வரைக்கும் காத்து இருந்தாங்க. நான்தான் நீங்க புறப்படுங்க உங்களுக்கு நேரமாயிடுச்சு என்று அனுப்பி வச்சேன். ஊருக்குப் போனதும் அந்த புது அதிகாரிக்கு ஆர்டர் காத்திருக்கும் என்று கூறி சிறு குழந்தை போல குலுங்கி சிரித்த அந்தப் பெரிய குழந்தையை இன்னும் பிறக்காத இந்த குழந்தை பார்த்து திகைத்தது. சில மாதங்கள் உருண்டோடின. சென்னைக்குச் சென்றிருந்த நான் திரு.ராமதாஸைச் சந்தித்தேன். அவர்மூலம் அவர் நண்பருக்கு குடிநீர்வடிகால் வாரிய எம்.டி. பதவி கிடைத்ததை அறிந்து மகிழந்தேன். இருவரும் சித்தர்பெருமானின் அற்புதங்களைப் பற்றிப்பேசி மகிழந்தோம்.

பின்னர் புது அதிகாரியை சந்தித்து வாழ்த்தலாம் என்று அவர் அலுவலகம் சென்றேன். சந்தித்து மகிழ்ச்சி தெரிவித்தேன். காரியமே கண்ணாக ஆச்சிரம குடிநீர்ப் பிரச்சினை பற்றி நினைவுறுத்தி எப்போது தாங்கி கட்டுவீர்கள் என்று உரிமையோடு கேட்டேன்.

அதற்கு அவர் முகத்தில் அடித்தாற்போல் நான் சென்னைக்கு மட்டும்தான் அதிகாரி. தமிழ்நாட்டுக்கே அல்ல. அது என் அதிகாரத்தில் இல்லை என்றார்.

தொடரும்

# இந்தியா கச்சதீவைக் கொடுத்துவிட்டு, கைமாறாக அடியை வாங்கிக்கொண்டிருக்கிறது

...1972 இல் வெளியிட்ட இராமநாதபுரம் மாவட்ட விவரச் சுவடியானது, அதற்கு முன் ராஜா இராமராவ் வெளியிட்ட இராமநாதபுர மாவட்ட கையேடு 1915, 1929 மற்றும் 1933 ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட இராமநாதபுர மாவட்டத்துப் புள்ளி விவரங்கள் அடங்கிய பின்னிணை ப்பு 1899 இல் ஏ.ஜெ.ஸ்டு வர்ட்டு எழுதி சென்னை இராசதானியிலுள்ள திருநெல்வேலி மாவட்ட மானுவல் போன்ற பல்வேறு ஆதாரங்களைக் கொண்டு வெளியிடப்பட்டது.

அதில் இராமேசுவரத்திற்கு வடகிழக்கே 10 மைல் தொலைவில் கச்சதீவு இருக்கிறது என்றும் ஜமீன் ஒழிப்புக்கு முன்னர் இராமநாதபுரம் அரசர் இத்தீவை தனி நபர்களுக்குக் குத்தகைக்கு விட்டு கொண்டிந்தார். என்றும் இந்தத் தீவின் நிலவளவு எண் 1250 பரப்பளவு 285.20 ஏக்கர் என்றும் இந்தத் தீவு இராமேஸ்வரம் கர்ணத்தின் அதிகார எல்லைக்கு உட்பட்டது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இராமநாதபுரம் வட்டத்தில் உள்ள தீவு என்று கச்சதீவை அது குறிக்கிறது.


1956க்குப் பின்இந்திய அரசு தன் கடல் ஆதிக்க எல்லைக் கோட்டை 3கடல் மைல்களிலிருந்து 6 கடல் மைல் களாக விரிவுபடுத்தியது. இதே போன்று போட்டி அறிவிப்புகளை இலங்கை அரசும் வெளியிட சிக்கல் வலுவடைந்தது. கடந்த 1973 இல் அன்றைய பிரதமர் இந்திரா, இலங்கை சென்றார்.பின் இரு நாடு அதிகாரிகளும் கூடிப் பேசினார். 1974 இல் இலங்கைப் பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்கா, இந்தியா வந்தார். அண்டைய நாடுகளுடன் சமாதான சகவாழ்வு என்ற இந்தியாவின் கொள்கை ஒரு வகையில் நமக்கு சொந்தமான கச்சதீவு கைமாறக் காரணமாக இருந்தது. 1974 இல் இரு நாடுகளும் செய்து கொண்ட ஒப்பந்தப்படி கச்சதீவு இலங்கைக்கு சொந்தமாக்கப்பட்டது.

இந்த உடன்படிக்கையின் 5 ஆவது விதி இந்திய தமிழக மீனவர்கள், கச்சதீவுப் பகுதியில் மீன் பிடிக்கவும் கச்சதீவின் ஓய்வெடுக்கவும் மீன்பிடி வலைகளை உலர்த்திக்கொள்ளவும் வழி வகுத்திருந்தது. முதல்வர் ஜெயலலிதா எதிர்கட்சித் தலைவராக இருந்தபோது (2008) அ.தி.மு.க. பொதுச்செயலர் என்ற முறையில் கச்சதிவை மீட்க உச்சநீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தார். இந்த வழக்கு இன்றுவரை நிலுவையில் உள்ளது. முன்னாள் முதல்வர் கருணாநிதியும் 2013 இல் அதேபோல் உச்ச நீதிமன்றத்தை நாடியுள்ளார். இந்த வழக்குகளின் பிழிவு இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்படி கச்சதீவை இலங்கைக்குக் கொடுத்தது தவறு என்பது தான். இருநாடுகளுக்கிடையே ஏற்பட்ட உடன்படிக்கையை இல்லாது செய்வதற்கும் ஏற்கனவே வழங்கப்பட்ட ஒரு நிலப்பகுதியை மீட்டெடுக்கவும் இந்திய உச்சநீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளதா?

உச்சநீதிமன்றம் 1960 மார்ச் 14 ஆம் நாள் தனது தீர்ப்பை வெளியிட்டது.

இந்தியா 1947 இல் சுதந்திர அடைந்த போது மேற்கு வங்க மாநிலம் இந்தியாவுடன் இருக்க, கிழக்கு வங்க மாநிலம் கிழக்கு பாகிஸ்தானாக மாறியது. பின் இந்தக் கிழக்கு பாகிஸ்தான் வங்க தேசமாகத் தனி நாடானது. பேர்பாரி என்ற நிலப்பரப்பு சம்பந்தமாக இந்தியாவுக்குக்கும்- பாகிஸ்தானுக்கும் இடையே தொடக்க முதல் தகராறு இருந்துவந்தது. 1960 ஆம் ஆண்டுக்கு முன்பு 1950களில் மேற்கு வங்காளத்தில் உள்ள பெருபாரி என்ற பகுதியை அப்போதைய கிழக்கு பாகிஸ்தானுக்குக் கொடுக்க மத்திய அரசு முயன்ற போது அதை மேற்கு வங்க மாநில அரசு எதிர்த்ததோடு மட்டுமல்லாமல் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது. அப்போதைய மேற்கு வங்க மாநில முதல்வர் பி.சி.ராய் இந்த நடவடிக்கையை மேற்கொண்டார்.

இந்த உடன்படிக்கையின் விதிகளை ஆய்வுசெய்த நீதிமன்றம் அந்த உடன் படிக்கை இந்தியாவின் ஒரு பகுதியை விட்டுக்கொடுக்கும் உடன்படிக்கையே என்று முடிவு செய்தது. இப்படி ஒரு பகுதியை விட்டுக்கொடுக்க அரசுக்கு உரிமை உள்ளதா என்று ஆராய்ந்தபோது இவ்வாறு விட்டுக்கொடுப்பதற்குத் தேவையான திருத்தங்களை அரசியல் அமைப்புச் சட்டத்தில் செய்ய வேண்டும் என்றும் அவ்விதம் செய்யாத பட்சத்தில் இந்தியாவின் நிலப்பகுதிகளை வேறு நாட்டோடு உடன்படிக்கை செய்து அதை விட்டுக் கொடுக்கும் உரிமை அரசுக்கு இல்லை என்றும் ஒரு வரலாற்று முக்கியம் வாய்ந்த தீர்ப்பை வழங்கியது. அதன்படி பேர்பாரி நிலப்பரப்பு முழுவதும் இந்தியாவுடன் இணைந்தது.



மேற்கு வங்க அரசின் அன்றைய முதல்வர் பி.சி.ராய் அவர்களின் துணிச்சலான நடவடிக்கை காரண மாகப் பெருபாரி பகுதி இன்றும் இந்திய நாட்டின் ஒரு பகுதியாக இருந்து வருகிறது. உச்சநீதிமன்றத் தின் இந்தத் தீர்ப்பினை மேற்கொள் காட்டி 1974 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு சார்பில் விண்ணப்பம் செய்திருந்தால் கச்சதீவை மீட்டிருக்கலாம். ஆனால், அன்றைய முதல்வர் கருணாநிதி அதனைச் செய்யவில்லை.

உச்சநீதிமன்றத்தின் எட்டு நீதிபதிகள் கூடி வழங்கிய இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டு, 14 ஆண்டுகள் கழித்து கச்சதீவு உடன்படிக்கை இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் எழுதப்பட்டது. உச்சநீதிமன்றதீர்ப்பில் குறிப்பிடப்பட்டது போலவே கச்சதீவு உடன்படிக்கையும் பின்னேற்புச் செய்யப்பட வேண்டும் என்று கச்சதீவு ஒப்பந்தத்திலே குறிப்பிடப்பட்டு உள்ளது. ஆனால், கச்சதீவு உடன்படிக்கை தொடர்பாக அரசியல் அமைப்புச் சட்டத்தில் எந்த ஒரு திருத்தமும் இன்று வரை செய்யப்படவில்லை. எந்தத் திருத்தமும் செய்யப்படாத நிலையில் இந்தியா- இலங்கையோடு 1974,1976 இல் செய்து கொண்ட உடன்படிக்கைகள் சட்டபூர்வமானதல்ல..

இப்போது மத்திய அரசு என்ன நிலை எடுக்கப் போகிறது என்பதுதான் கேள்வி. இனப்படுகொலை நடத்தி இலட்சக்கணக்கான தமிழர்களைக் கொன்று குவித்த ஒரு ஆட்சித் தலைவருக்கு சிவப்புக் கம்பள வரவேற்பளிக்கும் மத்திய அரசு போர்க்காலத்தில் கொடுத்த வாக்குறுதிகளைக் காற்றில் பறக்க விட்ட இலங்கை ஜனாதிபதி ராஜபக்சவுவைத் தட்டிக்கேட்காத மத்திய அரசு கச்சதீவு சிக்கலை முடிந்துபோன விவகாரம் என்று இலங்கைக்கு ஆதரவாக உச்சநீதிமன்றத்தில் பதில் சத்தியப்பிரமாணம் செய்யுமா அல்லது உச்ச நீதிமன்றத்து எட்டு நீதிபதிகள் வழங்கிய வரலாற்றுப் புகழ்பெற்ற தீர்ப்பை ஒப்புக்கொள்ளுமா என்பதைப பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்

நக்கீரன்

முற்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

506

## நரகவாசம்



பிரம்மதத்தன் காசியை ஆண்ட போது அந்நகரில் புகழ்பெற்ற வியாபாரி ஒருவன் இருந்தான். அவனது மகன் மித்திரவிந்தன். அவன் புரிவதெல்லாம் பாவச்செயல்களே. இதனால் மனமுடைந்து அவனது தந்தை இறந்து போனான். அவனது தாயோ "இனிமேலாவது நல்லது செய்து புண்ணியம் சம்பாதி. கெட்ட காரியங்களைச் செய்யாதே" என்று அவனுக்கு அறிவுரை கூறினாள்.

ஒரு நாள் அவனது தாயார். இன்று பௌத்த விகாரத்தில் பிரசங்கம் செய்ய யாரோ வருகிறார்களாம். இரவு முழுவதும் பிரசங்கம் நடக்குமாம். போய் நீயும் கேட்டு விட்டு வா. உனக்கு நாளை செலவிற்கு பணம்

**அம்புலிமாமா கதைகள்**

கொடுக்கிறேன் என்றாள். மறுநாள் தன் செலவிற்குப் பணம் கிடைக்கிறதே என எண்ணி மித்திரவிந்தன் அவ்வாறே செய்வதாகக் கூறிப்போனான். ஆனால், அவன் பௌத்தவிகாரத்திற்குச் சென்று பிரசங்கமா கேட்டான்? பிரசங்கம் ஒரு புறம் நடந்து கொண்டிருக்க மித்திரவிந்தன் ஒரு மூலையில் போய் படுத்துத் தூங்கினான். காலையானதும் எழுந்து முகம் கழுவிக் கொண்டு வீட்டிற்கு வந்து சேர்ந்தான்.


அவன் தான் சொன்னபடி கேட்டதற்காக அவனது தாய் மகிழ்ந்து போய் நல்ல சமையல் செய்து சாப்பாடு போட்டாள். பிறகு அவன் தன் கைச் செலவிற்காகத் தாயாரிடம் இருந்து நூறு ரூபாய் வாங்கிக் கொண்டு வீட்டிலிருந்து கிளம்பி சென்றான்.

அந்த நூறு ரூபாயைக் கொண்டு வியாபாரம் செய்து சிறுகச்சிறுக இலாபம் அடைந்து முடிவில் இருபது லட்சம் ரூபாய் எப்படியோ சேர்த்து விட்டான். எல்லாம் அநியாய வழியில் சம்பாதித்தான். அந்தப் பணத்தோடு அயல்நாடுகளில் வியாபாரம் செய்ய அவன் கப்பலில் கிளம்பிச் சென்றான்.

கிளம்பு முன் தாயாரிடம் தான் மேலும் லாபம் அடைய அயல் நாடுகளுக்கு வியாபாரம் செய்யப் போவதாகக் கூறவே அவளும் "மகனே, நீ எனக்கு ஒரே மகன். இப்போது தான் உன்னிடம் நிறையப் பணம் இருக்கிறதே. இன்னமுமா சம்பாதிக்க வேண்டும்? இருப்பதை தான தர்மம் என்று புண்ணிய காரியங்களில் செலவு செய்து சுகமாக இருக்கலாமே" என்று கூறித் தடுத்தாள். ஆனால் அவன் தன் தாயின் பேச்சைக் கேட்காமல் அவளைப் பிடித்துக் கீழே தள்ளிவிட்டு இரண்டு



அடிகள் கொடுத்து அவளை எழுந்து வராமல் செய்து விட்டுக் கிளம்பிப் போனான். அவன் ஏறிச் சென்ற கப்பல்



எட்டாவது நாளன்று நடுக்கடலில் நின்று விட்டது. அது முன்னே செல்லவில்லை.

அது கண்டு கப்பலில் இருந்த மாலுமிகள் இந்தக் கப்பலில் யாரோ ஒரு பாவி இருக்கிறான். அவன் யார் எனத் திருவுளச் சீட்டு போட்டுக் கண்டு பிடிக்கலாம். அவனை ஒரு படகில் ஏற்றிக் கடலில் விட்டு விட்டால் நம் கப்பல் நகரும்" என்றன்.

மறுநிமிடமே திருவுளச் சீட்டு போடப்பட்டது. மித்திரவிந்தனின் பெயர்தான் முதல் தடவையில் வந்தது. மேலும் இரண்டு தடவைகள் போட்டுப் பார்த்த போதிலும் அவன் பெயர் தான் வந்தது. உடனே ஒரு படகைக் கடலில் இறக்கி அதில் மித்திரவிந்தனை வைத்து அவர்கள் விட்டு விட்டார்கள். அவனது படகு எங்கோ செல்ல அக்கப்பலும் அங்கிருந்து நகர்ந்தது.

மித்திரவிந்தனின் படகு வெகு நாள்களுக்குப் பிறகு ஒரு தீவை அடைந்தது. அவன் அந்தத் தீவில் இறங்கியதும் ஒரு படிக்கல் மாளிகையைப் பார்த்தான். அந்த மாளிகையில் நான்கு பெண் பிசாசுகள் வசித்து வந்தன. அவை ஒரு வாரகாலம் அனைத்து சுகபோகங்களை அனுபவித்தும் அடுத்த வாரம் தாம் செய்த பாவங்களுக்குப் பிராயச்சித்தம் செய்து கொண்டு கடும் விரதங்களைக் கடைப் பிடித்தும் வந்தன.

மித்திரவிந்தன் அப்பிசாசுகளுடன் ஒரு வார காலத்தைச் சுகமாகக் கழித்தான். அடுத்த வாரம் விரதம் என்றதும் அவன் அவற்றிடம் சொல்லிக் கொள்ளாமல் கூடத் தன் படகில் ஏறிக்கிளம்பி விட்டான்.

அப்படகு பல நாட்களுக்குப் பிறகு அவனை இன்னொரு தீவில் கொண்டு போய்விட்டது. அத்தீவில் எட்டு பிசாசுகள் இருந்தன. அவற்றோடும் ஒருவார காலம் சுகமாக இருந்து விட்டு அவன் தன் படகில் கிளம்பிச் சென்றான். அடுத்த தீவில் பதினாறு பிசாசுகளுடனும் அதற்கு அடுத்த தீவில் முப்பத்திரெண்டு பிசாசுகளுடனும் ஒவ்வொரு வாரமும் சுகமாகக் கழித்துவிட்டு வேறொரு தீவை அடைந்தான்.

அந்நதத் தீவில் ஒரு பெரிய நகரம் தென்பட்டது. அதைச் சுற்றிலும் பெரிய மதில் சுவரும் நான்கு தலை வாசல்களும் இருந்தன. அது உண்மையில் நரகலோகம். ஆனால் மித்திரவிந்தன் கண்களுக்கு அது அழகிய நகரமாகத் தோன்றியது அதற்குள் அவன் சென்றான்.

நகரில் ஒரு பெரிய வீதியில் ஒரு



மனிதன் நிற்க அவ்ன் தலை மீது ஒரு பெரிய சக்கரம் சுழன்று கெண்டிருந்தது. அது கனமாயும் அதன் ஆரக்கால்கள் வாள் போல் கூராகவும் இருந்தன. சக்கரம் அவனது தலைக்குள் நன்கு அழுந்திச் சுழன்றதால் ஆரக்கால்கள் தலை மீது பட்டு இரத்தம் வடியச் செய்துகொண்டிருந்தன. அவன் சங்கிலிகளால் கட்டப்பட்டிருந்தால் அவனால் சிறிது கூட ஒரு இடத்தில் இருந்து வேறொரு இடத்திற்கு அசைய முடியவில்லை. வலியால் அவன் மிகவும் பலமாக அலறிக் கொண்டிருந்தான்.

இதை எல்லாம் கண்டு மித்திரவிந்தன் அவனை அந்நகரத்தின் மன்னன் என நினைத்தான். அவன் தலை மீது சுழன்ற சக்கரம் கிரீடம் போல அவன் கண்களுக்குப்பட்டது. அவனைப் பிணைத்திருந்த சங்கிலிகள் தங்க ஆபரணங்களாக அவனுக்கு தோன்றின.

தனக்கு அது கிடைத்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்று தானும் அந்த நாட்டின் மன்னனாகி விடலாம் என்று நினைத்தான்.

இவ்வாறு நினைத்துக் கொண்டு மித்திரவிந்தன் அந்த மனிதனை அணுகி "ஜயா! உங்கள் தலை மீதுள்ள கிரீடம் அணிந்திருக்க அனுமதிப்பீர்களா?" என்று கேட்டான்.

அவனோ "இது கிரீடமல்ல, சக்கரம்" எனவே, மித்திரவிந்தன் "எனக்குக் கொடுக்க இஷ்டப்படாமல் இப்படி எதோ ஒரு சாக்கு சொல்கிறீர்களே" என்றான். இதைக் கேட்ட அம்மனிதன் தன் பாவத்திற்கு ஒரு முடிவு வந்து விட்டதென எண்ணி ஆகா, கொடுக்கிறேன் எனக்கூறி அந்த சக்கரத்தை எடுத்து மித்திர விந்தனின் தலை மீது வைத்து விட்டுப்போய் விட்டான். தாயை அடித்தவர்களுக்கு நகரத்தில் அப்படி ஒரு தண்டனை என மித்திரவிந்தன் அறிந்திருக்கவில்லை தான். சக்கரம் அவனது தலை மீது வைக்கப்பட்ட பின்பு தான் மித்திர விந்தனுக்கு அதன் வலியும் உண்மையும் புரிந்தது.

இந்திரனாக இருந்த போதிசத்வர் ஒருமுறை நரகலோகத்தைக் காண வந்தார். அவர் மித்திர விந்தன் இருந்த இடத்திற்கு வந்தபோது அவன் அவரிடம் "என் மீது இரக்கம் காட்டுங்கள். இந்தச் சக்கரத்தினிடம் இருந்து எப்போது நான் விடுதலை பெறுவேன்?" என்று கேட்டான்.

அப்போது போதிசத்வர் "உன்னிடம் எவ்வளவோ பணம் இருந்தும் மேலும் மேலும் சம்பாதிக்க வேண்டும் என்றே ஆசைப்பட்டாய். பிசாசுகளுடன் வசித்தாய். மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய உயர் நெறிகளை ஏற்கவில்லை. இதனை நீயே கேட்டு வாங்கிக் கொண்டாய். எனவே உன் ஆயுட் காலம் முடியும் வரை உனக்கு இந்த நரகவாசம்தான்" எனக் கூறினார்.

மித்திரவிந்தனும் கண்ணீர் வடித்துத் தன் விதியை நொந்தவாறே நரகத்தில் வசிக்கலானான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பில் இந்தியா இடித்துரைக்க வேண்டும்

## கூட்டமைப்பு எதிர்பார்ப்பு

(கொழும்பு)

**இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவான 13 ஆவது அரசியல் திருத்தம் தொடர்பில் இந்திய அரசாங்கம் தனது நிலைப்பாட்டை இன்று இந்தியா செல்லும் இலங்கை ஜனாதிபதியின் சகோதரர் அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம் தெளிவாக எடுத்துரைக்கும் என நம்புவதாக பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிறேமச் சந்திரன் தெரிவித்துள்ளார்.**

13 ஆவது திருத்தச் சட்டத்தில் இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளவுள்ள திருத்தங்கள் தொடர்பில் இந்தியா செல்லும் பசில் ராஜபக்ஷ இந்திய அரசிற்கு விளக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை அரசாங்கத்தின் இந்த செயற்பாடுகளுக்கு இந்திய அரசாங்கம் அங்கீகாரம் வழங்குமானால் மாகாண சபைகள் என்பது அர்த்த மற்றதாகி விடும்.

மாகாண சபைகளின் அதிகாரங்களை மத்திய அரசாங்கம் பறித்து எடுத்து வைத்து செயற்படுத்துவதென்றால் மாகாண சபைகள் அர்த்த மற்றவை.

இந்திய- இலங்கை ஒப்பந்தத்தைதமிழ்க்கட்சிகள் ஏற்றுக் கொண்டதற்கு காரணம் தமிழ் மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட வடக்கு, கிழக்கு பகுதிகள் ஒன்றாக இணைந்து ஒரே அரசாக இருப்பதற்கான அடிப்படையில்தான். ஆனால், இன்று அதுவும் இல்லாமல் செய்யப்படுகின்ற சூழ்நிலையில் உள்ளோம்.

பசில் ராஜபக்ஷவிடம் இந்திய அரசாங்கம் இவை பற்றிய தனது தீர்க்கமான முடிபுகளை கூறி அனுப்பும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம் என்றார்.

இதற்கு முன்னதாக நேற்று முன்தினம் அவசரமாக கூடிய பாதுகாப்பு பேரவை மாகாணங்களுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை பகிர்வதில் உள்ள சிக்கல் நிலைமைகள், கருத்துக்களைப் பரிமாறியது. இதன்போது எடுக்கப்பட்ட முக்கிய முடிபுகளுடன் அமைச்சர் பசில் இரண்டு நாட்கள் பயணமாக டில்லி செல்கிறார். (அ)




❖1295 -இங்கிலாந்துக்கு எதிராக ஸ்கொட்லாந்தும் பிரான்சும் கூட்டுச் சேர்ந்தன.

❖1610 - நியூபவுண்ட்லாந்து தீவை நோக்கிய தனது பயணத்தை ஜோன் கை பிறிஸ்டலில் இருந்து 39 குடியேறிகளுடன் கடற்பயணத்தை ஆரம்பித்தார்.

❖1687-ஐசாக் நியூட்டன் தனது புகழ்பெற்ற பிரின்சிப்பியா மாத்தமாட்டிக்கா நூலை வெளியிட்டார்.

❖1770 - ரஷ்யப் பேரரசுக்கும் ஒட்டோமான் பேரரசுக்கும் இடையில் செஸ்மா என்ற இடத்தில் போர் இடம்பெற்றது.

❖1811 - வெனிசுவேலா ஸ்பெயினிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

❖1830- பிரான்ஸ் அல்ஜீரியாவினுள் நுழைந்தது.

❖1865 - Salvation Army இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்டது.

❖1884 - ஜேர்மனி கமரூனை ஆக்கிரமித்தது.

❖1900 - அவுஸ்திரேலியப் பொதுநலவாய சட்டம் பிரித்தானிய நாடாளுமன்றில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

❖1945 - இரண்டாம் உலகப் போர்: பிலிப்பைன்சின் விடுதலை அறிவிக்கப்பட்டது.

❖1950 -கொரியப் போர்: அமெரிக்கப் படைகளுக்கும் வட கொரியாப் படைகளுக்கும் இடையில் முதலாவது மோதல் ஆரம்பமானது.

❖1950 - சியோனிசம்: யூதர்கள் அனைவரும் இஸ்ரேலில் குடியேற அனுமதி அளிக்கும் சட்டம் இஸ்ரேலில் கொண்டுவரப்பட்டது.

❖1951 -சந்தி இருவாயியை (இலத்திரனியல் கலம்) வில்லியம் ஷொக்லி கண்டுபிடித்தார்.

❖1954 -பிபிசி தன் முதல் தொலைக்காட்சிச் செய்தியை ஒளிபரப்பியது.

❖1962 - பிரான்சிடமிருந்து அல்ஜீரியா விடுதலை அடைந்தது.

❖1970 - கனேடிய விமானம் ஒன்று ரொறண்டோ விமான நிலையத்தில் மோதியதில் 109 பேர் உயிரிழந்தனர்.

❖1971 - ஐக்கிய அமெரிக்காவில் வாக்களிக்கும் வயது எல்லை 21 இலிருந்து 18 ஆகக் குறைக்கப்பட்டது.

❖1975 - போர்த்துக்கல்லிடம் இருந்து கேப் வேர்ட் விடுதலை பெற்றது.

❖1977 - பாகிஸ்தானில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலாவது பிரதமர் சுல்பிக்கார் அலி பூட்டோ பதவி இழந்தார்.

❖1998 - செவ்வாய்க் கோளுக்கு தனது முதலாவது விண்கலத்தை ஜப்பான் ஏவி யது.

❖ 2004 -இந்தோனேசியாவில் முதலாவது ஜனாதிபதி தேர்தல் இடம்பெற்றது.

❖2006 - வட கொரியா குறைந்தது இரண்டு குறுகிய தூரம் பாயும் ஏவுகணைகளையும், ஒரு ஸ்கட் ஏவுகணையையும் ஒரு நீண்ட தூரம் பாயும் ஏவுகணையையும் சோதித்தது.

**பிறப்புகள்**

❖1653 - தோமஸ் பிட், மதராசின் பிரித்தானிய ஆளுநர் (இ. 1726)

❖ **1996-குளோனிங் முறையில் முதலாவது பாலூட்டி, டோலி என்ற ஆடு ஸ்கொட்லாந்தில் பிறந்தது. (இ. 2003)**

**டோலி (இளைய வளர்ப்பு முறையில் உருவான ஆடு)**



டோலி என்ற பெண் இன ஆடு, இளைய வளர்ப்பு முறையில் உருவாக்கப்பட்ட முதல் பாலூட்டி விலங்கு ஆகும். இந்த வளர்ப்புச் செம்மறி ஆடு, 1996 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5 ஆம் திகதி பிறந்தது. பால்சுரப்பி என்பதனைக் குறிக்கவே, இந்த ஆட்டிற்கு இப்பெயர் சூட்டப்பட்டது.

ஸ்கொட்லாந்திலுள்ள கால்நடைக்குரிய கல்வி நிலையமான ரோசிலின் நிலையம் இவ் ஆட்டுக்குட்டியை உருவாக்கியுள்ளது. அதன் ஆராய்ச்சியாளர்களான இயன் வில்மட் மற்றும் கீத் கேம்பல் ஆகியோர் இணைந்து, இந்த வளர்ப்பு விலங்கான செம்மறி ஆட்டை உருவாக்கினர். டோலியை உருவாக்குவதற்கு, 277 கருமுட்டைகள் தேவைப்பட்டன. 278 ஆவது கருமுட்டையினால் தான், டோலி பிறந்தது.

முதலில் டோலிக்கு மூட்டுவலி நோய் தாக்கம் ஏற்பட்டது. பின்பு நுரையீரல் புற்றுநோய் ஏற்பட்டது. எனினும், இதன் பால்மடிகளில் இருந்து திசுக்கள் எடுக்கப்பட்டு, உறைய வைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டன. தொடர்ந்து ஆறரை ஆண்டுகள் வாழ்ந்த இந்த செம்மறியாடு 2003 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி உயிரிழந்தது.

## அமைச்சர்களின் பிள்ளைகளுக்கும் சட்ட ஒழுக்கக்கோவை தேவை

### சஜித் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் அமைச்சர்களின் பிள்ளைகளுக்கு சட்ட ஒழுக்கக் கோவை கிடையாது. ஆனால், இவ்வாறான விடயங்களை முழு நாட்டுக்கும் வெளிப்படுத்தும் ஊடகங்களுக்கு மட்டும் ஒழுக்கக் கோவை அவசியமென அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றமை மிகக் கேவலமான விடயம் என ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மலசலகூட கதவு என நினைத்து விமானத்தின் கதவைத் திறக்க முயற்சித்த குடிபோதையில் இருந்த கிரிக்கெட் வீரர் தொடர்பில் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு எடுக்கும் நடவடிக்கை தொடர்பில் அவதானத்துடன் இருக்கின்றோம்.

இந்த கிரிக்கெட் வீரரின் நடத்தை மற்றும் செயற்பாடுகள் குறித்து இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கும் மற்றும் முழு நாட்டிற்குமே நன்கு தெரியும்.

நாட்டை பிரதிநிதித்துவப்படுத்திக் கொண்டு போட்டிக்குச் சென்ற இந்த வீரர் 230 பயணிகளை ஏற்றிய விமானத்தில் குடிபோதையில் அநாகரிகமாக ஒழுக்கமின்றி நடந்துகொண்டமை முழு நாட்டுக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு பெரிய பதவியில் இருக்கும் நபர்களின் பிள்ளைகளுக்கு ஒழுக்கக்கோவை சட்ட ஒழுங்கு கிடையாது. இவ்வாறான செயற்பாடுகளை முழு நாட்டுக்கும் வெளிப்படுத்தும் ஊடகங்களுக்கு மட்டும் ஒழுக்கக் கோவை அவசியமென அறிமுகப் படுத்தப்பட்டுள்ளமை கேவலமான விடயம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தனது மகன் ஓடும் விமானத்தின் கதவைத் திறந்த விவகாரம் ஒரு சின்ன விடயம் எனவும் அதனை ஊடகங்களே முக்கியத்துவம் கொடுத்து பிரசுரித்து பெரிய பிரச்சினையாக்கியுள்ளமை கண்டிக்கத்தக்கது எனவும் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## பொதுநலவாய நாடுகளின் பொதுச் செயலாளர் இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் பிரதிப் பொதுச் செயலாளர் மாசாரீ மாவபா இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டின் ஏற்பாடுகளையும் நடவடிக்கைகளையும்கண்காணிக்கும்நோக்கில்அவர் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் நிகழ்வு ஏற்பாட்டுக்குழுவையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

தேசிய விசாரணைகளை மேம்படுத்துவது தொடர்பில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவிற்கு பயிற்சி அளிக்கும் நிகழ்வு ஒன்றும் நடத்தப்படவுள்ளது.

மனித உரிமை மீறல் விசாரணைகளைக் கிரமமான முறையில் நடத்துவது குறித்து விளக்கம் அளிக்கப்படவுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாக்கு குவிப்புக்கு ஆயத்தம்

வடக்கு மாகாணசபைத் தேர்தல் அறிவிப்பு அடுத்த சில நாட்களில் வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப்படும் சூழலில், இந்தத் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் பற்றிய பரபரப்பான தகவல்கள் பல, நாளுக்கு நாள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

இந்தத் தேர்தலில் நாம் விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே வெற்றி பெறப்போகிறது. என்று 13-வது திருத்தச் சட்டத்தைப் பலவீனப் படுத்தும் யோசனைகள் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டதாக தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

கிளிநொச்சியில் வைத்து, தமிழர்களின் மனோநிலையை தமக்கு நன்றாகவே தெரியும் என்று குறிப்பிட்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தான், அமைச்சரவைக் கூட்டத்திலும் இந்தக் கருத்தைக் கூறியுள்ளார். தமிழ்தேசியக் கூட்டமைப்பிற்கே வெற்றி கிடைக்கும் என்று தெரிந்த போதிலும், இனி மேலும் இழுத்தடிக்க முடியாத நிலையில், அரசாங்கம் வடக்கில் தேர்தலை நடத்த முடிவு செய்துள்ளது. ஆனாலும், இந்தத் தேர்தலில் அரசதரப்பு, தனது பக்கத்தில் வேட்பாளர்களாக நிறுத்துவதற்கு முன்னாள் விடுதலைப் புலிகளைக் கெஞ்சுகின்ற அளவுக்குச் சென்றிருக்கிறது. இந்தத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து ஈ.பி.டி.பி போட்டியிடப்போகிறதோ இல்லையோ, எப்படியும் வேட்பாளர்களை நிறுத்த வேண்டிய நிலையில் அரசதரப்பு உள்ளது.

# சிங்கம், புலியை வேட்டைக்கு அனுப்புவதன் நோக்கம் நிறைவேறுமா ?

ஆளும் கட்சியின் சார்பில் போட்டியிட 53 பேர் விண்ணப்பித்துள்ளனர். அவர்களுக்கான நேர்முகத் தேர்வுகள் நடத்தப்பட்டுள்ளன. இந்தத் தேர்தலில், அரசதரப்பு தனது கட்சியினரை, ஆதரவாளர்களை நிறுத்துவதற்குப் பதிலாக, விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளிகளை, வேறு கட்சிகளில் உள்ள அதிருப்தியாளர்களையே அதிகம் நம்புவதாகத் தெரிகிறது.

ஈ.பி.டி.பி.யின் சார்பில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட- முன்னாள் அதிபர் சிறீபதி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ். மாநகரசபைக்குத் தெரிவு செய்யப்பட்ட முடியப்பு றெமீடியஸ், சாவகச்சேரி பிரதேச சபைக்கு ஐ.தே.கட்சி சார்பில் தெரிவான குமார் சர்வேந்திரன் ஆகியோர் ஆளும் கட்சியின் சார்பில் இம்முறை போட்டியிடவுள்ளனர்.

இன்னும் பலரை தமது பக்கம் இழுக்கும் முயற்சியில், ஆளும் கட்சி ஈடுபட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதாவது, எந்தக் கட்சியின் மூலமும், எந்த முகத்துடனும் வெற்றி பெற்றவர்களை அல்லது பிரபலமானவர்களைக் கொண்டுவந்து ஆளும் கட்சியைப் பலப்படுத்துவதில் அரசதரப்பு தீவிரமாக உள்ளது. அடுத்து, அரசதரப்பின் குறியாக உள்ளது, விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளிகள். நீண்டகாலமாகவே இதுபற்றிய பல்வேறு செய்திகள், வெளியாகி வந்துள்ளன.

வடக்கு முதல்வர் பதவிக்கு கே.பி. எனப்படும் செல்வராசா பத்மநாதனை அரசதரப்பு நிறுத்தவுள்ளதாக, பலகாலமாக உலாவிய வதந்தி, இப்போது வலுவிழந்துவிட்டது. அவரையும், வடக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடவைக்க முயற்சிகள் இடம் பெற்றதாகவே தகவல்கள் வெளியான போதிலும், அவர் அதில் இருந்து ஒதுங்கி நிற்பதாகவே தெரிகிறது.

விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பேச்சாளராக இருந்த தயா மாஸ்டரை, அரசதரப்பு, முதல்வர் பதவிக்கு முன்னிறுத்தவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகின. எனினும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி யாரையுமே மாகாணசபைத் தேர்தலில் முதல்வர் வேட்பாளராக அறிவிப்பதை தவிர்த்து வருவது குறிப்பிடத்தக்கது.

தயா மாஸ்டர், சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்டுள்ளதும், அவர் இந்தத் தேர்தலில் போட்டியிடவுள்ளதும், உறுதியானபோதிலும், அவர் தான், முதல்வர் பதவிக் கான வேட்பாளர் என்று அறிவிக்கப்பட வாய்ப்பில்லை.

மேலும், அண்மையில் புனர்வாழ்வு முடிந்து விடுதலை செய்யப்பட்ட விடுதலைப்புலிகளின் மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளராக இருந்த தமிழினியும், ஆளும் கட்சியின் சார்பில் போட்டியிடவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அவர் அரசியலில் ஈடுபடப் போவதாகவும், அதில் ஆர்வம் காட்டவில்லை என்றும் பல்வேறு குழப்பமான தகவல்கள் வெளியாகின.



தமிழினியை அரச தரப்பு வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட வைக்க முயற்சிக்கிறது என்பதில் சந்தேகமில்லை. அரசதரப்பின் பட்டியலில், மொத்தம் ஆறு முன்னாள் போராளிகள் இடம்பெறவுள்ளதாக கூறப்படும் நிலையில், விடுதலைப் புலிகளின் தளபதிகளான கேணல் ராம், லெப்.கேணல் நகுலன் ஆகியோரையும் இந்தத் தேர்தலில் அரசதரப்பு, களமிறக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகின.

அம்பாறை கஞ்சிகுடிச்சாறில் தங்கியிருந்த புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான கேணல் ராம் மற்றும் லெப்கேணல் நகுலன் ஆகியோர், 2009 மே, 18 ஆம் நாள் விடுதலைப் புலிகள் இயக்கம் முள்ளிவாய்க்காலில் அழிக்கப்பட்ட பின்னர், படையினரிடம் சிக்கியிருந்தனர். இந்தத் தேர்தலில் முன்னாள் புலிகளின் பலர் போட்டியிடப் போகின்றனர் என்பது, தெளிவாகவோ, உறுதியாகவோ இன்னமும் தெரியவராத போதிலும் முன்னாள் போராளிகளை போட்டியிட வைக்கும் முயற்சிகள் தீவிரமாக மேற்கொள்ளப்படுகின்றன.

அரசதரப்பு எதற்காக முன்னாள் போராளிகளை தனது வேட்பாளர் பட்டியலில் முன்னிறுத்த முனைகிறது என்ற கேள்வி பலரிடம் உள்ளது. தாம் முன்னாள் போராளிகளை அரவணைத்து வைத்திருக்கிறோம் என்று வெளியுலகிற்கு காட்டுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறதா? அல்லது புலிகள் இயக்கத்தின் மூலம் மக்களி டையே செல்வாக்குப் பெற்ற முன்னாள் போராளிகளை வைத்து தன்னைப் பலப்படுத்திக்கொள்ள அரசாங்கம் முனைகிறாதா? அல்லது புலிகள் இயக்க முன்னாள் போராளிகளை வைத்து, தமிழ்த் தேசயக் கூட்டமைப்பைப் பலவீனப்படுத்த முனைகிறதா? அல்லது வேட்பாளர்களை நிறுத்த வழியின்றி இவ்வாறு செய்கிறதா? இவ்வாறு பல கேள்விகள் இருக்கின்றன.

எது எவ்வாறாயினும், விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளின் நன்மைக்காக அரசதரப்பு, அவர்களுக்கு வலை வீசவில்லை என்பது மட்டுமே உண்மை. அதே வேளை, சிக்கலான சூழ்நிலைகளில் வெளியே வந்துள்ள பல முன்னாள் போராளிகள் அரசதரப்பு அதிகாரிகளுக்கு அகப்படாமல் தப்பிக்க வழிதெரியாமல் உள்ளதையும் மறுக்க முடியாது. அரசதரப்பு எதற்காக தம்மைக் கையாளப் பார்க்கிறது என்று விளங்கியோ விளங்காமலோ, இந்த அரசியல் களத்தில் நுழைந்து விட்டாலும் கூட, இவர்களால் தேர்தல் களத்தில் வெற்றிபெற முடியுமா என்ற பலமான கேள்வி உள்ளது. ஏனெனில், விடுதலைப் புலிகளின் பக்கத்தில் இருந்து அரசதரப்புக்குத் தாவியவர்களில் பெரும்பாலானோரால், தேர்தலில் வெற்றிபெற முடியவில்லை.

விடுதலைப் புலிகளின் அழிவுக்குப் பின்னர், 2010ஆம் ஆண்டு, நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து அரசதரப்புக்கு மாறி- போட்டியிட்ட, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனகரத்தினம், தங்கேஸ்வரி, கதிர்காமர், சிவநாதன் கிஷோர் போன்றவர்களால் வெற்றி பெற முடியவில்லை. விடுதலைப் புலிகளிடம் இருந்து பிரிந்த கருணா கூட தேர்தல் மூலம் இதுவரை போட்டியிட்டுத் தெரிவாகவில்லை.

ஒரு காலத்தில் கிழக்கில் உள்ள மக்களிடையே பெரிய ஹீரோவாக கருதப்பட்ட கருணாவின் சகோதரியால் மாகாணசபைத் தேர்தலில் கூட வெற்றி பெறமுடியவில்லை. புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிந்து சென்றவர்களில், கிழக்கின் முன்னாள் முதல்வர் பிள்ளையானைத் தவிர, வேறெவரும் முறையான தேர்தல் மூலம் தெரிவாகவில்லை.

எனவே, விடுதலைப்புலிகளின் பிரமுகர்களாக, தளபதிகளாக இருந்தவர்களை தமது சார்பில் போட்டியிட வைக்கும் அரசதரப்பினால், இவர்களை வைத்து எந்தளவுக்குத் தமது இலக்கினை அடைய முடியும் என்பது சந்தேகம்தான். ஏனென்றால், தாம் பார்த்த விடுதலைப் புலிகள், அரசதரப்பில் இருக்கின்றனர் என்பதற்காக வடக்கிலுள்ள மக்கள் அவர்களுக்கு வாக்களிப்பார்கள் என்று கருதுவதற்கு இடமில்லை.

தயாமாஸ்டர், தமிழினி, நகுலன், ராம் எவர் நிறுத்தப்பட்டாலும், அவர்களை வடக்கிலுள்ள மக்கள் தாம்பார்த்த விடுதலைப் புலிகளாக நோக்கி, வாக்களிக்கப் போவதில்லை. அவர்களுக்கு அத்தகைய அடையாளத்தையும் பெறுமானத்தையும் கொடுத்தது விடுதலைப்புலிகள் இயக்கம் தான்.

அரசதரப்புக் களமிறங்கப் போகும் வேட்பாளர்கள் பெறப்போகும் வாக்குகள், வடக்கு மக்களின் மனோநிலயை வெளிச்சம் போட்டுக் காட்டப் போகிறது. ஒருவேளை வடக்கு மக்களே முன்னாள் புலிகளை ஆதரித்தால், அந்த வெற்றி, அரசுக்கா- புலிகளுக்கா சொந்தம் என்ற கேள்வி வரும்.

முன்னாள் புலிகளை வைத்து வாக்குகளை சேகரிக்க நினைத்தால், இந்த சிக்கலான நிலையை அரசு எதிர்கொள்வதைத் தவிர்க்க முடியாது. இன்னொரு பக்கத்தில், அவர்களை வடக்கு மக்கள் நிராகரித்துவிட்டால், அரசதரப்புடன் இணைந்த புலிகளை தமிழ்மக்கள் நிராகரித்து விட்டதாகவும், புலிகளைப் புலிகளாகப் பார்க்கவே அவர்கள் விரும்புவதாகக் கருதும் நிலையும் ஏற்படும். முன்னாள் புலிகளைக் களமிறக்குவதன் மூலம் அரசாங்கம், சில அனுகூலங்களை அடைய முனைந்தாலும், சிக்கலான பல விவகாரங்கள் உள்ளன என்பதை மறுக்க வியலாது.

-கே.சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மத்திய வங்கி
## வட மாகாண அலுவலகம்

## தடை செய்யப்பட்ட திட்டங்களிலிருந்து விலகியிருங்கள் ! பங்கேற்றால் நீங்கள் உங்களது பணத்தை இழப்பதுடன் சிறை செல்லவும் நேரும்

"திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 83இ பிரிவின்படி,"

**பெறப்படும் நன்மைகள் பங்கேற்பவர்களின் எண்ணிக்கையிலான அதிகரிப்பில்**

**அல்லது**

**இத்திட்டத்தில் பங்கேற்பவர்களால் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்பின் அதிகரிப்பில்**

தங்கியிருக்கின்ற திட்டங்களில் பணத்தை அல்லது நாணயப் பெறுமதியை பங்களிப்புச் செய்வது சட்ட விரோதமாகும்.

இத்திட்டங்களில் பங்கேற்பவர்கள் கூடிய நன்மைகளைச் சம்பாதிப்பதற்காக புதிய உறுப்பினர்களை அறிமுகப்படுத்துவதற்கு கட்டாயப்படுத்தப்படுவதுடன் இணையத்தளங்கள் ஊடாக இத்திட்டங்களை பரப்பும் போக்கும் காணப்படுகிறது.

**அவதானமாக இருங்கள் !**

* இத்திட்டத்தில் பங்கேற்கும் எந்த நபரும் குற்றவாளியாகக் காணப்பட்டால் மூன்று ஆண்டுகளை விஞ்சாத சிறைத் தண்டனைக்கும் அல்லது ரூபா ஒரு மில்லியனை விஞ்சாத தண்டப் பணத்திற்கும் அல்லது சிறைத் தண்டனை மற்றும் தண்டப் பணம் இரண்டுக்கும் உள்ளாவர்
* எந்தவொரு ஏனைய நபருக்கு சேதம் அல்லது தீங்கை ஏற்படுத்துவதற்கு வேண்டுமென்றோ அல்லது தெரிந்து கொண்டோ செய்யப்பட்ட குற்றங்களைப் பொறுத்தமட்டில் தண்டனை மிகவும் கடுமையாக இருக்கும்

எனவே,

* தடை செய்யப்பட்ட திட்டங்களுக்கு இல்லை; என்று கூறுவதன் மூலம் கஷ்டப்பட்டு உழைத்த உங்களது பணத்தை பாதுகாத்துக் கொள்ளுங்கள்
* இத்திட்டங்களில் பங்கேற்பதனூடாக இலகுவாகப் பணத்தைச் சம்பாதித்தல் இயலாதென்பதை விளங்கிக் கொள்ளுங்கள்

(C-3871)

**பிரமிட் அமைப்புக்கள் போன்ற தடை செய்யப்பட்ட திட்டங்களில் பங்கேற்பது சட்ட விரோதமானதாகும்!**

எனவே, அத்தகைய வஞ்சகமான மற்றும் மோசடியான திட்டங்களிலிருந்து விலகியிருங்கள் !!

**மேலதிக தகவல்களுக்கு: 021 222 1855/6**

**இது பொதுமக்களின் நன்மை கருதி இலங்கை மத்திய வங்கியால் விடுக்கப்படும் செய்தி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்டுசுட்டான் பிரதேச சபையை தனியாக அமைக்குக

(முல்லைத்தீவு)

**25 வருடங்களாக புதுக்குடியிருப்பு பிரதேச சபையுடன் இணைந்து ஒட்டுசுட்டான் பிரதேச சபை உப அலுவலகமாக இயங்கி வருவதால் இப்பிரதேச மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதனால் இப்பிரதேச சபையைத் தனியாக அமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு மாவட்டம் 1979 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து புதுக்குடியிருப்பு பிரதேச சபையுடன் இணைந்தே ஒட்டுசுட்டான் பிரதேச சபை இயங்கி வருகின்றது.

ஆயினும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துடன் முன்னர் சேர்ந்து இயங்கி வந்த ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம் 1989 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தனியாக இயங்க ஆரம்பித்து விட்ட நிலையிலும் இப் பிரதேச சபைகள் பிரிந்து செல்லவில்லை.

சுமார் 25 வருடங்களாக புதுக்குடியிருப்பு பிரதேச சபையுடன் இணைந்து ஒட்டுசுட்டான் பிரதேச சபை உப அலுவலமாக தொழிற்பட்டு வருகின்றது. இதனால் ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்திகள் பாதிக்கப்பட்டுள்ளதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேசம் 350 சதுர கிலோ மீற்றர் பரப்பளவையும் 11 ஆயிரத்து 660 குடும்பங்களையும் கொண்டுள்ளதுடன் 19 கிராம சேவகர் பிரிவுகளையும் கொண்டுள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேசம் 618 சதுர கிலோமீற்றர் பரப்பளவையும் 5 ஆயிரத்து ,483 குடும்பங்களையும் கொண்டுள்ளது. இங்கு 27 கிராம சேவகர் பிரிவுகள் காணப்படுகின்றன.

இந்நிலையில் ஒட்டுசுட்டான் பிரதேச சபை ஒரு மாதத்தில் மட்டும் சுமார் 10 இலட்சம் ரூபா வருமானத்தை ஈட்டுகின்றது. புதுக்குடியிருப்பு பிரதேச சபையுடன் இணைந்து உப அலுவலகமாக செயற்பட்டு வரும் ஒட்டுசுட்டான் பிரதேச சபையின் வருமானங்கள் அனைத்தும் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கே சேருகின்றன.

இதனால் அபிவிருத்தியில் ஒட்டுசுட்டான் பிரதேசம் பின்தங்கியுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஏனைய பிரதேசங்களில் பிரதேச சபைகள் தனித்தனியாகவே இயங்கி வருகின்றபோதும் புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் ஆகிய இரண்டு பிரதேசங்கள் மட்டுமே சேர்ந்து இயங்கி வருகின்றன.

எனவே, ஒட்டுசுட்டான் பிரதேச சபையினை தனியாக இயக்க முல்லை.மாவட்ட அரசாங்க அதிபரும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஒட்டுசுட்டான் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-9-267)

# வவுனியாவில் மட்பாண்ட உற்பத்திகள் வீழ்ச்சி

## வியாபாரிகள் சுட்டிக்காட்டு



இலங்கையில் உள்ள மாவட்டங்களில் வவுனியாவில் மண் சட்டி, பானை பாவிப்போர்களின் தொகை குறைவடைந்து செல்வதனால் மண் பானை, சட்டி விற்பனை செய்யும் கடைகள் சில காணப்படுகின்றபோதும் அதனை கொள்வனவு செய்வோரின் எண்ணிக்கையும் குறைவாகவே உள்ளதாக வியாபாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அலுமினிய பாத்திரங்களின் அதிகளவான பாவனையே மண் பாத்திரங்களின் விற்பனையில் பாதிப்பை ஏற்படுத்தியதாகவும் அலுமினிய பாத்திரங்கள் பாவிப்பதனால் காஸ் செலவு குறைவு. நேர செலவு குறைவு. ஆனால், அவற்றால் ஏற்படும் பக்கவிளைவு பற்றி யாரும் சிந்திப்பதில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

அண்மையில் சிறுநீரகம் முதலான நோய்களின் அதிகரிப்புக்கு அலுமினிய பாத்திரங்களின் பாவனையும் காரணம் என கூறப்படுகின்றது.

வவுனியாவில் ஒரு சில இடங்களில் மட்டுமே மண்சட்டி, பானைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவர்களை ஊக்குவிக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேவேளை மண்சட்டி, பானைகளின் பாவனையின் அவசியம் பற்றி மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என மேலும் குறிப்பிட்டுள்ளனர். (ம-250)

# 99 இலட்சம் ரூபா செலவில் பச்சிலைப்பள்ளியில் மைதானம்

(கிளிநொச்சி)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் 99 இலட்சம் ரூபா செலவில் விளையாட்டு மைதானம் அமைக்கும் பணி நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ் விளையாட்டு மைதானம் அமைக்கும் பணியை பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் ஆரம்பித்து வைத்து உரையாற்றியபோது,

மாபெரும் அழிவை சந்தித்த ஒரு சமூகத்தின் மேம்பாட்டை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்திச் செயற்பாடானது சமூகத்தின் அனைத்து செயற்பாடுகளின் மேம்பாட்டையும் உள்ளடக்கியதாக அமைய வேண்டும்.

அந்த கொள்கைக்கமைவாக இளம் தலைமுறையினரின் ஆரோக்கியமான எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு நாம் எமது பிரதேசங்களில் விளையாட்டுத்துறையின் மேம்பாட்டுக்கும் முக்கியத்துவம் அளித்து வருகின்றோம்.

அதன் ஒரு அங்கமாகவே பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் பொது விளையாட்டு மைதானமொன்றை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கமைவாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நெல்சிப் திட்டத்தின் கீழான நிதியுதவியுடன் சுமார் 99 இலட்சம் ரூபா செலவில் இவ் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடமாகாணத்திலேயே நெல்சிப் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படுகின்ற விளையாட்டு மைதான புனரமைப்பிற்கான முதல் வேலைத் திட்டமாகவும் இத்திட்டம் அமைந்துள்ளது. அத்தோடு பச்சிலைப் பள்ளி பிரதேசத்தில் அதிகளவான விளையாட்டுக்கழகங்கள் இயங்கி வந்தபோதும் பெருமளவான இளைஞர்கள் விளையாட்டில் ஆர்வம் காட்டுகின்ற நிலையிலும் அக்கழகங்களின் சீரான செயற்பாடுகளுக்கு ஏதுவான விளையாட்டு மைதானங்களை இதுவரை அமைந்திருக்கவில்லை.

அதனால், ஆரம்பிக்கப்பட்டுள்ள இவ் வேலைத்திட்டத்தினூடாக இப் பிரதேசத்திற்கென ஒரு சிறப்பான விளையாட்டு மைதானம் உருவாக்கம் பெறவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ம-6)

# வீதி புனரமைக்கப்படாமையால் பயணிகள் அசௌகரியம்



(குருமன்காடு)

வவுனியா நெளுக்குளத்திலிருந்து பாவற்குளம் செல்லும் வீதி பல ஆண்டுகளாகியும் திருத்தப்படவில்லை. இதனால் இவ்வீதியின் ஊடாக பயணம் செய்வோர் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

பாரதிபுரம் இராசேந்திரகுளம், சூடுவெந்தபுலவு என பல கிராமங்களுக்கும் இவ்வீதியே பிரதான வீதியாக காணப்படுகின்றது.


தற்போது இவ் வீதி புழுதியால் நிறைந்துள்ளது. இதனால் துவிச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள் புழுதியில் தோய்ந்து செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது. அத்துடன் வைத்தியசாலைக்கு செல்பவர்கள் பெரும் துன்பங்களை அனுபவித்து செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது.




பாடசாலை செல்கின்ற மாணவர்கள் புழுதி தோய்ந்த ஆடையுடன் செல்வதாக பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இப் பிரதேசம் பல தேர்தல்களை கண்ட போதும் இவ் வீதியை திருத்துவதற்கு யாரும் நடவடிக்கை எடுக்கவில்லை என பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ம-250)







மஹிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கு வேலைத்திட்டங்களின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் அமுலாக்கத்தில் வட மாகாண வீதி இணைப்புத் திட்டத்தின் ஊடாக புனரமைக்கப்பட்ட மன்னார் மாவட்டத்தின் சில வீதிகள் மக்கள் பாவனைக்காக கடந்த செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டன. இவ் வீதி திறப்பு நிகழ்வுக்காக விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், அமைச்சர் ரிஷாட் பதியுதீன், அமைச்சர் ஏ.எல்.எம் அதாவுல்லா மற்றும் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் நாடாவெட்டி ஆரம்பித்து வைப்பதுடன், வீதியின் பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்வதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் நிரந்தர சமூகசேவை உத்தியோகத்தரை

# நியமிக்க கோரிக்கை

(முல்லைத்தீவு)

**கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திற்கு இரண்டு வருடங்களாகியும் நிரந்தர சமூக சேவை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படாது, ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் கடமையாற்றுகின்ற உத்தியோகத்தர்கள் வாரத்தில் மூன்று நாட்கள் மட்டுமே பணியில் ஈடுபடுவதால் சேவை போதுமானதாகவில்லை என மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திற்கு நிரந்தர சமூக சேவை உத்தியோகத்தரை நியமிக்க வேண்டியுள்ளது.

கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் மீள்குடியேற்றத்தின் பின்னர் இயங்கத் தொடங்கி இரண்டு வருடங்களாகிவிட்டது. ஆனால், இதுவரை சமூக சேவை உத்தியோகத்தர் எவரும் நியமிக்கப்படவில்லை. இதற்கு பதிலாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் கடமையாற்றுகின்ற சமூக சேவை உத்தியோகத்தர் வாரத்தில் மூன்று நாட்கள் மட்டுமே பணியில் ஈடுபடுகின்றபோதும் இச் சேவை மக்களுக்கு போதுமானதாக வில்லை.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 5 ஆயிரத்து 483 குடும்பங்களில் 17 ஆயிரத்து 879 பேரும் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 12 ஆயிரத்து 602 குடும்பங்களில் 40 ஆயிரத்து 69 பேரும் வாழ்கின்றனர்.

இதற்கமைய கரைதுறைப்பற்று பிரதேசத்தில்தான் மக்கள் தொகை அதிகமாக உள்ளது.

இந்நிலையில் சனத்தொகை அதிகமாகவுள்ள பிரதேசத்திற்கு ஏன் இதுவரை சமூக சேவை உத்தியோகத்தர் நியமிக்கப்படவில்லை என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

ஒவ்வொரு பிரதேசத்திலும் மாற்றுத்திறனாளிகளின் நலவாழ்வுத் திட்டம், சுயதொழில் வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொடுத்தல், வாழ்வாதார உதவிகள், மாதாந்த உதவிப் பணம், அனர்த்தக் கொடுப்பனவுகள் ஆகியவற்றை பெற்றுக் கொடுக்க மக்களை இனங்கண்டு நடவடிக்கை எடுப்பது சமூக சேவை உத்தியோகத்தரின் கடமை ஆகும்.

எனவே, கரைதுறைப்பற்று பிரதேசத்திற்கு தனியாக சமூக சேவை உத்தியோகத்தரை நியமிக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். (ம-9-267)

## கசிப்பு உற்பத்தி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கொக்குத்தொடுவாய் கிராமத்தில் கசிப்பு உற்பத்தி செய்யப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கொக்குத்தொடுவாய் கிராமத்தில் வடக்கு, தெற்கு, மத்தி ஆகிய பகுதிகளில் 450 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இங்கு 6 மாதங்களுக்கு மேலாக கசிப்பு உற்பத்தி நடைபெற்று வருவதாகவும் இதனால் கிராமங்களில் பிரச்சினைகள் உருவாக வாய்ப்புகள் உள்ளதாகவும் பிரதேச வாசிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

எனவே, சம்பந்தப்பட்ட தரப்பினர் கிராமங்கள் தோறும் சோதனைகளை மேற்கொண்டு கசிப்பு உற்பத்தியாளர்களை இனங்கண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடப்பட்டுள்ளது. (ம-9-267)




## 2009-2013 மே வரை முல்லைத்தீவு மாவட்டத்தில் 1,25,984 பேர் மீள்குடியமர்வு.

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இறுதி யுத்தத்தின்போது இடம்பெயர்ந்து கடந்த 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி வரை, 39 ஆயிரத்து 352 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 25 ஆயிரத்து 984 உறுப்பினர்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர் என முல்லைத்தீவு மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

இதற்கமைய பிரதேச செயலக பிரிவுகளின் அடிப்படையில் துணுக்காயில் 3 ஆயிரத்து 584 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 200 உறுப்பினர்களும் மாந்தை கிழக்கில் 2 ஆயிரத்து 687 குடும்பங்களை சேர்ந்த 8 ஆயிரத்து 575 உறுப்பினர்களும் ஒட்டுசுட்டானில் 5 ஆயிரத்து 483 குடும்பங்களை சேர்ந்த 17 ஆயிரத்து 879 உறுப்பினர்களும் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

கரைதுறைப்பற்றில் 12 ஆயிரத்து 602 குடும்பங்களை சேர்ந்த 40 ஆயிரத்து 69 உறுப்பினர்களும் புதுக்குடியிருப்பில் 11 ஆயிரத்து 660 குடும்பங்களை சேர்ந்த 37 ஆயிரத்து 72 உறுப்பினர்களும் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

வெலிஓயாவில் 3 ஆயிரத்து 336 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 189 உறுப்பினர்களும் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். (ம-9-267)

## வருடாந்த பொங்கல் விழா


(குருமன்காடு)

வவுனியா புளியங்குளம் பழையவாடி கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ உயிர்மீட்ட வீரபத்திரர் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 19 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதி புதன்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் திருவிழாவில் தினமும் விசேட பூஜை வழிபாடுகள் இடம் பெற்று 19 ஆம் திகதி பொங்கல் விழா இடம்பெறும்.

பொங்கல் அன்று காவடி, பாற்செம்பு, தீச்சட்டி, தீமிதிப்பும் இடம்பெறவுள்ளன. (ம-250)

## பாலத்தில் வெடிப்பு; பயணிகள் அச்சம்



(படம்:-எம்.சௌரிகாந்தன்)

ஏ-9 வீதியில் உமையாள்புரத்திற்கும் ஆனையிறவுக்கும் இடைப்பட்ட பகுதியிலுள்ள பாலத்தில் வெடிப்பு ஏற்பட்டுள்ளதாக சாரதிகள் சுட்டிக் காட்டியுள்ளனர். இப்பாலத்தினூடாக அதிகமான வாகனங்கள் அன்றாடம் செல்கின்றன. இந்நிலையில் பாலத்தில் வெடிப்பு ஏற்பட்டுள்ளமையால் விபத்து ஏற்படலாம் என பயணிகளும் சாரதிகளும் அச்சம் வெளியிட்டுள்ளனர். எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பாலத்தைப் புனரமைக்கும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ம-9-16)





முல்லைத்தீவு கட்டடங்கள் திணைக்களத்தின் பொறியியலாளர் ஐ.சிவலோகநாதனின் பிரிவு உபசார நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம பொறியியலாளர் பி.திவாகரன் மங்கல விளக்கேற்றுவதையும் பிரதி மாகாணப் பணிப்பாளர் எஸ்.சுந்தரகுமார் ஓய்வுபெற்ற பொறியியலாளருக்கு ஞாபகார்த்தமாக அன்பளிப்பு பொருள் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-மிருசுவில் செய்தியாளர்)

## தேவையற்று நடமாடிய யுவதிக்கு விளக்கமறியல்

(முல்லைத்தீவு)

இரவு வேளையில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடிய யுவதியை 14 நாட்கள் தடுப்புக் காவலில் வைக்குமாறும் அத்துடன் அநுராதபுர வைத்தியசாலையில் அனுமதித்து வைத்திய அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்குமாறும் சிறைச்சாலை உத்தியோகத்தருக்கு முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளது.


இரவு வேளையில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் யுவதி ஒருவர் மாங்குளம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

ஆஜர்படுத்தப்பட்ட வேளை, குறித்த யுவதி தான் ஆறுமாதக் குழந்தையின் தாயார் எனவும் தனது கணவர் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவர் எனவும் தன்னிடம் இருந்து கணவரை அவரது தாயார் பிரித்து விட்டார் எனவும் குழந்தையை பராமரிக்க முடியாத நிலையில் அவ்விடத்தில் நின்ற வேளையில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவித்தார்.

வழக்கை விசாரித்த முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் மா.கணேசராஜா குறித்த யுவதியை 14 நாட்கள் தடுப்புக் காவலில் வைக்குமாறும் அத்துடன் அநுராதபுர வைத்தியசாலையில் அனுமதித்து வைத்திய அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்குமாறும் சிறைச்சாலை உத்தியோகத்தருக்கு கட்டளை பிறப்பித்துள்ளார். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துபோர்ட் சு.இராசரத்தினமும் சைவ வித்தியா விருத்திச் சங்கமும்



**எங்கள் கனவுகளுக்கு உயிர் கொடுத்த காப்பகமான சைவ வித்தியா விருத்திச்சங்க நிறுவுநர் இந்துபோர்ட் சு.இராசரத்தினம் அவர்களின் பிறந்த தினம் நேற்றாகும். அவரின் பிறந்ததினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலப் பகுதியில் சைவம் வளர்த்த சான்றோர்களின் வரிசையில் இந்துபோர்ட் சு. இராசரத்தினம் அவர்கள் குறிப்பிடத்தக்கவர்.

இவர் 1884 ஆம் ஆண்டு ஆடி மாதம் 4 ஆம் திகதி இம்மண்ணில் வந்துதித்தார். இவர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஆரம்பக் கல்வியையும் கொல்கத்தா பல்கலைக்கழகத்தில் உயர் கல்வியையும் கற்றார். கொழும்பு சட்டக் கல்லூரியில் பயின்று சட்டத்தரணியான இவர் குடியியல் சட்டத்துறையில் சிறந்து விளங்கினார்.

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் பதில் நீதியரசராக பல தடவை பணிபுரிந்தார். இத்தகைய உயர்ந்த பதவிகளை வகித்த இராசரத்தினம் அவர்கள் இவற்றை உதறிவிட்டு சைவத்தையும் தமிழையும் வளர்க்க தன்னை முழுமையாக அர்ப்பணித்தார்.

ஐரோப்பியர் ஆட்சிக்காலத்தில் சைவக் கல்வி மரபு பெரிதும் பாதிப்படைந்திருந்தது. இந்த நிலையில் சைவக்கல்வி மரபையும் தமிழ்ச் சமூகத்தையும் பாதுகாத்து மேன்மைப்படுத்தும் நோக்கில் இந்து போர்ட் சு.இராசரத்தினம், சேர். பொன் இராமநாதன் ஆகியோரால் 1923ஆம் ஆண்டு மார்கழி மாதம் சைவவித்தியாவிருத்திச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் முகாமையாளராகவும் செயலாளராகவும் இந்துபோர்ட் சு.இராசரத்தினம் அவர்களே இருந்து அதன் இலட்சியங்களை முன்னெடுத்துச் செல்வதில் தன்னை முழுமையாக அர்ப்பணித்தார்.

இவர் சைவத் தமிழ்ப் பாடசாலைகளை யாழ்ப்பாணக் குடாநாட்டின் தீவுப்பகுதி உட்பட வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் போன்ற பகுதிகளிலும் வவுனியா, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களிலும் பதுளை, நாவலப்பிட்டி போன்ற மலைநாட்டுப் பிரதேசங்களிலும் நிறுவினார்.

சைவப்பாரம்பரியங்களைப் பேண வகை செய்யும் நடைமுறையில் 1953 ஆம் ஆண்டு இந்து போர்ட் சு. இராசரத்தினத்தின் பொறுப்பில் 187 அரச நன்கொடை பெறும் பாடசாலைகள் இருந்தன. இவை சைவசமய மக்கள் மீதும் சைவ வளர்ச்சியின் மீதும் அவர் கொண்டிருந்த ஈடுபாட்டை எடுத்துக் காட்டி நிற்கின்றன.

அதனோடு இன்றும் அவை சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் பணியைத் தொடர்ந்து வருகின்றமை மறுக்கமுடியாத உண்மையாகும்.

இந்துபோர்ட் சு. இராசத்தினம் அவர்கள் கிறிஸ்தவ சூழலிலே அநாதரவாகக் காணப்பட்ட சைவப்பிள்ளைகளின் கல்வியிலும் கூடிய கவனம் செலுத்தினார். சைவப்பிள்ளைகள் கிறிஸ்தவ பாடசாலையில் கல்வி பயின்றாலும் அவர்கள் விபூதி தரித்து தமது சைவப்பண்பாட்டிற்கு அமைவாகப் பாடசாலைக்குச் செல்லலாம் என்பதைச்சுட்டி சபையில் கொண்டு வந்த தனது தனியாள் தீர்மானத்தின் மூலம் அதனை நடைமுறைக்கு கொண்டுவந்தார். சைவக் கல்விப் பாரம்பரியத்தை விருத்தி செய்வதன் மூலம் சைவசமயத்தவரின் சமுதாய வளர்ச்சிக்கு வித்திட்ட இந்துபோர்ட் சு. இராசரத்தினம் அவர்கள் அநா தரவான பிள்ளைகளும் சமூகத்தில் பின்தங்கிய மாணவர்களும் முன் னிலைக்கு வருவதற்கான வாய்ப் புக்களை ஏற்படுத்திக் கொடுத்தார்.

இவர் 1930 ஆம் ஆண்டு திருநெல்வேலியில் ஆண்களுக்கும் பெண்களுக்குமான இரு சிறுவர் இல்லங்களையும் பாடசாலைகளையும் உருவாக்கினார். இவை இன்றும் சிறப்பாக இயங்கி வருகின்றமை அவற்றின் சிறப்பை எடுத்துக்காட்டுன்றது. இந்துபோர்ட் சு.இராசரத்தினம் அவர்கள் ஏறக்குறைய 35 ஆண்டுகளாக புரிந்த தொண்டின் பயனாக சைவ வித்தியா விருத்திச்சங்கம், சைவத்தமிழ் உலகுக்கு அரும்பணி புரிந்தது எனலாம். அவரின் பணியின் பெருமையை இந்து போர்ட் சு. இராசரத்தினம் என்ற பெயரே உணர்த்தி நிற்கின்றது. ஈழத்துச் சைவத்தமிழ் மக்களுக்கு அளப்பெருந் தொண்டாற்றிய சைவப்பெருமகன் 1970 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 12ஆம் திகதி இயற்கையெய்தினார்.

பெரியார்கள் வாழ்கிறார்கள்; மறைகிறார்கள்

அவர்கள் வாழ்ந்தபோது விட்டுச்சென்ற

ஏதோவொரு செய்தி மட்டும் இன்றும்

நம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

அந்த வகையில் இந்து மக்களுக்கு இந்துபோர்ட் சு. இராசரத்தினம் அவர்கள் ஏராளமான செய்திகளைச் சொல்லிவிட்டுச் சென்றது மட்டுமல்லாது செய்து காட்டியும் சென்றுள்ளார்.

அவர் கூறி விட்டுச் சென்ற எத்தனையோ விழுமியங்களும் பண்பாடுகளும் இன்றும் நம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

அன்று இந்துபோர்ட் சு.இராசரத்தினம் அவர்கள் கட்டி வளர்த்த சைவ வித்தியா விருத்திச் சங்கமானது இன்று சமய விழுமியங்கள், கல்வி , கலாசாரங்கள், சமயப் பண்பாடுகள், அன்பு , கருணை, இரக்கம், தொழில், ஒழுக்கம் என்பற்றைத் தூண்களாகக் கொண்டு உயர்ந்து நிற்கும் கட்டடமாக விளங்குகின்றது.

தமிழருக்கென்று தனிநாடுமில்லை தமிழர் வாழாத நாடுகளுமில்லை. அந்த வகையில் இந்த உலகிலுள்ள அத்தனை நாடுகளிலும் உள்ள தமிழர் அரங்கில் பேசப்படும் இந்த சைவ வித்தியா விருத்திச் சங்கமானது சான்றோர்களின் சேவைகளாலும் அர்ப்பணிப்பினாலும் ஒவ்வொரு மாணவ , மாணவியரையும் ஆற்றுப்படுத்தி வருகின்றமை சிறப்பானதொன்றாகும்.

**ரா.ரஜீவனா**
**சைவ வித்தியா விருத்திச் சங்க பழைய மாணவி.**
**கிழக்கு பல்கலைக்கழக (புகுமுகம்).**

# 2016 ஆம் ஆண்டு முதல் தமிழ்,சிங்கள மொழிகளில் தேசிய அடையாள அட்டை

(கொழும்பு)

சிங்களவர்களுக்கு 2016 ஆம் ஆண்டு வழங்கப்படும் தேசிய அடையாள அட்டைகளில் தமிழ், சிங்களம் ஆகிய இரண்டு மொழிகளிலும் பெயர் விபரங்கள் இடம் பெற செய் யப்படும் என இலங்கை ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் சரத்குமார தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2016 ஆம் ஆண்டில் இருந்து அனைவருக்கும் இலத்திரனியல் அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் அதற்கான பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

புதிதாக வழங்கப்படும் அடையாள அட்டைகளில் மாத்திரமே இரண்டு மொழிகளில் விபரங்கள் இடம்பெறச் செய்யப்படும். 2016 ஆம் ஆண்டிலிருந்து இந்த பணிகள் முன்னெடுக்கப்படும்.

தற்போது வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாட்டின் ஏனைய பிரதேசங்களில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு வழங்கப்படும் அடையாள அட்டைகளில் இரண்டு மொழிகளில் விபரங்கள் எழுதப்பட்டிருக்கும்.

எவ்வாறாயினும் 2016 ஆம் ஆண்டில் இருந்து அனைவருக்கும் இலத்திரனியல் அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட உள்ளதாகவும் அதற்கான பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். (அ-2)

# சனல் 4 ஆவணப்படத்தை திரையிட்டவர்கள் கைது

(கொழும்பு)

சைனிஸ் அசம்பலி ஹோலில் குறித்த ஆவணப்படம் காட்சிப்படுத்தப்பட்டது. ஆவணப்படத்தை காட்சிப்படுத்தும் நடவடிக்கைகளை ஏற்பாடு செய்த மூன்று ஏற்பாட்டாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த ஆவணப்படம் திரையிடப்படுவதற்கு இலங்கை உயர்ஸ்தானிகரகம் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. இந்த ஆவணப்படத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் போலியானவை எனவும் இலங்கைக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளன எனவும் உயர்ஸ்தானிகரகம் சுட்டிக்காட்டியுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# 13 ஐ திருத்துங்கள் அல்லது தேர்தலை ஒத்தி வையுங்கள்

## ஜனாதிபதியிடம் குணதாச கோரிக்கை

(கொழும்பு)

தெரிவுக்குழு, அரசாங்கத் தரப்பு மாத்திரம் அங்கம் வகிக்கும் தன்னிச்சையான குழு என்று தெளிவாகத் தெரிவதால் அதில் நாட்டை பிரிவினைக்குட்படுத்தக்கூடிய அதிகாரங்களை நீக்கும் முடிவுகளை எடுக்க முடியும் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பு சவ்சிறிபாயவில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

13 ஆவது திருத்தச்சட்டத்தில் வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் திருத்தங்களை ஏற்படுத்த முடியாது போனால், தேர்தலை ஒத்தி வைக்குமாறு அவர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, வடபகுதியின் அபிவிருத்திப் பணிகளை அரசாங்கம் மேற்கொண்டு வருவதால் எதிர்காலத்தில் வடக்கில் தேர்தலை நடத்த வேண்டிய அவசியமில்லை.

நாட்டை பிளவுபடுத்தக்கூடிய விடயங்கள் அரசியல் அமைப்புச் சட்டத்தில் இருந்து நீக்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளதாகவும் அச்சமின்றி வெளிப்படையாக அவர் வெளியிட்டுள்ள இந்த நிலைப்பாட்டை பாராட்டுவதாகவும் ஜனாதிபதி ஆரம்பத்தில் இதனை கூறியிருந்தால் அமைச்சர்கள் தாம் விரும்பியவாறு பேச வாய்ப்பு ஏற்பட்டிருக்காது எனவும் அவர் கூறியுள்ளார். (அ-2)

# பாசிக்குடா கடற்கரையில் தீ; தென்னத் தோட்டங்கள் நாசம்!



வாழச்சேனை பாசிக்குடா முனை முருகன் கோவில் பகுதியில் திடீரென ஏற்பட்ட தீ விபத்தினால் கடற்கரைப்பகுதியின் இரண்டு கிலோ மீற்றர் தூரம் சேதமடைந்துள்ளது. இவ்விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இத் தீயினால் தனியாருக்குச் சொந்தமான தென்னந்தோட்டங்கள் மற்றும் அரச காணிகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக கல்குடா பொலிஸ் நிலைய பொலிஸ் பரிசோதகர் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

தீயை கல்குடா பொலிஸாரும் இராணுவத்தினரும் பொதுமக்களும் இணைந்து கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்ததாக அவர் மேலும் குறிப்பிட்டார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் எந்த ஒரு விடயமும் காரணம் இன்றித் தோன்றுவதில்லை.

~ ஸ்டோவ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# இருவரும் ஒருவரே!

பத்திரிகைத் துறைபற்றி சுவாரஸ்யமான பல கதைகள் உண்டு. அவை செய்திகளாக, விளம்பரங்களாக, ஆசிரியர் தலையங்கங்களாக, காட்டூன்களாக பலவற்றைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

அதிலும் செய்தித் தலைப்புகள் பெற்ற வெகுமதிகள் ஏராளம்.

சிரிக்கவும், சிந்திக்கவும் வைத்த தலைப்புகள் இன்னமும் மக்கள் மனங்களில் நிறைந்து நிற்கின்றன.

ஆசிரியர் தலையங்கம் என்ற விடயத்தில் ஈழநாடு பத்திரிகையின் ஆசிரியராக இருந்த சபாரட்ணம் அவர்கள் எழுதிய ஆசிரியர் தலையங்கங்களுக்கு காத்திரமான மதிப்பு இருந்தது.

நடைமுறை விடயங்களை – மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை எடுத்தியம்புவதில் சபாரட்ணம் ஆசிரியருக்கு நிகர் அவர் என்று கூறும் அளவில் அவரின் ஆசிரியர் தலையங்கங்கள் உயிர்ப்புடையவை.

ஒரு முறை இலங்கைப் பாராளுமன்றத்தில் வரவு செலவுத்திட்ட அறிக்கையை நிதியமைச்சர் வாசித்தார்.

நள்ளிரவு வேளை வரை நீடித்த வரவு செலவுத்திட்ட வாசிப்பில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் தாராளமாக உயர்த்தப்பட்டிருந்தன.

மக்களை பாதிக்கக் கூடிய இந்த வரவு செலவுத் திட்டத்தை ஆசிரியர் தலையங்கத்தில் விமர்சித்த ஈழநாடு பத்திரிகையின் ஆசிரியர் சபாரட்ணம் அவர்கள் **நள்ளிரவில் நட்டம் பயின்றானே!** எனத் தலைப்பிட்டு ஆசிரியர் தலையங்கம் வரைந்தார்.

இதுபோல பல உதாரணங்களைச் சுட்டிக் காட்டலாம்.

பத்திரிகைச் செய்திகள் என்பவற்றுக்கு அப்பால் நடந்த சுவாரஸ்யமான சம்பவம் இது. ஒரு நாட்டில் இரண்டு பத்திரிகைகள் ஒன்றையொன்று கடுமையாக எதிர்த்து எழுதின. இரண்டு பத்திரிகைகளும் ஒன்றையொன்று தாக்கி எழுதிய தன் காரணமாக இரண்டும் ஓகோ என விற்பனையாயிற்று.

இரண்டு பத்திரிகைகள் பற்றியும் ஆய்வுகள் இடம்பெற்றன. அந்த ஆய்வில் அதிர்ச்சியான – மிகவும் சுவாரஸ்யமான விடயம் ஒன்று கிடைத்தது.

அதாவது போட்டியாக – ஒன்றையொன்று தாக்கி எழுதிய இரண்டு பத்திரிகைகளினதும் ஆசிரியர் ஒருவர் என்பதே அதுவாகும்.

போட்டியாக எழுதும் போது அதன் விற்பனை அதிகரிக்கும் என்ற பொறிமுறையை பயன்படுத்தி இரண்டு பத்திரிகைகளையும் விற்பனை செய்த அந்த ஆசிரியரின் தந்திரோபாயத்தை நாம் வேறு இடங்களிலும் பார்க்க முடியும்.

இலங்கையின் இன விவகாரத்தை எடுத்துக் கொண்டால், வடக்கு மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் சிங்களத்தரப்பில் ஒரு பகுதி கடுமையாக எதிர்க்கின்றது. இன்னொரு பகுதி ஆதரிக்கின்றது.

இது தொடர்பில் யாரேனும் ஆராய்ந்தால் வடக்கு மாகாண சபைத் தேர்தலை எதிர்க்கும் பொது பல சேனா, ஜாதிக ஹெல உறுமய, விமல் வீரவன்ச போன்றவர்களுக்கும்,

தேர்தலை ஆதரிக்கும் அமைச்சர்களான ராஜித சேனாரட்ண, வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸ விதாரண போன்றவர்களுக்கும் உசார் கொடுப்பது ஒருவராகவே இருக்கும். இதுதான் எங்கள் நாட்டின் தற்போதைய நிலைமை.

# கிழக்கு மாகாணத்தில் இயல்பு நிலையை ஏற்படுத்துங்கள்

## சுமந்திரன் எம்.பி. அரசிடம் கோரிக்கை

கிழக்கில் விஸ்வரூபமெடுக்கும் படைத்தரப்பினரின் அடாவடித்தனங்களை நேரில் பார்த்து நாம் அதிர்ச்சியடைந்தோம் எனத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், அங்கிருக்கும் படையினரின் அட்டகாசங்களை உடனே நிறுத்தி தமிழ், முஸ்லிம் மக்களை சுதந்திரமாக வாழ அரசாங்கம் வழிவகுக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம் என்ற அமைப்பின் முக்கிய சந்திப்பு கடந்த திங்கட்கிழமை கொழும்பு பார்னஸ் பிளேசில் அமைந்துள்ள அஸாத் சாலியின் அலுவலகத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

நான் கடந்தவாரம் அஸாத் சாலி, விக்கிரமபாகு உள்ளிட்ட பலருடன் கிழக்கு மாகாணத்திற்கு ஒரு முக்கிய விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தேன் அங்கு சென்ற நாம் முதலில் சாய்ந்தமருதில் எமது கூட்டத்தை ஆரம்பித்தோம். அப்போது அங்குவந்த சிலர் எமது கூட்டத்தைக்குழப்பி எமக்கு இடையூறு விளைவிக்க முற்பட்டார்கள். ஆனால் அக்கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கானோர் கலந்துகொண்டதைப் பார்த்த அந்தக் குண்டர்கள் எதுவும் செய்யாது அஞ்சி ஓடிவிட்டார்கள். பின்னர் நாம் ஓட்டமாவடிக்கு கூட்டத்தை நடத்தச் சென்றிருந்தபோது அங்கு சுமார் 10 இற்கும்மேற்பட்ட குண்டர் குழுவொன்று எம்மைத்தாக்க காத்திருந்தது. இது முற்றிலுமாக அரசின் வேலை. அரசுதான் எமக்கு இடையூறு விளைவித்து அங்கிருந்து எம்மைத் துரத்தியடிக்கும் நோக்கில் இந்தக் குண்டர் குழுக்களை ஏவிவிட்டிருக்கின்றது.

அது மட்டுமல்ல கிண்ணியா பிரதேசத்தில் எங்குமே இல்லாதவாறு இராணுவ ஆட்சி தலைவிரித்தாடுகிறது. அங்குள்ள மக்களை சுதந்திரமாக வாழவிடாது படைத்தரப்பினர் புரியும் அட்டகாசங்களை நேரில் பார்த்து நாம் அதிர்ந்துவிட்டோம்.

தமிழ்–முஸ்லிம் மக்களை மிரட்டி அவர்களை நிம்மதியாக இருக்கவிடாமல் அடாவடித்தனங்களைப் புரியும் படைத்தரப்பு உடனடியாக அங்கிருந்து அகற்றப்படவேண்டும். அங்குள்ள நடைமுறைகளைப் பார்க்கும்போது எமக்கு அது புது அனுபவமாக இருக்கின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# தரமான சமையல் எரிவாயு விநியோகிக்கப்படுகின்றது

## லிட்ரோ எரிவாயு நிறுவனம்

(கொழும்பு)

இலங்கையில் தரக்குறைவான சமையல் எரிவாயு எதுவும் விநியோகிக்கப்படவில்லை. எனவே மக்கள் அது குறித்து அச்சமடையத் தேவையில்லை என இலங்கையில் உள்ள பிரதான சமையல் எரிவாயு நிறுவனமான லிட்ரோ எரிவாயு நிறுவனம் கூறியுள்ளது.

தரம் குறைந்த சமையல் எரிவாயு தருவிக்கப்பட்டு சந்தையில் விநியோகிக்கப்பட்டுள்ளதாக ஐ.தே.க செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. குற்றஞ் சாட்டியுள்ளார்.

தரம் குறைந்த எரிவாயு அடங்கிய கப்பலொன்று அண்மையில் இலங்கைக்கு வந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வினவியதற்கு பதிலளித்த லிட்ரோ எரிவாயு நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் பியதாய குடாபாலகே, கப்பலில் ஏற்றப்பட முன்னரும் இலங்கைக்கு எடுத்துவரப்பட்ட பின்னரும் தருவிக்கப்படும் சமையல் எரிவாயு பரீட்சிக்கப்படும்.

கப்பலில் கொண்டு வரப்பட்ட எரிவாயுவை நாம் இலங்கையில் பரீட்சித்த போது ஒரு கொள்கலனில் உரிய தரம் இருக்கவில்லை. எனினும் அவை இலங்கை சந்தையில் பயன்படுத்தக் கூடிய சர்வதேச தரத்தில் இருந்தாலும் முழுக்கப்பலையும் திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுத்தோம்.

குறித்த கம்பனி அந்த சமையல் எரிவாயுவை இலங்கை சந்தையில் விற்க முயன்றாலும் அது பயனளிக்காமல் திரும்பிச் சென்றது என்றார். (அ–2)

# சிங்கள இணையத்தளத்தை ஆரம்பித்தது ம.உ.கண்காணிப்பகம்

மனித உரிமை கண்காணிப்பகம் சிங்கள இணையத்தளம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. உலகின் முன்னணி மனித உரிமை அமைப்புக்களில் ஒன்றான மனித உரிமை கண்காணிப்பகம் சிங்கள இணையத் தளமொன்றை ஆரம்பித்துள்ளது. இலங்கையர்களை இலக்கு வைத்து இந்த புதிய இணையத்தளம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமை தொடர்பான விடயங்களை சிங்கள மொழியில் வழங்குவதன் மூலம் நன்மைகள் ஏற்படும் என மனித உரிமை கண்காணிப்பகம் அறிவித்துள்ளது.

அரசாங்கத்தின் நடவடிக்கைகளை மனித உரிமை கண்காணிப்பகம் கடுமையாக விமர்சனம் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. நடவடிக்கைகளை சிங்கள மொழியில் பகிர்ந்து கொள்வது மகிழ்ச்சி அளிப்பதாக பிராந்தியத்தின் பிரதிப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி தெரிவித்துள்ளார். (அ–2)

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### ரமழானின் சிறப்பு

நபிகள் நாயகம் (ஸல்) நயின்றார்கள். "ரம்ழான் மாதம் வந்துவிட்டால் வானங்களின் (ரஹ்மத்தின்) கதவுகளும் சுவர்க்கத்தின் கதவுகளும் திறக்கப்படுகின்றன. நரகத்தின் வாசல்கள் அடைக்கப்படுகின்றன. சைத்தான்களுக்கெல்லாம் விலங்கிடப்படுகின்றன''. (நூல்கள்: புகாரி, முஸ்லிம்)

ரமழான் என்ற சொல்லிலுள்ள ரமழ் என்பதற்கு கரித்தல், சுட்டெரித்தல் என்று பெயர்.தீய குணங்களை நோன்பு கரித்துவிடுவதால் ரமழான் என்று அழைக்கப்படுகிறது.




## வெள்ளி நற்சிந்தனை

# செவ்வியல் தமிழில் சீர்மியம்

ஐம்புலன்களின் வலிமையை உலகியல் வாழ்க்கையில் பலர் உணர்வதில்லை. இறையுணர்வுடையவர் ஐம்புலன்கள் பற்றிய சிந்தனையோடு இருப்பர். மெய்யடியார்கள் ஐம்புலன்களுக்கு அஞ்சியே வாழ்ந்தனர். கொல்லும் யானையாக மணிவாசகர் ஐம்புலன்களையும் குறிப்பிட்டுள்ளார். தான் அதற்கு அஞ்சி நிலை கலங்கி நிற்பதாகக் கூறுகிறார். ஆனால் வழிபாட்டால் அச்சத்தைப் போக்கலாம் என்று நம்புகிறார். இறைவனிடம் அவர் தன்னுடைய குறையை முதலிலே முன்வைக்கிறார்.

சிறந்த மெய்யடியார்க்கு அன்றி பிறரால் பற்றுதற்கு அரிய இறைவனே! ஒளிவிளங்கும் மாணிக்கம் போன்றவனே சுடும் இயல்புடைய நெருப்புமே தன்னைக்கண்டு அஞ்சிச் சுழலும்படி திருப்பாற்கடலிலே கரிய நிறமுடைத்தாய் எழுந்த கொடிய நஞ்சை உணவு போல உண்டவனே! அப்படி உண்ட போது அதை மிடற்றிலே தங்கச் செய்தமையால் கரிய திருமிடற்றையுடையவனே! என அவர் கூறும் செய்தி இறைவன் கருணையை விளக்கி நிற்கிறது. விழுத்தொண்டர் என மாணிக்கவாசகர் குறிப்பிடும் மெய்யடியார் இறைவனுடைய அணுக்கத் தொண்டர்களாவர். அதாவது தம்முடைய மனதினால் இறைவனை நெருங்கியிருப்பவர்கள். அத்தகைய அடியவர்க்கு ஐம்புலன்களைப் பற்றிய அச்சம் ஒருபோதும் ஏற்படாது. புலன்வழி அவர்கள் செயற்படுவதில்லை. ஆனால் மணிவாசகர் அவ்வாறு விழுத்தொண்டராக வாழவில்லை. எனவே தன்னை இறைவன் நேரில் வந்து காக்கவேண்டுமென்று விண்ணப்பிக்கிறார்.

இறைவன் பாற்கடலிலே தோன்றிய நஞ்சை உண்டமை அவன் பெருங்கருணையை அவர் உணரவைக்கிறது. நஞ்சு மிகக்கொடியது என்பதை விளக்கமாகக் கூறுகிறார். நெருப்பின் வெம்மைகூட முன்னிற்க முடியாத வெம்மை கொண்ட கொடிய நஞ்சு. அதை உணவு போல எடுத்து இறைவன் உண்டபோது எல்லோரும் அவன் கருணையால் உயிர் பிழைத்தனர். கொடிய அசுரர்களுமே காப்பாற்றப்பட்டனர். எனவே தன்னையும் மறுக்காது காப்பாற்ற வேண்டுமென்கிறார்.

வழிபாடு செய்யும் இறையடியவர்களுக்கும் தனக்கும் ஒரு வேறுபாட்டை மணிவாசகர் காட்ட முயல்கிறார். தொண்டர் என்ற பெயருக்கு முன்னால் விழுத் தொண்டர் என்ற அடைமொழியை இணைத்துள்ளார்.

மனதினால் வழிபாடு செய்யும் போது இறைவன் திருக்கோலம் மனதில் முற்றுமாகப் பரந்து நிற்கும். ஐம்புலன்களையும் வழிபாட்டிலே செலுத்துவதற்குத் திருக்கோயில் வழிபாட்டு நடைமுறைகள் பெரிதும் உதவும். ஐம்புலன்களும் இறைவன் நினைவுடன் இருக்கும். இதனை இன்றைய வழிபாட்டாளரும் செயற்படுத்த வேண்டும். பக்தியென்பது ஓர் சிறப்பான உணர்வாகும்.


இறைவன் எம்மை விட்டு நீங்காமலிருப்பவன் என்ற உறுதிப்பாட்டை அது நல்கும். ஆனால் இன்றைய விஞ்ஞான யுகத்தில் மெய்ஞ்ஞானம் பற்றிய தெளிவின்மையே நிலவுகின்றது. அவர்களுக்கு மணிவாசகர் காட்டும் வழி நல்ல தெளிவை ஏற்படுத்தும். இறைவன் அருட்செயல்கள் பற்றிய முன்னோர்களின் நம்பிக்கையை அவர் பாடல்களிலே பதிவு செய்து இருப்பது அவர்களைச் சிந்திக்கவைக்கும். அவை பற்றிய தேடல்களை மேற்கொள்ள வைக்கும். மணிவாசகருடைய குறிப்புக்களைப் பதிவுசெய்துள்ள தொன்மையான நூல்களையும் தேடிக்கற்க வைக்கும்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

அடற்கரி போல் ஐம்புலன்களுக்கு
அஞ்சி யழிந்த வென்னை
விடற்கரியாய் விட்டிடுதி கண்டாய்
விழுத் தொண்டர்க் கல்லால்
தொடற்கரி யாய்சுடர் மாமணியே
சுடுதீச் சுழலக்
கடற்கரி தாயெழு நஞ்சு
அமுதாக்கும் கறைக்கண்டனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி.ஆட்டத்தில் வீழ்ந்தது அவுஸ்திரேலிய அணி





கிளிநொச்சியில் இடம்பெற்ற 19 வயதிற்குட்பட்ட ருவென்ரி 20 துடுப்பாட்டபோட்டியில் இலங்கையின் வடக்குக் கிழக்கு அணி அவுஸ்திரேலிய அணியை தோற்கடித்து வெற்றியீட்டியுள்ளது.

கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில், வடக்குக் கிழக்கு அணிக்கும் அவுஸ்திரேலியா - மெல்பேர்ண் அக்கடமி அணிக்கும் இடையில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 18 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 117 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வடக்குக் கிழக்கு அணி 20 ஓவர்களில் 06 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 118 ஓட்டங்களைப் பெற்று வெற்றியடைந்தது.

இதனையடுத்து வடக்கு கிழக்கு அணியின் விளையாட்டு வீரர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன. அத்துடன் பின்தங்கிய பிரதேசங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு இலங்கை கிரிக்கெட் அணியின் வீரரான குமார் சங்ககாரவின் ஏற்பாட்டில் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

## நியூசிலாந்து வேகப் பந்துவீச்சாளர் ஓய்வு

நியூசிலாந்து அணியின் வேகப் பந்து வீச்சாளர் கிறிஸ் மார்ட்டின் சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். தான் ஓய்வுபெறுவதற்கான சரியான தருணம் இதுவென அவர் தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்து அணி சார்பாக 71 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றிய கிறிஸ் மார்ட்டின் 33.81 என்ற சராசரியில் 233 விக்கெட்டுக்களையும், 20 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 18 விக்கெட்டுக்களையும், 6 ருவென்ரி ருவென்ரி சர்வதேசப் போட்டிகளில் 7 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியிருந்தார்.

நியூசிலாந்து சார்பாக 3ஆவது அதிகூடிய டெஸ்ட் விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய கிறிஸ் மார்ட்டின், அவரது மோசமான துடுப்பாடடத்திற்காக பெரிதாக அறியப்பட்டவர். 104 இனிங்ஸ்களில் துடுப்பெடுத்தாடியுள்ள கிறிஸ் மார்ட்டின், 123 ஓட்டங்களை 2.36 என்ற சராசரியிலேயே பெற்றுள்ளார்.

ஓய்வு பெறுவதற்கான சரியான நேரம் இதுவென உணர்வதாகத் தெரிவித்த கிறிஸ் மார்ட்டின், நியூசிலாந்தை சர்வதேசப் போட்டிகளில் பிரதிநிதித்துவப்படுத்தக் கிடைத்த வாய்ப்புக்களை மிகவும் நேசித்திருந்ததாகத் தெரிவித்த அவர், நாட்டுக்காக விளையாடும் போது தன்னால் முடிந்தளவு திறமையை வெளிப்படுத்தியிருந்ததாகத் தெரிவித்துள்ளார்.


15 ஆண்டுகள் தொழில்முறைக் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றியதன் பின்னர், புதியதொரு சவாலை எதிர்கொள்வதற்கான நேரம் இதுவெனத் தெரிவித்த கிறிஸ் மார்ட்டின், நியூசிலாந்து அணிக்குத் தனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.



## புயலுக்கு அஞ்சாத லிசிக்கி

# புல்லுக்கு அஞ்சுகிறார்

ஆவேசப் புயலான செரீனாவையே சுலபமாக வீழ்த்திய ஜேர்மனி வீராங்கனை சபீன் லிசிக்கி புல்லை கண்டு அஞ்சுவது என்பது ஆச்சரியமான விடயம தான். அதைவிட ஆச்சரியமானது புல் மீது நடந்தாலே இவருக்கு அலர்ஜியாகி விடுமாம்.



விம்பிள்டன் போட்டிகள் புல் தரையில் நடப்பது அனைவரும் அறிந்ததே. அப்படிப்பட்ட களத்தில் தளராத துணிவோடு செரீனாவுடன் மோதி அரை இறுதிவரை முன்னேறியுள்ள லிசிக்கியின் கதை மிகப் பெரிய சுவாரஸ்ய பின்னணிகளைக் கொண்டது.

2006ஆம் ஆண்டு முதல் தொழில்முறை டெனிஸ் போட்டிகளில் பங்கேற்று வருகிறார் லிசிக்கி. ஸ்டெபி கிராப் போன்ற சூப்பரான ஆட்டக்காரர்களைத் தந்த ஜேர்மனிதான் இவருக்கும் தாயகம்.

லிசிக்கிக்கு புல் என்றாலே பயம், அலர்ஜி. புல் தரையில் நடக்கக் கூட மாட்டாராம். அப்படி ஒரு அலர்ஜி. ஆனால புல் தரையான விம்பிள்டன் போட்டியில் கலந்து கொண்டதோடு, செரீனாவையும் வீழ்த்தி உலகையே தன் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்துள்ளார். புல்தரையில் விளையாடுவது என்றாலே ரொம்பத் தயங்குவாராம் லிசிக்கி. அப்படி ஒரு அலர்ஜி புல் மீது.

ஆனால் இப்படி புல்லுக்குப் பயப்படும் லிசிக்கி, எப்படி செரீனாவை விம்பிள்டன் புல் தரையில் புயலென பாய்ந்து பாய்ந்து சாய்த்தார் என்பதுதான் ரசிகர்களின் ஆச்சரியம். தனது விம்பிள்டன் வெற்றிக்கு விம்பிள்டன் டெனிஸ் மீதான காதலே காரணம் என்று லிசிக்கி காரணம் சொலகிறார். எப்படியும் கிண்ணத்தை வெல்லவேண்டும் என்ற கனவுடன் உள்ள எனக்கு புல்லும் தெரியவில்லை.. செரீனா புயலையும் கண்டு அஞ்சவுமில்லை என்கிறார். 2005ஆம் ஆண்டு நடந்த விம்பிள்டன் ஜூனியர் பட்டப் போட்டியில் பட்டம் வென்றவர் லிசிக்கி என்பது குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் பாகிஸ்தான் அணியில் அப்ரிடி

மேற்கிந்தியத் தீவுகளுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொளளவுள்ள பாகிஸ்தான் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது. அறிவிக்கப்பட்டுள்ள குழாமில் ஷகிட் அப்ரிடி மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளார்.

5 ஒருநாள் சர்வதேசப் போட்டிகள், 2 ருவென்ரி ருவென்ரி சர்வதேசப் போட்டிகள் அடங்கிய இத்தொடர் எதிர்வரும் 14ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள நிலையிலேயே இக்குழாம் தொடர்பான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அண்மையில் இடம்பெற்று முடிந்த சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளில் சேர்க்கப்பட்டிருக்காத ஷகிட் அப்ரிடி, உமர் அக்மல் ஆகியோர் இந்த 2 வகையான போட்டிகளுக்கான குழாம்களிலும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் இடம்பெற்றிருந்த சொய்ப் மலிக, கம்ரன் அக்மல், இம்ரான் பர்ஹத் ஆகிய வீரர்கள் இத்தொடருக்கான குழாமில் சேர்க்கப்படவில்லை.

அறிவிக்கப்பட்டுள்ள குழாம்:

ஒருநாள் சர்வதேசப் போட்டி: மிஸ்பா உல் ஹக், நசீர் ஜம்ஷெத், அஹமட் ஷெஷாத், மொஹமட் ஹபீஸ், அசத் சபீக், உமர் அக்மல், ஷகிட் அப்ரிடி, சயீட் அஜ்மல், வகாப் றியாஸ், ஜுனைட் கான், மொஹமட் இர்பான், அசத் அலி, உமர் அமின், மொஹமட் றிஸ்வான், அப்துர் ரெஹ்மான், ஹறிஸ் சொஹைல்

ருவென்ரி ருவென்ரி சர்வதேசப் போட்டி: மொஹமட் ஹபீஸ், நசீர் ஜம்ஷெத், அஹமட் ஷெஷாத், ஹறிஸ் சொஹைல், உமர் அக்மல, ஹமாட் அஸாம், ஷகிட் அப்ரிடி, சயீட் அஜ்மல், சொஹைல் தன்வீர், வகாப் றியாஸ், மொஹமட் இர்பான், அசத் அலி, உமர் அமின், ஸுல்பிகூர் பாபர், ஜுனைட் கான்.



# திருமண பந்தத்தில் இணைகிறார் இந்திய வேகப்பந்து வீச்சாளர்

இந்திய கிரிக்கெட் வீரர் அசோக் திண்டா (வயது 29), கிரிக்கெட் ஆர்வலரும், மென்பொருள் தொழில்நுட்பவியலாளருமான ஸ்ரேயாசி ருத்ரா என்ற பெண்ணை திருமணம் செய்யவுள்ளார்.

இவர்களது திருமணம் கொல்கத்தாவின் புறநகரான சின்சுராவில் எதிர்வரும் 22ஆம் திகதி நடைபெறுகிறது. அதன்பின்னர் 24ஆம் திகதி திருமண வரவேற்பு நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

மேற்கு வங்கத்தைச் சேர்ந்த திண்டா தனது திருமணம் குறித்து கூறுகையில்,

நான்கு ஆண்டுகளுக்கு முன் என் நண்பரின் வீட்டு நிகழ்ச்சிக்கு வந்திருந்தபோது ஸ்ரேயாசியை சந்தித்தேன். முதல் பார்வையிலேயே எங்களுக்குள் காதல் மலரவில்லை.



பின்னர் சில ஆண்டுகள் கழித்து மீணடும் அவரை சந்தித்தேன். அப்போது அவரை எனக்கு ரொம்பப் பிடித்திருந்தது.

ஆனால் இருவரும் கைபேசி எணகளை பரிமாறிக்கொள்ளவில்லை. 3ஆவது முறையாக சந்தித்தபோது தான், ஒரு நண்பர் மூலம் ஸ்ரேயாசியின் கைபேசி எண்ணை வாங்கி அவருடன் பேசி பழக ஆரம்பித்தேன. இதுவரை நான் சந்தித்த பெண்களைவிட ஸ்ரேயாசிக் மிகவும் சாதுவான பெண். அவரை என் தாயாரிடம் அழைத்துச்சென்று அறிமுகம செய்து வைத்தேன்.

அதன்பின்னர் என் உணர்வுகளை அவளிடம் தெரிவித்தேன். முதலில் என் காதலை ஏற்கவில்லை. அவர ஏற்கும்வரை நான் தொடர்ந்து காதலை வெளிப்படுத்தினேன் என்றார்.

இதுவரை 13 சர்வதேச ஒரு நாள் போட்டிகள், 9 ரி20 போட்டிகளில் திண்டா விளையாடியுள்ளார். ஐ.பி.எல். தொடரில் கொல்கத்தா, டில்லி அணிகளில் இடம்பெற்றிருந்தார் தற்போது புனே அணியில் உள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'முட்டாள்' ஆக வெளிநாடு போகப்போகிறீர்களா?

| மேசனின் ஒரு நாள் கூலி | முட்டாளின் சம்பளம் |
|---|---|
| 1500/- | 700/- |

மேசனுக்கு இருக்கும் தொழில் திறனும் அனுபவமுமே அவர் அதிகம் சம்பாதிக்கக் காரணம்

நீங்களும், வெளிநாடு போய் கோப்பை கழுவிச் சொற்பம் சம்பாதிக்காமல் 50,000/- வருமானத்துடன் தொழிற்பயிற்சியைப் பெற்று மாதம் ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேல் உழையுங்கள்

மொத்தச் செலவு
**465,000/- (நாலு இலட்சத்து அறுபத்தையாயிரம்)**
(நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

| 3 மாத இலவச ஆங்கில வகுப்பு | விசேட கடன் வசதிகள் |
|---|---|
| சொகுசுமாடிக் குடியிருப்பில் இலவச தங்குமிடம் | IELTS வங்கிப்பணம் தேவையில்லை - நேரில் விசா அனுமதி |
| SEGi பல்கலைக்கழகத்தில் பயிற்சி | UK, Australia சான்றிதழ்கள் |
| வருமானத்தை உறுதிப்படுத்தும் தொழில் ஒப்பந்தம் (Job Contract) | பயிற்சி நிறைவடைந்து தொழில் பெறும் வரையில் தொடர் சேவை |

வடக்கு மாகாண இளைஞர் யுவதியருக்கு இலவச கல்வி-தொழில் வழிகாட்டல் சேவையை வழங்கிவரும் எங்கள் அர்ப்பணிப்புமிக்க அரவணைப்பின்கீழ் வாருங்கள்...

சிகரம் கல்வி - தொழில் வழிகாட்டி
153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(DAMROவுக்கு முன்னால்)
தொ.பே.: 021 222 00 11
நேரடி: 0773 616 798
மி.அ.:edusikaram@gmail.com web:www.sikaram.lk

(சி-3888)


# இராஜதந்திர நடவடிக்கைக்கே இந்தியா செல்கிறார் பசில்!

## அமைச்சர் ஹெகலிய அறிவிப்பு



அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் கூறப்பட்டுள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை இந்தியாவின் நல்லுறவுக்கு பாதகம் ஏற்படா வண்ணம் நீக்குவது தொடர்பில் இராஜதந்திர பேச்சுவார்த்தைகள் நடத்தவே அமைச்சர் பசில் இந்தியா செல்கிறார் என தகவல் ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று பிற்பகல் தகவல் ஊடக அமைச்சில் நடைபெற்றபோதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் விளக்கம் அளிக்கையில்,

1987ஆம் ஆண்டில் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின்படி அரசியலமைப்பின் 13-வது திருத்தச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களில் மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்பதே அரசின் நிலைப்பாடாகும்.

22 வருட காலம் பழமையான இந்த அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட இந்த அதிகாரங்கள் இன்னும் எந்த மாகாண சபையிலும் அமுல்படுத்தப்படவில்லை காகிதங்களுக்கு மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

மத்திய மற்றும் வட மத்திய மாகாண சபைகள் விரைவில் கலைக்கப்பட்டு வடக்கு உட்பட மூன்று மாகாண சபைகளுக்கும் ஒரே தினத்தில் தேர்தலை நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று அமைச்சர் கூறினார். (எ-11)

### மக்களின்...

நஷ்டங்களுக்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை, சிறிலங்கன் எயார்லைன்ஸ், மிஹின் எயார் போன்ற நிறுவனங்களே பொறுப்புக் கூறவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

அண்மையில் இதனை அமைச்சர் டியூ. குணசேகர ஜனாதிபதி முன்னிலையில் தெரிவித்திருந்தார் எனவும் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார். (எ-11)

# வெற்றி நெருக்கடியில் இந்தியா மே.தீவுகளுடன் இன்று மோதல்



3 நாடுகள் கிரிக்கெட் போட்டி மேற்கிந்தியத் தீவுகள் நடைபெற்று வருகிறது. இந்தப் போட்டியில் 4-வது லீக் ஆட்டம் போர்ட் ஆப் ஸ்பெயினில் இன்று (வெள்ளிக்கிழமை) நடக்கிறது.

இதில் இந்தியா- மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதுகின்றன. இந்திய அணி முதல் 2 ஆட்டத்தில் தோற்றதால் இன்றைய போட்டியில் கண்டிப்பாக வென்றாக வேண்டும் என்ற நெருக்கடியில் உள்ளது.

இந்திய அணி தொடக்க ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகளிடம் 1 விக்கெட் வித்தியாசத்திலும், 2-வது ஆட்டத்தில் இலங்கையிடம் 161 ரன் வித்தியாசத்திலும் தோற்றது.

இறுதிப்போட்டிக்கான வாய்ப்பில் இருக்க வேண்டுமானால் மேற்கிந்தியத் தீவுகள் அணியை வீழ்த்த வேண்டும். இன்றைய ஆட்டத்தில் தோற்றால் வெளியேற்றப்படும்.

இந்திய அணித் தலைவர் தோனி ஆடமால் விலகியது அணிக்கு பாதிப்பே. மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக துடுப்பாட்டத்தின் போது அவருக்கு தசைப்பிடிப்பு ஏற்பட்டது. மேற்கிந்தியத் தீவுகளிடம் போராடி தோற்ற இந்திய அணி இலங்கையிடம் சரண்டர் ஆனது. துடுப்பாட்டமும் மோசமாக இருந்தது. பந்து வீச்சும் சரியில்லை. இன்றைய ஆட்டத்தில் இதை சரி செய்ய வேண்டிய கட்டாயம் உள்ளது.

இந்திய அணியோடு இணைந்த அம்பதி ராயுடுவுக்கு வாய்ப்பு கிடைக்கும். இதேபோல புவனேஸ்வர்குமார் அணிக்கு மீண்டும் திரும்புவார், வீராட் கோலியின் அணித் தலைவர் பதவிக்கு இன்றைய ஆட்டம் கடும் சவாலாக இருக்கும். மேற்கிந்தியத் தீவுகள் அணி 2 ஆட்டத்திலும் வென்றதால் மிகுந்த நம்பிக்கையுடன் உள்ளது. 9 புள்ளிகளுடன் இருக்கும் அந்த அணி இறுதிப் போட்டிக்கு நுழையும் ஆர்வத்தில் உள்ளது.

இந்தியாவை வீழ்த்தி ஹாட்ரிக் வெற்றியை பெற அந்த அணி விரும்புகிறது. காயம் அடைந்த அணித் தலைவர் பிராவோ அணிக்கு மீண்டும் திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இன்றைய ஆட்டம் இன்று இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

### இந். உயர்...

யுள்ளார்.

13-வது திருத்தச்சட்ட விவகாரம் பற்றி ஆராய்வதற்காக இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் எதிர்வரும் 7-ம் திகதி இலங்கைக்கு வரவுள்ளார்.

அதேவேளை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ நேற்று புதுடெல்லிக்கு விஜயம் செயதுள்ளார்.

அமைச்சரது விஜயத்தை முன்னிட்டு இந்திய தூதுவர் வை.கே.சிங்ஹாவும் நேற்று புதுடில்லிக்கு பயணமாகியுள்ளார். (எ-11)

### மாகாணங்...

முதலமைச்சரின் விருப்பத்துடனேயே இடம்பெறும்.

இதன் மூலம் பொலிஸாரின் ஒழுக்கம், சட்டத்தை பாதுகாக்கும் பொலிஸ் மா அதிபரின் அதிகாரம் இல்லாமல் போய்விடும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(எ-11)

### இரு இளைஞர்...

கொலை செய்வதற்கு பாதாள உலக கோஷ்டியினருக்கு ஒன்றரை இலட்சம் ரூபாய் வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்திருந்ததாகவும் ஆரம்பக் கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பணம் கிடைக்காமையினால் அவர்கள் இருவரையும் கொலை செய்வதற்கு மத்துகம பெலவத்தைக்கு கொண்டு சென்று கொண்டிருந்தபோது வீதி ரோந்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொலிஸ் குழு அவர்களை விசாரித்தமையினால் இருவரும் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்த னர்.

சம்பவத்துடன் தொடர்புடைய நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுக்கப் போவதாகவும் தெரிவித்தனர். (எ-11)

### பிரபாகரனை பாது...

அணி வகுப்பு மரியாதையின் போது அவர் மீது தாக்குதல் நடத்தியவரே ரோஹண விஜித முனி ஆவார். இவர் இங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

அன்று ஜெனரல் கொப்பேகடுவ தலைமையில் இடம்பெற்ற வடமராட்சி இராணுவ நடவடிக்கையின் போது,

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டார்.

இதன்போது பிரபாகரனைப் பாதுகாக்குமாறு அன்றைய தமிழ்நாட்டு முதலமைச்சர், இந்திய பிரதமர் ராஜீவ் காந்திக்கு கடும் அழுத்தம் கொடுத்தார்.

இந்த அழுத்தம் காரணமாகவே பிரபாகரனை பாதுகாப்பதற்காக 13ஆவது திருத்தம் ராஜீவினால் ஏற்படுத்தப்பட்டது.

13 மூலம் இந்தியா எமது நாட்டை ஆக்கிரமித்தது இதுதான் உண்மை.

எனவே வட மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படக்கூடாது.

அன்று மாகாண சபை முறைமையை எதிர்த்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் இன்று தேர்தல்களில் போட்டியிடுகின்றனர். உறுப்பினர்களாக, அமைச்சர்களாக பதவி வகிக்கின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் இன்று சிங்கள முதலமைச்சர் இல்லை முஸ்லிம் காங்கிரசுடன் ஒப்பந்தம் செய்து முஸ்லிம் ஒருவரே முதலமைச்சராக இருக்கின்றார்.

இதன்மூலம் சிங்கள மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

சிங்கள பௌத்த மக்களின் வாக்குகளினாலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதவி வகிப்பதோடு அரசாங்கத்திற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மையையும் கிடைத்தது.

எனவே இந்தியாவின் பேச்சைக் கேட்க அவசியமும் இல்லை. வட மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டிய தேவையும் இல்லையென்றும் அவர் தெரிவித்தார்.(எ-11)

## மரண அறிவித்தல்

### செல்லப்பா கந்தையா

கோப்பாய் வடக்கை பிறப்பிடமாகவும் 119, இரத்தினபுரம் கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட செல்லப்பா கந்தையா அவர்கள் 04-07-2013 அன்று காலமானார்.

அன்னார் காலம்சென்றவர்களான செல்லப்பா-செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஆச்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும், புஸ்பராணி (இரத்தினபுரம்), சிறிகாந்தபாலா (சிறி) (கிளி.ம.வி ஊழியர்) (இரத்தினபுரம்), தர்மசிறிபாலா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தகப்பனும், பரமசாமி (ஓய்வுபெற்ற கரைச்சி கூட்டுறவு சங்க முகாமையாளர் ), பாமினி, கவிதா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கனகேஸ்வரன்-சங்கீதா (சுவிஸ்), சிறிபாஸ்கரன்-பிரகீதா (இந்தியா), நிரோசன் (கனடா), தர்சி, துரோணன், யதுர்சன், சாருஜன், ஜீவிதன் (ஜேர்மனி), பிரசன்ஜா (ஜேர்மனி) ஆகியோரின் பேரனும், சௌமியா சிந்துயா, சானுயா, பிருந்தாபன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 05-07-2013 இன்று பிற்பகல் 1 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

119, இரத்தினபுரம், கிளிநொச்சி. தகவல்: குடும்பத்தினர்

(3185)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

பெரிய பளை பளையில் A9, Road இருந்து 500 மீற்றர் தூரத்தில் 8 3/4 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

**தொடர்பு: நிமாலினி**
0776872945

(3172)


# ஒருங்கிணைப்புக் குழு...

ருந்தும் 3 நபர்களை உள்ளடக்கிய 15 பேரைக்கொண்ட கூட்டமைப்புக்கான ஒருங்கிணைப்புக் குழுவை நியமிப்பதென ஒருமித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

‘முட்டாள்’ ஆக வெளிநாடு போகப்போகிறீர்களா?
19ஆம் பக்கம் பார்க்க...

இந்த ஒருங்கிணைப்புக் குழுவுக்கு மேலதிகமாக நிதிக்குழுவையும், தேர்தல் குழுவையும் நியமிப்பதற்கும் உடன்பாடு காணப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தன், செயலாளர் மாவை. சேனாதிராஜா, சுமந்திரன் ஆகியோரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் அதன் செயலாளர் நாயகம் ஆனந்த சங்கரியும், ஈ.பி.ஆர்.எல்.எப் இன் சார்பில் அதன் செயலாளர் சுரேஸ் க.பிறேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோரும், புளொட் அமைப்பின் சார்பில் அதன் தலைவர் சித்தார்த்தன், பவான், ராகவன் ஆகியோரும், ரெலோ அமைப்பின் சார்பில அதன் தலைவர் செல்வம அடைக் கலநாதன், செயலாளர் கென்றிமகேந்திரன், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெனா, முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினர் சிறிகாந்தா ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ஏ-11)


## 31ஆம் நாளில் இனியதாய் நினைவலைகள்...

தோற்றம் 1939 . 10 . 26



மறைவு 2013 . 06 . 06

### அமரர் புதுநாயகம் தேவராசா அவர்கள்

“மாதமொன்று கடந்தாலும் மாறாது சோகமம்மா”

2013.07.05, வெள்ளிக்கிழமையன்று காலை 6.00 மணிக்கு கீரிமலை புனிதத் தீர்த்தக் கரையில் நடைபெறும் அமரரின் அந்தியேட்டி நிகழ்விலும் 2013.07.07, ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய மற்றும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.

இந்திரன் அம்மன் கோவிலடி,
துன்னாலை வடக்கு, கரவெட்டி.

இங்ஙனம்,
குடும்பத்தினர்



அழைப்பின் குரல் கேட்டேன் - என்
ஆண்டவர் என உணர்ந்தேன்.....

## மரண அறிவித்தல்

### திருமதி இதயராஜன் லூமினா (நிஷா)



பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் நெதர்லாந்தை (கொலன்ட்) வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இதயராஜன் - லூமினா (நிஷா) அவர்கள் 25.06.2013 செவ்வாய்க்கிழமை அன்று நெதர்லாந்தில் இறைபதம் அடைந்துள்ளார்.

இவர் இதயராஜன் அவர்களின் அன்பு மனைவியும் திரு.திருமதி செபமாலைமுத்து (சந்திரன்) அவர்களின் பாசமிகு மகளும் திரு. திருமதி மரியானந்த தேவராசா அவர்களின் மருமகளும் அன்ரன் பிறேம்குமார் (சுவிஸ்), றெஜிறேமஸ், மேரி தர்சிகா மேரி நிறோசிகா ஆகியோரின் அன்புச் சகோதரியும் மதனா, அமுதன்ஆகியோரின் மைத்துனியும் றொசான், றொக்சன் ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நெதர்லாந்தில் இருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு 06.07.2013 சனிக்கிழமை காலை 10 மணி அளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு பருத்தித்துறை புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பருத்தித்துறை கோரியடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப் படும்.

இந்த தவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு அறியத் தருகின்றோம்.

தகவல்: ச.செபமாலை முத்து
(சந்திரன்) குடும்பத்தினர்
தொ.பே: 021 2056 063,
0778098[illegible]

‘அன்பகம்’ மில் எதிர் ஒழுங்கை
4 ஆம் குறுக்குத் தெரு வீதி,
பருத்தித்துறை.

(3177)



## தொழிற் பயிற்சிகள்

**Mobile Phone Repairing**
சகல Phone களின் Hardware, Software கள் செயன்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும் (காலம் 3 மாதம்)

**Electronics**
றேடியோ, ரெலிவிசன் DVD மற்றும் இலத்திரனியல் பொருட்கள் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும் (காலம் 10 மாதம்)

**Air - Conditioning**
சகல குளிர்சாதனங்களும் திருத்தும் முறை, பராமரிக்கும் முறை பயிற்சியளிக்கப்படும். (காலம் 6 மாதம்)

**Electrical Wiring** (காலம் 3 மாதம்)
வீட்டுமின்சுற்று வேலைகள் Single Phase, Three Phase Wiring, வீட்டு மின்சார பொருட்கள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்.

**Rewinding**
மின்விசிறி, Motor, Transformer, Three Phase Motor கள் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும். (காலம் 6 மாதம்)

பயிற்சிகள் ஆரம்பம் - 06.07.2013
மேலதிக விபரங்களுக்கு

**JAFFNA TECHNICAL INSTITUTE**
No.23 பலாலி வீதி, (அப்பலோ ஆஸ்பத்திரி முன்பாக)
யாழ்ப்பாணம்.
T.P:- 0778249949

குறிப்பு:- 01, வெளிமாவட்ட மாணவர்களுக்கு தங்குமிடவசதிகள் செய்து கொடுக்கப்படும்.
02, பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படுவதுடன் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றுக் கொடுக்கப்படும்.

(C-3885)



## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

**Spoken English with Grammar** 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

**Diploma in English** 2 1/2 Months

* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam,
Vavuniya. Tel: 024 324 5287

Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074

Evening & Weekend Classes for Employees also available..

Batch1 : 06.7.2013
Batch2 : 08.7.2013
Batch3 : 13.7.2013
Batch4 : 15.7.2013



## Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன்-Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து- Dutch (டச்) புதிய பிரிவுகள் இவ்வாரம் ஆரம்பமாகின்றன.

✶ French, Italian , English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.

✶ வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.

✶ Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.

✶ Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

**Vivekananda Academy**
221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.
Tel: 0213216928, 0774842464

(Gov. Reg.No: W/A 76795)

(C-3882)



## Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ்
### பொதி விநியோக சேவை

விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு -
0212224040 / 0772931062

(C-3886)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.07.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org